Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆனி 27 வெள்ளிக்கிழமை (11.07.2014) பக்கங்கள் 20 ஓசை – 283

## மக்களின் வாழ்வுக்கு வளம் சேர்க்கும் மகிந்த சிந்தனை செயற்றிட்டம்

### வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர்கள் மத்தியில் அமைச்சர் டக்ளஸ்



மகிந்த சிந்தனை என்பது இறுக்கமான கட்டிப் பொருளல்ல. அது வளர்த்தெடுக்கப்படக் கூடிய செயற்பாட்டின் ஒரு கொள்கைத் திட்டமாகும் என்பதுடன் பாதிக்கப்பட்ட மக்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதை நோக்காக கொண்டதாகுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் மாவட்ட வாழ்வின் எழுச்சி திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் சமூக மட்ட தலைவர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது அரசாங்கத்தின் கொள்கையான மகிந்த சிந்தனை

19 ஆம் பக்கம் பார்க்க



# ஆஸி.யுடன் இணைந்து புதிய செயற்பாட்டுக்குழு

## ஆட்கடத்தலை தடுக்கும் வியூகம்

(கொழும்பு)

நாடு கடந்த குற்றச்செயல்களைக்கட்டுப்படுத்தும் நோக்கில் இலங்கையும் அவுஸ்ரேலிய அரசும் இணைந்து செயற்பாட்டுக்குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத குடியேற்றவாசிகள் கடத்தல்களுக்கெதிரான சட்டரீதியான ஒத்துழைப்புகள் தொடர்பில் 2009 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9 ஆம் திகதி இலங்கைக்கும் அவுஸ்ரேலியாவுக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

அதேபோல் இப்போது ஆட்கடத்தல் மற்றும் நாடு கடந்த குற்றச்செயல்கள் பற்றிய கூட்டு செயற்பாட்டுக் குழுவொன்றும் கடிதப் பரிமாற்றங்கள் ஊடாக இலங்கைக்கும் அவுஸ்ரேலியாவுக்கும் இடையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் ஆட்கடத்தல்களை முறியடிப்பது தொடர்பான விடயங்கள் பற்றி இரு நாட்டு அரசாங்கங்களினதும் அதிகாரிகள் வருடாந்த அடிப்படையில் சந்தித்து கலந்துரையாடவும் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நிலையியற் கட்டளையின் கீழ் ஜனநாயக தேசியக் கூட்டணி எம்.பி. அநுரகுமார

19 ஆம் பக்கம் பார்க்க

## மாணவர்கள் திரண்டு மன்னாரில் மறியல்

மன்னார்-உயிலங்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை மாணவர்கள் நேற்றுக்காலை தனியார் பேருந்து ஒன்றை இடைமறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமையினால் மன்னார்-உயிலங்குளம் பிரதான வீதியில் சிறிதுநேரம் போக்குவரத்து தடைப்பட்டிருந்தது.

மேற்படி தனியார் பஸ் வண்டியானது, பாடசாலை மாணவர்களை கடந்த சில தினங்களாக ஏற்றாமல் செல்வதனை கண்டித்தே இவ்வீதி மறியல் மேற்கொள்ளப்பட்டதாக பாடசாலை

19 ஆம் பக்கம் பார்க்க

## மலேசிய அரசியல்வாதிக்கு புலிகளுடன் தொடர்பு?

### அந்தநாட்டு பொலிஸாரிடம் முறைப்பாடு

மலேசியாவின் பினாங்கு மாநில துணை முதலமைச்சர் கலாநிதி பி. ராமசாமிக்கு விடுதலைப் புலிகளுடன் தொடர்புள்ளதாக குற்றம் சுமத்தி அந்நாட்டு பொலிஸில் இரண்டு முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. விடுதலைப் புலிகளின் ஆதரவு காரணமாக ராமசாமி தைரியமாக இருந்து வருவதாக ஒரு முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு மலேசிய அரசசார்பற்ற நிறுவனங்கள், பினாங்கு

19 ஆம் பக்கம் பார்க்க

## விசாரணையின்றி அகதிகளை நாடு கடத்தல் பிரிட்டிஷ் நீதிமன்றம் தடை விதிப்பு

பிரித்தானியாவில் இருந்து இலங்கை அகதிகள் நாடுகடத்தப்படுவதற்குக் காரணமாக அமைந்த டீ.எப்.ரி. எனப்படும் விரைவான தடுத்துவைப்பு கொள்கை சட்ட விரோதமானது என்று பிரித்தானியாவின் மேல் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

அகதிகளை தடுத்து வைத்து விரைவாக நாடுகடத்தும் நோக்கிலான இந்தக் கொள்கைக்கு எதிராக தொடரப்பட்டிருந்த வழக்கு நேற்று முன்தினம் மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் போது இந்த சட்டத்துக்கு எதிராக வாதங்களை ஏற்றுக் கொண்ட நீதிபதி, குறித்த சட்டம் அகதிகளின் உரிமைகளை மீறும்படி அமைந்துள்ளமையை ஏற்றுக் கொண்டார். இந்த அறிவிப்புத் தொடர்பில் பிரித்தானியாவில் உள்ள அகதிகளுக்கு ஆதரவான சட்டத்தரணிகள் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளனர். இதன் மீது இலங்கை உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த அகதிகள் துரிதமாக விசாரணை இன்றி நாடுகடத்தப்படும் அபாயத்தில் இருந்து காப்பாற்றப்பட்டிருப்பதாக சட்டத்தரணி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## ஆஸி. அமைச்சர் கோத்தாவுடன் சந்திப்பு



அவுஸ்ரேலிய குடியகல்வு மற்றும் எல்லை பாதுகாப்பு அமைச்சர் ஸ்காட் மோரிசன் தலைமையிலான குழுவினர் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவை நேற்றுக் காலை பாதுகாப்பு அமைச்சில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இச்சந்திப்பில் இரு தரப்பு உறவுகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அவுஸ்ரேலியாவுக்கான ஓய்வு பெற்ற உயர்ஸ்தானிகர் அட்மிரல் திஸர சமரசிங்கவும் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டார்.



நயினை நாகபூஷணிக்கு இன்று இரதோற்சவம்

## ஒரு மில்லியன் அமெரிக்க டொலருடன் யாழ்.நகரில் நால்வர் கைது

(யாழ்ப்பாணம்)

சுமார் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் பணநோட்டுக்களை தம்வசம் வைத்திருந்த நான்கு பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

1 மில்லியன் அமெரிக்க டொலரை இலங்கை ரூபாவாக மாற்றுவதற்கு முயன்ற போதே இந்த 4 பேரையும் யாழ்.பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ். ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த நபர் ஒருவருக்குக் கிடைத்த 1 மில்லியன் அமெரிக்க டொலரினை யாழ். றக்காவீதிப்பகுதியைச் சேர்ந்த நபர் மற்றும் டேவிட் வீதியைச் சேர்ந்த மூவரும் இணைந்து மாற்றுவதற்கு முயன்றுள்ளனர்.

அதன்போது, டேவிட் வீதியைச் சேர்ந்த நபர் ஒருவர் தனக்கு தெரிந்த நபரான புத்தளத்தைச் சேர்ந்த நபரிடம் மாற்றுவதற்கு முயன்றுள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## இராணுவ வாகனம் மோதியது பேருந்துடன்

### 20 பேர் காயம்

அவிசாவளை - கொழும்பு பிரதான வீதியில் மினிகன்னாவ பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் 20 பேர் காயமடைந்துள்ளனர்.

கொழும்பிலிருந்து தியத்தலாவ நோக்கி பயணித்த இராணுவ டிப்பர் வாகனம் மற்றும் மொனராகலவிலிருந்து கொழும்பு நோக்கிப்பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ் ஒன்றும் மோதியதில் இவ் விபத்து நேர்ந்துள்ளது.

இந்த விபத்தின்போது.

19 ஆம் பக்கம் பார்க்க

## மொழி பெயர்ப்புக் கற்கை நெறிக்கான தகுதிகாண் பரீட்சையைப் பிற்போடல்

13.7.2014 (ஞாயிறு) 9 மணி முதல் 12மணி வரை நடாத்தப் படவிருந்த மேற்படி போட்டிப் பரீட்சை தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது. புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்

பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்

(C/3735)

## யாழ்ப்பாணம் மாநகர சபை வீதிக்கு பெயர் சூட்டல்

பொது மக்களின் வேண்டுகோளிற்கிணங்க நல்லூர் வைமன் வீதியில் காணப்படும் 50/.......... என்னும் இலக்கங்களைக் கொண்ட ஒழுங்கைக்கு "ஓம் நமசிவாய" எனப் பெயர் சூட்டப்படவுள்ளமையால் இதற்கான பொதுமக்களின் கருத்தினை எதிர்பார்க்கின்றோம். மக்களின் கருத்துக்களை அபிப்பிராயங்களை இன்றிலிருந்து 14 நாட்களுக்குள் ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

திருமதி யோ.பற்குணராசா,
முதல்வர் மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

(C/3736)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்-இலங்கை முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடம்

### மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா கற்கை நெறி-2014

முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடத்தினால் நடாத்தப்படும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

* கற்கைநெறிக்கான காலம்- ஒரு வருடம் (வார இறுதி நாட்கள்)
* கற்பிக்கப்படும் மொழி- தமிழ்
* விண்ணப்பிப்பதற்கான தகுதி- க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் 03 பாடங்களிலும் சித்திகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

கற்கைநெறிக்கான கட்டணம்- ரூபா 29,000/=
கட்டண விபரம்

| | |
|---|---|
| பதிவுக்கட்டணம் | - 1,500.00 |
| கல்விக் கட்டணம் | -22,500.00 |
| பரீட்சைக் கட்டணம் | - 5,000.00 |
| மொத்தம்- | 29,000.00 |

விண்ணப்ப முடிவுத் திகதி- 31.07.2014
விண்ணப்பிப்பதற்கான முறை

விண்ணப்பப் படிவத்திற்கான கட்டணமாக ரூபா 250 ஐ செலுத்தி முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட பீடாதிபதி அலுவலகத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்திசெய்த விண்ணப்பப்படிவங்களைத் தபால்மூலம் அனுப்புவதாயின் இணைப்பாளர், சந்தைப்படுத்தல் முகாமைத்து டிப்ளோமா கற்கைநெறி, முகாமைத்துவக் கற்கைகள் வணிக்பீடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். எனும் முகவரிக்கு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் மனிதவள முகாமைத்துவக் கற்கை நெறிக்கான விண்ணப்பம எனக் குறிப்பிட்டு அனுப்பி வைக்கவும்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

(C/3737)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்-இலங்கை முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடம்

### சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா கற்கை நெறி-2014

முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடத்தினால் நடாத்தப்படும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

* கற்கைநெறிக்கான காலம்- ஒரு வருடம் (வார இறுதி நாட்கள்)
* கற்பிக்கப்படும் மொழி- தமிழ்
* விண்ணப்பிப்பதற்கான தகுதி- க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் 03 பாடங்களிலும் சித்திகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

கற்கைநெறிக்கான கட்டணம்- ரூபா 29,000/=
கட்டண விபரம்

| | |
|---|---|
| பதிவுக்கட்டணம்- | 1,500.00 |
| கல்விக் கட்டணம் - | 22,500.00 |
| பரீட்சைக் கட்டணம்- | 5,000.00 |
| மொத்தம்- | 29,000.00 |

விண்ணப்ப முடிவுத் திகதி- 31.07.2014
விண்ணப்பிப்பதற்கான முறை

விண்ணப்பப் படிவத்திற்கான கட்டணமாக ரூபா 250 ஐ செலுத்தி முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட பீடாதிபதி அலுவலகத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்திசெய்த விண்ணப்பப்படிவங்களைத் தபால்மூலம் அனுப்புவதாயின் இணைப்பாளர், சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா கற்கைநெறி, முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். எனும் முகவரிக்கு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் சந்தைப்படுத்தல் முகாமைத்துவக் கற்கை நெறிக்கான விண்ணப்பம எனக் குறிப்பிட்டு அனுப்பி வைக்கவும்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

(C/3738)

# கேரதீவு-தச்சன்தோப்பு வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கேரதீவு வீதியில் (ஏ-30) தச்சன் தோப்புக் கிராமத்தினூடாகச் செல்லும தச்சன்தோப்பு வீதி கடந்த பல வருடங்களாகத் திருத்தப்படாமல் சேதமடைந்து குன்றும் குழியுமாகக் காணப்படுவதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பிரதான இவ் வீதியைத் திருத்தித் தருமாறு பல தடவைகள் சம்பந்தப்பட் டவர்களுக்கு முறையிட்டும் இதுவரை எவ்வித பலனும் கிடைக்கவில்லை.

மழைகாலம் ஆரம்பித்தால் இவ் வீதியால் மக்களும் வாகனங்களும் செல்ல முடியாது எனவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ் வீதியால் செல்லும் மக்கள் மிகவும் சிரமப்பட்டே பிரயாணம் செய்வததுடன் இவ்வீதியால் வரும் வாகனங்களும் விபத்துக்குள்ளாகின்றன. அத்துடன் மக்களும் காயமடைந்து வைத்திய சாலைகளிலும் சிகிச்சை பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## யாழ்ப்பாணம் மாநகரசபை

### நல்லூர் கந்தசுவாமி கோயில் மகோற்சவ கால தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்-2014

நல்லூர் கந்தசுவாமி கோயில் மகோற்சவ காலத்தில் தற்காலிக கடைகள் அமைப்பதற்கான நிலையங்களை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் 14.07.2014- 25.07.2014 ஆம் திகதி வியாழன் முற்பகல் 10 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப்படிவக் கட்டணம் 570/= (வற் வரி,தே.க.வரி உள்ளடங்கலாக)
கேள்வி படிவம் விநியோகிக்கும் திகதி - 14.07.2014-24.07.2014
பிற்பகல் - 2.00 மணிவரை
கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல் - 25.7.2014 முற்பகல் 10.00 மணிவரை
கேள்வி திறத்தல் - 25.07.2014 முற்பகல் 10.30 மணிக்கு
துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையங்களுக்கான மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் - 10,000\=
ஏனைய கடைகளுக்கான மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம்- 2,000/=

விண்ணப்பப்படிவங்கள் யாவும் ஆணையாளர், மாநகரசபை என முகவரியிடப்பட்டு இவ் அலுவலகத்தில் வைக்கப்படும் கேள்விப்பெட்டியினுள் 25.07.2014 முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும். கேள்வியில் சித்தி பெற்றவர் கேள்வித்தொகையினை 31.07.2014 பிற்பகல் 2.30 மணிக்கு முன்னர் முழுமையாக செலுத்தி குறிக்கப்பட்ட இடத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை மாநகராட்சி மன்ற நானாவித இறைவரிப்பகுதியில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்வதுடன் வரைபடத்தையும் பார்வையிடலாம்.

கேள்விச்சபையின் முடிவே இறுதியானது.

குறிப்பு.

01). கோவில் சுற்றாடலில் உள்ள நிரந்தரக்கடைகளும் உற்சவ காலத்திற்கு மாநகரசபையால் வழங்கப்படும் கடைகளும் தவிர வேறு கடைகள் தனியார் காணிகளிலோ அல்லது தனிப்பட்ட இடங்களிலோ சபையின் அனுமதி இன்றி திறந்து வியாபாரம் நடாத்தவும் விளம்பரங்கள், விளம்பரப்பதாதைகள் அமைப் பதற்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது என்பதனையும் அறியத்தருகின்றேன்.

02. கோவில் சுற்றாடலில் உள்ள நிரந்தரக் கடைகள் வியாபார மாற்றம் செய்வதாயின் அதற்கான உரிமத்தை யாழ்ப்பாண மாநகர சபையிலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

03. ஆகக்கூடிய தொகையாக துவிச்சக்கரவண்டிக்கு ரூபா 5/= உம் மோட்டார் வண்டிக்கு ரூபா 10 உம் மட்டுமே அறவிட வேண்டும்.தலைக்கவசத்திற்கு பணம் அறவிடப்படலாகது.

04. உணவு கையாளும் நிலையங்கள் மேலதிகமாக சுகாதார வைத்திய அதிகாரியினால் வழங்கப்படும் படிவத்தினை பூர்த்தி செய்து பொதுசுகாதார பரிசோதகரினால் உறுதிப்படுத்திய பின்னர் விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

05. நல்லூர் உற்சவகால வியாபார அனுமதி பெற்ற வியாபாரிகள் மாத்திரம் உள்நுழைய அனுமதிக்கப்படுவார்கள் ஏனைய வியாபாரிகள் எக்காரணம் கொண்டும் உள்நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்
10.7.2014

திருமதி.யோகேஸ்வரி பற்குணராஜா
முதல்வர்
மாநகரசபை
யாழ்ப்பாணம்.

(C/3739)

## பொதுக்கூட்டம்

வட்டுக்கோட்டை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க விஷேட பொதுக் கூட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வட்டுக் கோட்டை பால் கொளவனவு விற்பனை நிலையத்தில் நடைபெறவுள்ளது.

க.சி.தவராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் கால்நடை உற்பத்திச் சுகாதாரத் திணைக்கள உதவிப்பணிப்பாளர் திருமதி டாக்டர் வ.அமிர்தலிங்கம் வலி.மேற்கு பிரதேச செயலர் ஏ.சோதிநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## உதைபந்தாட்டப் போட்டி

யாழ்.மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர் இராஜதுரை ஞாபகார்த்த உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் மாகாண மட்ட போட்டி இன்று காலை 9 மணிக்கு மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் 16 பாடசாலைகள் பங்குபற்றவுள்ளதுடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்ளவுள்ளார்.


## டயானா பிளாஸ்ரிக்

*ரீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06
கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.



## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2544 திகதி 09-07-2014

ஆங்கில எழுத்து: X

வெற்றி எண்கள்: 06 14 52 55

போனஸ் இல: 36

ஜக்பொட் பரிசு ரூ.15,745,400/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 230829 | 20/- | 4,616,580/- |
| 2 இல | 16640 | 100/- | 1,664,000/- |
| 3 இல | 348 | 1,000/- | 348,000/- |
| 4 இல | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 9211 | 40/- | 368,440/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 639 | 1,000/- | 639,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 17 | 10,000/- | 170,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 15,745,400/- | - |
| 1 இல + போனஸ் இல | 11019 | 100/- | 1,101,900/- |
| 2 இல + போனஸ் இல | 516 | 500/- | 258,000/- |
| 3 இல + போனஸ் இல | 05 | 100,000/- | 500,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 437 | 200/- | 87,400/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 17 | 1,500/- | 25,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 01 | 150,000/- | 150,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 269681 | | 11,928,820/- |

பச்சை நிற டிக்கட்டுகள் 2014.07.12 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ. 16,375,850/-

வளமான வாழ்வுக்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

356, [illegible] கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

(C/3739)

# அச்சுவேலி பேருந்து நிலையத்துக்கு விமோசனம் கிடைக்காதா?

## ஏக்கத்துடன் காத்திருக்கும் பொதுமக்கள்

(அச்சுவேலி)

அச்சுவேலி பேருந்து தரிப்பிடப் பகுதி சமாந்தரமற்ற நிலையில் காணப்படுவதால் அப்பகுதியில் மழைகாலங்களில் வெள்ளம் தேங்கி நிற்கிறது. இதனால் பயணிகள் தாம் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்குவதாக விசனம் தெரிவித்துள்ளனர். அதுமட்டுமன்றி அச்சுவேலி பேருந்து நிலையத்துக்கு விமோசனம் கிடைக்குமா? எனவும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

குறித்த பகுதியை வீதி புனரமைப்பின் போது பணியாளர்கள் அதனைச் சீர் செய்யாது விட்டமையின் காரணமாக இப்பகுதி குன்றும் குழியுமாக மக்கள் போக்குவரத்துக்கு இடையூறாகக் காணப்படுகின்றது.

அதுமட்டுமன்றி இந்தப் பகுதியில் பேருந்துகள் தரித்து நின்று செல்வதால் தரை மேலும் சமச்சீரற்றுக் காணப்படுகிறது. இதனால் பயணிகள் பேருந்தில் ஏறுவதற்கு பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகவும் விபத்துக்களுக்கு மக்கள் முகம் கொடுப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே இப்பகுதியைச் சீர் செய்து பயணிகளின் சீரான போக்குவரத்திற்கு உதவுவதோடு, ஏனைய வாகன சாரதிகளும் பயன்படுத்தும் இப்பகுதியினை வெகுவிரைவில் புனரமைத்துத் தருமாறு பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (85)

# சென்ஜோண்ஸ் கல்லூரியின் புகைப்படக் கண்காட்சி



(யாழ்ப்பாணம்)

சென்ஜோண்ஸ் கல்லூரியின் புகைப்படக் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட புகைப்படக் கண்காட்சி கடந்த செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி இன்றுவரை நடைபெற்றுவருகின்றது.

மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை அதிகரிக்கச் செய்யும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்ட அந்தக் கண்காட்சியில் 60 இற்கும் மேற்பட்ட புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இதனை அதிகளவிலான மாணவர்கள் பார்வையிட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இக்கண்காட்சியில் சென்ஜோண்ஸ் கல்லூரியின் அதிபர் ஜானப்பொன்ராசா மற்றும் சென்ஜோண்ஸ் பிரிவின் அக்கடமி அதிபர் உட்பட பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

அதுமட்டுமன்றி கண்காட்சியைப் பார்வையிட்டுச் செல்வோர் தமது அபிப்பிராயங்களைப் பதிவு வெய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் புகைப்படக் கழகத்தில் பலர் புதிதாக இணைந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (எஸ்.பி)

# தீவகவலய பாடசாலை அதிபர்களுக்கு கல்வி மேம்பாடு தொடர்பான செயலமர்வு

(வேலணை)

தீவக கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்களுக்கிடையிலான விசேட கல்விமேம்பாடு தொடர்பான செயலமர்வு எதிர்வரும் திங்கட்கிழமை தீவகக்கல்விவலயத்தில் உள்ள கல்வி அபிவிருத்திப் பிரிவு முகாமைத்துவ மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தீவக கல்வி வலயப்பணிப்பாளர் த.ஜோன் குயின்ரஸ் தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படி செயலமர்வில் தீவக பாடசாலைகள் அனைத்திலும் உள்ளசகல பாடசாலைகளின் அதிபர்களையும் அன்றையதினம் கலந்து கொள்ளுமாறு கல்விப்பணிப்பாளர் அறிவுறுத்தியுள்ளார்.

விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கல்வியினை எவ்வாறு கற்றல், கற்பித்தல் தொடர்பான விளக்கங்களும் இந்த செயலமர்வில் விளக்கமளிக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# விதை நெல் பெறமுடியும்

வடவரணி விவசாய சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கான விதை நெல் தற்போது புத்தூர் சந்தியில் அமைந்துள்ள (A.B.C) கமநலசேவை நிலையத்தில் வழங்கப்படுவதாக வடவரணி விவசாய சம்மேளனத்தின் செயலாளர் அறிவித்துள்ளார்.

விதைநெல் தேவைப்படுவோர் உடனடியான கமநல சேவைத்திணைக்களத்திற்குச் சென்று பெற்றுக் கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்தார். (150)

# ஆடிப்பிறப்பைக் கொண்டாட தீவக பாடசாலைகள் ஏற்பாடு

(வேலணை)

எதிர்வரும் 17 ஆம் திகதி வியாழக்கிழமை வருகின்ற ஆடிப்பிறப்பினை தீவகத்தைச் சேர்ந்த சகல பாடசாலைகளிலும் கொண்டாடிக் குதுகலிப்போம் என தீவகக் கல்வி வலயப்பணிப்பாளர் த.ஜோன் குயின்ரஸ் தீவகத்தில் உள்ள சகல பாடசாலை அதிபர்களுக்கும் சுற்றறிக்கை ஒன்றின் மூலமாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேற்படி ஆடிப்பிறப்பு கொண் டாட்டமானது மாகாண கல்வி அமைச்சின் செயலாளரது 2014/01 இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் சகல பாடசாலைகளிலும் சிறப்பாக கொண்டாட அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (05)

# மாகாணசபையை இயக்கவும் செய்யலாம்... மக்கள் ஏமாளிகள் எண்டால் வைச்சுக்கொண்டு சும்மாவும் இருக்கலாம்...







வடக்கு மாகாணசபையை எப்பிடி இயக்கலாம் எண்டு வடக்கு கிழக்கு மாகாணசபையின்ர முன்னாள் முதல்வராக இருந்த வரதராஜப்பெருமாள் எழுதிக்கொண்டிருக்கிறார்.

தமிழற்றை அரசியல் போராட்டத்தில கடைசியாகக் கிடைச்சிருக்கிறது வடக்கு – கிழக்கு எண்டு ரண்டாக உடைஞ்சுபோன இந்த மாகாணசபைதானே!

அதிலயும் கிழக்கு மாகாணசபை தமிழாக்களின்ரை கையில இல்லை.

இப்ப மிஞ்சியிருக்கிறது, இந்த வடக்கு மாகாணசபைதான்.

ஆனால், அதுவும் இப்ப இயங்க முடியாமல் இறுகிப்போயிருக்கு.

பெரிய நம்பிக்கையோட மாகாணசபைத் தேர்தல்ல வாக்குகளை அள்ளிப்போட்டிட்டு, விக்கினேஸ்வரன் ஐயா எல்லா விக்கினத்தையும் தீர்ப்பார் எண்டு நம்பியிருந்தவைக்கு இப்ப தூக்கிவாரிப்போட்டிருக்கு.

எங்கள் தங்கம் சிவசிவா விக்கியண்ணையும் மற்றவையைப் போலத்தான் புறணி சொல்லிற ஒரு ஆளாக இருக்கிறாரே தவிர, உருப்படியாக ஒண்டையும் செய்யக்கூடிய மனிசராகத் தெரியேல்ல.

இந்தக் கட்டத்திலதான் 'நெஞ்சு பொறுக்குதில்லையே, இந்த நிலைகெட்ட மனிசரை நினைக்கையிலே...' எண்டு வரதர் மாகாணசபையை இயக்குகிறது எப்பிடி எண்டு எழுத வெளிக்கிட்டிருக்கிறார்.

இந்த மாகாணசபையை எப்பிடி மக்களுக்குப் பயன்படக்கூடியமாதிரி திறமாக இயக்கலாம் எண்டதை வரதராஜப்பெருமாள் தெளிவாகச் சொல்லிறார்.

ஒரு அதிகார மையத்தில் ஆயிரம் பிரச்சினைகள் இருக்கும். ஆனால், அந்தச் சவால்களுக்குள்தான் மக்களுக்கான வேலைகளைச் செய்யும் சாமர்த்தியத்தை வைத்துக்கொண்டு தலைவர்கள் வேலை செய்ய வேணும்.

வடக்கு மாகாணசபையில கல்வித்துறை அதிகாரிகளாக இருந்தவை இருக்கினம். வைத்தியத்துறையில அனுபவமுள்ளவையள் இருக்கினம். மேலதிக மாகாணக் கல்வி அதிகாரியாக இருந்த ப. அரியரத்தினம் நல்ல முதிர்ச்சியுள்ள ஒரு ஆள். இதைவிட சி.வி.கே. சிவிஞானம் ஒரு பழுத்த நிர்வாகி. நாலுபேரோட கதைச்சுப் பேசி நாலு விசயத்தை நடத்தக்கூடிய ஆள். இந்த மாதிரிக் கெட்டிக்காரர் எல்லாம் இருந்து கொண்டும், மாகாணசபையை நடத்த முடியேல்ல. அதுக்கு அதிகாரம் இல்லை எண்டு சொல்லிக்கொண்டிருந்தால்....

இதையும்விடக் கேவலம், தங்கட இயலாமையை மறைக்கிறதுக்காக எடுத்ததுக்கெல்லாம் கோத்தபாயவையும் ஆமிக்காறரையும் மகிந்தரையும் குற்றஞ் சொல்லிக்கொண்டிருந்தால் அது நல்லதில்லை.

இப்பிடி அரசாங்கத்தைக் குறை சொல்லிறதுதான் எம்.பிமாற்ற வேலையும் மாகாணசபை உறுப்பினர்மாற்ற வேலையும் எண்டால்... அதுக்கேன் இவை?

இந்த இடத்திலதான் வரதர் சில விசயங்களைச் சொல்ல வெளிக்கிட்டிருக்கிறார். வரதர் சொல்லிற விசயங்களை மக்களாகிய நாங்களும் படிக்கோணும். மாகாணசபைக்காரரும் படிக்கோணும்.

மாகாணசபைக்கு இருக்கிற அதிகாரங்கள் என்ன?

இனிப் பெறவேண்டிய அதிகாரங்கள் என்ன?

இருக்கிற அதிகாரங்களை வைச்சுக்கொண்டு என்னென்ன வேலைகளையெல்லாம் செய்யலாம்?

எப்பிடி அந்த வேலைகளைச் செய்யலாம்?

நிதி ஒதுக்கீடு எவ்வளவு? அதைப் பயன்படுத்துகிற விதம் என்ன?

மாகாணசபைக்கு இல்லாத அதிகாரங்களைக்கூட எப்பிடிப் பெறலாம்? அதற்கான வழிகள் என்ன?

இப்பிடிப் பயனுள்ள பல விசயங்களை வரதராஜப்பெருமாள் சொல்லியிருக்கிறார். தமிழ்ச்சமூகத்துக்காக வரதர் செய்திருக்கிற நல்ல காரியம் இது எண்டு சொல்லுவன்.

மாகாணசபையைப் பற்றிய அறிவும் அனுபவமும் வரதருக்கே கூடுதலாக இருக்கு.

உண்மையில வரதர் சொல்லியிருக்கிற இந்த விசயங்கள் எல்லாம் ஒரு கைநூலைப் போல, வழிகாட்டியைப் போல தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும் மாகாணசபைக்காரருக்கும் உதவும்.

வடக்கு மாகாணசபையை இயக்க முடியாமல் தட்டுத்தடுமாறிக் கொண்டிருக்கிற தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் முதலமைச்சர் விக்கினேஸ்வரனுக்கும் இது கையில புதையலை எடுத்துக் குடுத்திருக்கிற மாதிரி எண்டுதான் சொல்லுவன்.

இதுக்கும் மேல எதையாவது செய்யவேணும் எண்டால், இனி வாழைப்பழத்தை உரிச்சு வாய்க்குள்ள தீத்திவிடுகிறதாத்தான் இருக்கும்.

சனங்களுக்காக உயிரையும் உடல் உறுப்புகளையும் குடுத்த மக்களுக்கு மத்தியிலதான் இந்தக் கூட்டமைப்புக்காரர், குனியாமல் நிமிராமல் இருந்து கொண்டு அரசியல் செய்யினம்.

தங்களையே முழுமையாக அர்ப்பணிப்புச் செய்த சனங்களுக்கு எந்த வகையான தியாகமும் செய்யாமல் குளிரூட்டப்பட்ட வாகனங்களில பயணஞ்செய்து புலுடாக்கதை விடுகினம். மீடியாக்களுக்குப் போஸ் குடுக்கினம். கதை கதையாக அளக்கினம்.

'இதுக்குத்தானா எங்களை வாக்குப்போடக் கேட்டாய்... விக்கினேஸ்வரா....!' எண்டு கந்தசாமி மாஸ்ரர் கேட்டது மெத்தச் சரிதான்....

விக்கினேஸ்வரனும் குத்துக்கரணம் அடிக்கத் தொடங்கீட்டார். குத்துக்கரணம் அடிச்ச ஆக்களெல்லாம் வரலாற்றின் குப்பைத் தொட்டிக்குள் போனதுதான் வரலாறு.

மிகப்பெரிய உண்மை இது, பலமே வாழ்வு பலவீனமே மரணம். - விவேகானந்தர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## ரமபோஷவிடம் இருந்தும் தப்பியாச்சு!

தென்னாபிரிக்க உப ஜனாதிபதியும், இலங்கைப் பிரச்சினை பேச்சுவார்த்தைகளுக்காக தென்னாபிரிக்காவால் நியமிக்கப்பட்ட விசேட தூதுவருமான சிறில் ரமபோஷ, "இலங்கை அரசும் தமிழ்த் தரப்பும் கேட்டுக் கொண்டதாலேயே இலங்கை வந்ததாக" ஒரு குறிப்பை மட்டும் சொல்லிவிட்டு திரும்பிச் சென்றிருக்கிறார்.

இரு தரப்பையும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுத்த முடியுமா என்று முயற்சித்துப் பார்ப்பதே அவரது இலங்கை விஜயத்தின் நோக்கம் என்பது தெரிந்ததே. ஆனாலும், "நீங்கள் கேட்டுக் கொண்டதாலேயே வந்தேன்; வந்தபின் வேண்டாம் என்கிறீர்கள்" என்னும் ஒரு தொனியில், அவரது பயண முடிவிலான அறிக்கையை வெளியிட்டுவிட்டு அவர் போயிருக்கிறார்.

கடந்த மார்ச்சில் ஜெனீவாத் திருவிழா முடிந்த கையோடு, தமிழ் மக்களுக்கான இடைக்காலத் திருவிழா ஏற்பாடாக "தென்னாபிரிக்க மத்தியஸ்தத்துடனான பேச்சுவார்த்தைகளை எதிர்பாருங்கள்" என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் அறிவித்திருந்தனர்.

அடுத்த ஜெனீவாப் பெருந்திருவிழாவுக்கு இடையில் தமிழ் மக்களுக்கு நேரம் போவதற்காகக் காட்டப்பட வேண்டிய சிறு வேடிக்கை விநோதமாகவே "தென்னாபிரிக்க மத்தியஸ்தப் பேச்சை" தலைவர்கள் கையிலெடுக்கிறார்கள் என்பதை மூன்று மாதங்களுக்கு முன்பே இந்தப் பத்தியில் எழுதியிருந்தோம்.

அதிலும், கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அவர்களும், பேச்சாளர்களில் ஒருவரான சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்களும், தமிழ்வீரம் ஒருபோதும் சோடைபோகாது என்கிற ஆவேசத்தைக் காட்டும் குரலில், "தென்னாபிரிக்கா எங்களை அழைத்திருக்கிறது; இதுகேட்டு இலங்கை அரசு நடுங்க ஆரம்பித்திருக்கிறது" என்றெல்லாம், அரசாங்கம் பதகளிப்பதைப் பார்த்து நெஞ்சுகுளிரவென்றே காத்திருக்கும் தமிழ் மக்களுக்கு அறிவித்திருந்தார்கள்.

இதோ இந்த ஜூலை 10ஆம் திகதியுடன் "தென்னாபிரிக்கப் படம்" தியேட்டரை விட்டுத் தூக்கியாகி விட்டது. "தீர்வு குறித்து எதுவுமே பேசாது போனார் ரமபோஷ" என்ற அறிவிப்புடன் அந்த "ஷோ"வை முடித்து வைத்திருக்கிறது கூட்டமைப்புப் பத்திரிகை!

தமிழ் மக்களின் துன்பங்களைப் பார்த்துக் 'கண்கள் கலங்கியதாக' ஒரு வார்த்தை சொல்லாமலும், இலங்கை அரசைத் திட்டவோ அல்லது குறைந்தபட்சம் எச்சரிக்கையோ கூடச் செய்யாமலும், இலங்கை ஜனாதிபதியுடன் சிரித்த முகத்தோடு பேசிவிட்டு, தனது நாட்டுக்குத் திரும்பிப்போன ரமபோஷவும் ஒரு தமிழ்த் துரோகியே என்று எழுதாமல் விட்டதற்காக, அவரும் தென்னாபிரிக்க மக்களும் எங்களிடம் நன்றி பாராட்டுவார்கள் என நம்பலாம்.

சரி, ரமபோஷ அவர்கள், "நீங்கள் கேட்டுக் கொண்டதால்தான் வந்தேன்" என்று ஒருவித சோர்வான தொனியில் சொல்லிவிட்டு ஏன் செல்லவேண்டும்? அங்குதானிருக்கிறது நம் தங்கத் தலைவர்களின் அரசியற் சூட்சுமம்!

இந்த நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு வந்துவிடாமல் பார்த்துக்கொண்டபடி தொடர்ந்து அறுபத்தைந்தைந்து வருடங்களுக்கும் மேலாக தமிழர்களின் தலைவர்களாக இருப்பதென்றால் சும்மாவா!

இருதரப்பையும் பேச வைக்கலாம் என்று நம்பி வந்தவரிடம் நம் தலைவர்கள் என்ன சொன்னார்கள்? "இந்தியாவும் அமெரிக்காவும் நவநீதம்பிள்ளை அம்மாவும் முயற்சியெடுத்து தமிழ் மக்களுக்கான தீர்வை கிட்டத்தட்டக் கொண்டுவந்துவிட்டார்கள். நீங்கள் பேச்சுவார்த்தை அது இது என்று குழப்பிவிட வேண்டாம்."

ஆமாம், இதைத்தான் ரமபோஷவிடம் சொன்னதாக அவர்களே சொல்லியிருக்கிறார்கள். ரமபோஷ போய்விட்டார்... நம் தங்கத் தலைவர்கள் பேச்சுவார்த்தை, தீர்வு என்ற கண்டங்களிலிருந்து தப்பிவிட்டார்கள்.

பிறகென்ன?... "மிச்சத்தையெல்லாம் வருசா வருசம் மக்களுக்கு ஜெனீவாத் திருவிழா காட்டியே சமாளித்துக்கொண்டு போக வேண்டியதுதான்!"

- ஆசிரியர்

# ஜனாதிபதி முறைமையின் மூலமே நெருக்கடிகளை வெற்றிகொள்ள முடியும்

## - பிரதமர் உறுதிபடத் தெரிவிப்பு

நாட்டில் நிலவுகின்ற நெருக்கடிகளை ஜனாதிபதி முறைமையின் கீழ் மாத்திரமே வெற்றிகொள்ள முடியும் என்று பிரதமர் டி.எம்.ஜெயரத்ன தெரிவித்துள்ளார்.

மாவனெல்ல பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.30 வருடங்களாக இலங்கையில் நிலவிய யுத்த சூழ்நிலையை, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையின் அதிகாரத்தினாலேயே நிறைவு செய்ய முடிந்துள்ளது.

அத்துடன் நாட்டின் நிலையான தன்மைக்கு, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை அவசியமானது என்றும் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார்.

# முச்சக்கர வண்டி சாரதிகளுக்கும் சமூக பாதுகாப்பு ஓய்வூதியம்

நாடுமுழுவதிலுமுள்ள முச்சக்கர வண்டி உரிமையாளர்களுக்கும் அதன் சாரதிகளுக்கும் சமூக பாதுகாப்பு ஓய்வூதிய முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

காப்புறுதி நட்டஈடு கிடைக்கும் வகையில் ஓய்வூதியத்துடன் கூடிய சமூக பாதுகாப்பு காப்புறுதி முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. என சிரேஷ்ட அமைச்சர் சரத் அமுனுகம நேற்று முன்தினம் நாடாளுமன்றில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச வாய்மொழி மூல கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் சரத் அமுனுகம இத்தகவலை வெளியிட்டார்.

மாவட்ட மட்டத்தில் முச்சக்கர வண்டிகளின் விபரங்களை திரட்டியே இத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. 18 வயதுக்கும் 59 வயதுக்கும் இடைப்பட்ட சேமிப்புத்திட்டத்தின் கீழ் அங்கத்துவம் பெறும் சகல முச்சக்கர வண்டி உரிமையாளர்களுக்கும் அதன் சாரதிகளுக்கும் அவர்களுக்கு 60 வயதாகும் தினத்திலிருந்து வாழ்நாள் பூராவும் மாதாந்த ஓய்வூதிய கொடுப்பனவு வழங்கப்படும். இதன் போது அங்கத்தவர்கள் தாம் விரும்பும் ஓய்வூதியத் தொகையை தீர்மானிக்க மு[illegible]

மாவட்ட செயலகங்கள், பிரதே[illegible] செய[illegible]களூடாக இத்திட்டத்தை நடைமுறை[illegible] படுத்[illegible] நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தேசிய முச்சக்கர வண்டி தொழிற்சங்க சம்மேளனத்தின் ஒத்துழைப்புடன் நாடளாவிய ரீதியில் இதனை செயல்படுத்[illegible] திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலு[illegible] தெரிவித்தார்.

# கொள்ளையில் ஈடுபட்டவர்களை கண்டுபிடித்தது மோப்பநாய்

புத்தூர் வடக்குப் பகுதியிலுள்ள வீடொன்றினுள் நேற்று முன்தினம் அதிகாலை நுழைந்து வீட்டிலிருந்தவர்களைக் கட்டிப் போட்டுவிட்டு, வீட்டிலிருந்த நகைகள் உள்ளிட்ட 7 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களை கொள்ளையடித்தமை தொடர்பில் இருவரை நேற்று முன்தினம் மாலை கைதுசெய்ததாக அச்சுவேலிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜே.ஏ.எஸ். எம்.கே.சமன்ஜெயசிங்க தெரிவித்தார்.

ஏழாலை வடக்கு மற்றும் புத்தூர் கலைமதி ஆகிய இடங்களைச் சேர்ந்த இருவரே சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள், பொலிஸ் மோப்ப நாய்களின் உதவியுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த வீட்டிற்குள் மூவர் கொண்ட குழு உள்நுழைந்து வீட்டிலிருந்த 14 பவுண் நகைகள் மற்றும் கமரா, கைத்தொலைபேசி உள்ளிட்டவற்றினைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

தொடர்ந்து இது தொடர்பில் வீட்டு உரிமையாளர் அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தார்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகள் மேற்கொண்ட போதே குறித்த இருவரும் சந்[illegible]கத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டதாக பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார்.

# அவுஸ்ரேலிய படகுகள் உத்தியோகபூர்வ கையளிப்பு

(கொழும்பு)

அவுஸ்ரேலிய அரசின் சார்பில் இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட இரு படகுகளை இலங்கை அரசுக்கு உத்தியோகபூர்வமாகக் கையளிக்கும் விசேட வைபவம் கொழும்பு துறைமுகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, முப்படைகளின் தளபதிகள், பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ, அவுஸ்ரேலிய அமைச்சர் ஸ்காட் மோரிசன் மற்றும் கடற்படை உயர் அதிகாரிகளும் இந்த வைபவத்தில் கலந்துகொண்டனர்.

இந்த இரண்டு படகுகளுக்கும் "ரத்னதீப" மற்றும் "நிஹிகத" என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. படகுகளின் பெயர்ப்பலகைகளை ஜனாதிபதி திரைநீக்கம் செய்துவைத்தார் அத்துடன் படகுகளின் உரிமைப் பத்திரத்தை கடற்படை உயர் அதிகாரிகளிடம் கையளித்தார்.

# கணவனின் இரண்டாவது திருமணத்தை நிறுத்த மனைவிக்கு உதவியது இணையத்தளம்

கனடாவில் பணிபுரியும் இலங்கையைச்சேர்ந்த தனது கணவரின் இரண்டாவது திருமண முயற்சியை இணையத்தளம் மூலம் மனைவி நிறுத்தியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

இலங்கையைச் சேர்ந்த சாந்திவாசன் (வயது-33).என்பவர் கனடாவில் சாரதியாக வேலை செய்கின்றார். சாந்திவாசன் வேலை செய்யும் நிறுவனத்தில் இலங்கையைச் சேர்ந்த சீதா என்பவரும் வேலை செய்தார். அப்போது அவர்கள் இருவருக்கும் இடையே காதல் மலர்ந்தது. பின்னர் இருவரும் திருமணம் செய்தனர். தற்போது அவர்களுக்கு 3 குழந்தைகள் உள்ளனர்.

இந்நிலையில் சாந்திவாசனுக்கும், சீதாவிற்கும் இடையே தகராறு ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து இந்தியாவின் திருச்சி சென்ற சாந்திவாசன் தனது முன்னாள் காதலியான சங்கமி (வயது-26) என்பவரை சந்தித்துள்ளார். பின்னர் கடந்த 4ஆம் திகதி சங்கமியை பதிவு திருமணமும் செய்துள்ளார். தொடர்ந்து முறைப்படி திருமணம் செய்ய பெண் வீட்டார் ஏற்பாடு செய்தனர். இதன்படி நேற்று முன்தினம் காலை சாந்திவாசன் சங்கமி திருமணம் திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள ஒரு விடுதியில் நடக்க இருந்தது.

கனடாவில் இருந்த சீதாவிற்கு திருமண விடயம் தெரியவந்தது. உடனடியாக அவர் தனது கணவரின் 2ஆவது திருமணத்தை தடுத்து நிறுத்துமாறு இணையத்தளம் மூலம் திருச்சி பொலிஸ் அதிகாரிக்கு அலுவலகத்திற்கு புகார் அனுப்பியுள்ளார்.

இதையடுத்து நடக்க இருந்த திருமணத்தை பொலிஸார் நிறுத்தியுள்ளனர்.




# அடுத்த பின்லேடன்!



**இன்றைய நிலையில் உலகின் மிக ஆபத்தான மனிதராக அபுதுவாவை மேற்கத்திய ஊடகங்கள் விமர்சிக்கின்றன. இதுவரை உலகம் கண்டிராத வகையில் வீரமும், அறிவும் ஒருங்கே அமைந்திருக்கும் தீவிரவாத தலைவர், மிகக்குறுகிய காலத்திலேயே அற்புதங்களை நிகழ்த்த வல்லவர் என்பதால் அமெரிக்கா முள்ளின் மீது விழுந்த சேலையை எடுக்கும் கவனத்தில் இவரைக் கையாள நினைக்கிறது.**

**யுவ கிருஷ்ணா**

"அப்புறம் உங்களையெல்லாம் நிச்சயமாக நியூயோர்க்கில் வந்து சந்திக்கிறேன்"

நீண்டகாலம் சிறைப்பட்டு கைதியாக இருந்து வெளியில் வந்து சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கும் நாளில் யாருமே உணர்ச்சிவசப்பட்டுதான் இருப்பார்கள். எதுவுமே பேசமாட்டார்கள். ஆனால் இந்த வார்த்தைகளை அமெரிக்க அதிகாரிகளை நோக்கி அபுதுவா சொல்லும்போது அவர் முகம் இறுகி யிருந்தது. கண்களில் வெறி இருந்தது.

முப்பத்தி நான்கு வயதில் அமெரிக்க இராணுவ அதிகாரிகளால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர், அடுத்த நான்கு ஆண்டுகளை ஈராக்கின் கண்காணிப்பு முகாமில் கைதியாக கழித்தார். கண்காணிப்பு காலத்தில் அமைதியாக இருந்த இவர் அமெரிக்காவுக்கு அச்சுறுத்தலாக இருக்கக்கூடியவர் அல்லர் என்று அதிகாரிகள் அவர்களாகவே முடிவெடுத்தார்கள்.

சிறையிருந்த காலத்தில் அபுதுவா எந்த வம்புதும்புக்கும் சம்பந்தமில்லாத வராகவே தெரிந்தார் என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். ஏதோ ஒரு மசூதியில் கிளார்க்காக பணியாற்றியதாகவும், துப்பாக்கியையும் வெடிகுண்டையும் சினிமாவில் மட்டுமே பார்த்திருப்பதாக வும் கற்பூரம் ஏற்றி அடிக்காத குறை யாக சத்தியம் செய்தார்.

சந்தேகத்தின் பேரில் அமெரிக்காவின் வதைமுகாம்களில் கண்காணிப்புக்கு உட்பட்டு, காரணமே இல்லாமல்ஆயிரக் கணக்கான அப்பாவிகள் சித்திரவதை செய்யப்பட்டுக் கொண் டிருந்தார்கள். அந்த மாதிரி அப்பாவிகளில் ஒருவர்தான் அபுதுவாவும் என்று அதி காரிகள் கருதினார்கள்.

2009ல் தாங்களே விடுதலை செய்த அபுதுவாவின் தலைக்கு, அடுத்த இரண்டு ஆண்டில் பத்து மில்லியன் டொலரை (சுமார் 130 கோடி ரூபா) விலையாக அறிவிப்போம் என்று அமெரிக்கா கனவிலும் நினைத்த தில்லை. அமெரிக்க அரசின் இந்த சிறப்புப் பரிசுத் திட்டத்தில் அபுதுவாவை விட ஒரே ஒருவர்தான் விலை விஷயத் தில் முன்னிலையில் இருக்கிறார். அவர் அல்கைதாவின் தற்போதைய தலைவர் அய்மன் அல்-ஸவாரி.

விரைவில் அல்-ஸவாரியை முந்தி, முதலிடத்தை அபுதுவா பெறக்கூடும் என்று கருதப்படுகிறது. அன்று சொன்ன மாதிரி உண்மையாகவே அபுதுவா நியூயோர்க்குக்கே வந்து விடுவாரோ என்று அமெரிக்கா அஞ்சுகிறது.

கடந்த ஒரு மாதமாக ஈராக்கின் பல நகரங்களை பின்லேடன் ஆதரவுப் படைகள் கைப்பற்றி வருவதாக செய்தித்தாள்களில் படித்து வருகிறீர்கள் இல்லையா, அந்த அமைப்பின் தலைவர்தான் இந்த அபுதுவா.

**யார் இவர்?**

அமெரிக்க இராணுவ ஆவணங்களின் படி ஈராக்கின் சமாரா நகரில் 1971இல் பிறந்தவர் இவர் என்று நம்பப்படுகிறது. இப்ராஹிம் அவ்வாத் இப்ராஹிம் அலி அல் பத்ரி அல் சமாரி என்பது இவரது முழுப்பெயர். அபுபக்கர் அல் பாக்தாதி என்றே ஊடகங்கள் இவரை எழுதுகின்றன. இஸ்லாமிய தீவிரவாத குழுக்கள் பிரபலமான டாக்டர் இப்ராகிம் என்கிற பெயர் இவரைத்தான் சுட்டுகிறது என்கிறார்கள். மக்கள் மத்தியில் பிரபலமாகியிருக்கும் பெயர் அபுதுவா.

2003ல் ஈராக்கில் அமெரிக்க ஊடுருவல் நிகழ்ந்தபோது மிகச்சிறிய அளவிலான சில போராளிக் குழுக்களை அபுதுவா தலைமையேற்று நடத்தியதாக சொல்கிறார்கள். அல்கைதாவின் ஈராக் கிளையான ஐ.எஸ்.ஐ. (Islamic State of Iraq) அமைப்பிலும் அவர் கவுன்சில் உறுப்பினராக இருந்திருக்கிறார்.

2009இல் அமெரிக்க கண்காணிப்பு முகா மில் இருந்து விடுதலையானவருக்கு சில மாதங்களிலேயே அதிர்ஷ்டம் அடித்தது. ஐ.எஸ்.ஐ. தலைவர் அபு ஓமர் அல் பாக்தாதி திடீரென்று கொல்லப்பட, அவருடைய இடம் இவருக்கு 2010 மே மாதம் கிடைத்தது.

அதன்பிறகு ஈராக்கில் நடந்துவரும் பல்வேறு வன்முறைச்சம்பவங்

களுக்கும், தீவிரவாத தாக்குதல் களுக்கும் இவரே காரணமாக இருக் கிறார். 2011இல் அல்கைதா தலைவர் பின்லேடன் அமெரிக்காவால் கொல் லப்பட்டபோது, அதற்காக தகுந்த முறையில் பழிவாங்கப்படும் என்றும் அமெரிக்காவை ஓர் அறிக்கை மூலம் எச்சரித்தார் அபுதுவா.

**அல்கைதாவோடு முரண்பாடு**

2013 ஏப்ரலில் சிரியாவில் உள்நாட்டு கலவரம் வெடித்தபோது, அதை தமக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்ள அபுதுவா முடிவெடுத்தார். ஐ.எஸ்.ஐ. அமைப்பை கொஞ்சம் விரிவுபடுத்தி சிரியாவையும் சேர்த்து ஐ.எஸ்.ஐ.எஸ் (Islamic State of Iraq and Syria) என்று அமைப்பின் பெயரை மாற்றி, சிரியா வின் கலகத்தில் தானும் ஈடுபட்டார். தன்னுடைய சிறிய இராணுவத்துக்கு தலைமையேற்று போரிட்டு சிரியா வின் பல நகரங்களைக் கட்டுப்பாட்டில் கொண்டுவந்தார்.

அபுதுவாவின் இந்த தான்தோன்றித் தனமான போக்கை அல்கைதா தலைமை ரசிக்கவில்லை. ஈராக்கோடு உங்கள் வேலைகளை நிறுத்திக்கொள் ளுங்கள் என்று எச்சரித்தபோது, இனி மேல் தாங்கள் அல்கைதாவின் கட்டுப் பாட்டில் இல்லாத சுதந்திர இஸ்லாமிய அமைப்பு என்று அபுதுவா அறிவித்து விட்டார்.

**மாயாவி ஷேக்**

அபுதுவா மதக்கல்வியில் பி.எச்.டி. முடித்தவர் என்று சொல்லப்படுகிறது. பல்வேறு இடங்களுக்கு சென்று மதப்பிரசாரத்தையும், தீவிரவாதத்தையும் ஊட்டுவதிலும் தன் வாழ்நாளை செல வழிக்கிறார். உ...களவிலான ஜிகாதி அறிவுஜீவிகளின் மத்தியில் இவருக்கு நல்ல செல்வாக்கு இருக்கிறது.

பின்லேடன் மரணத்துக்கு பிறகு அல்கைதா மீதிருந்த நம்பிக்கை இஸ்லாமிய தீவிரவாதக் குழுக் களிடையே குறைந்துவரும் நிலையில், அவர்களின் கலங்கரை விளக்கமாக அபுதுவா உருவெடுத்திருக்கிறார். குறிப்பாக ஈராக்கில் அடுத்தடுத்து சிறைகள் மீது திடீர் தாக்குதல்களை நடத்தி ஆயிரத்துக்கும் மேற்பட்டோரை விடுதலை செய்த இவரது நடவடிக் கைக்கு சன்னி இஸ்லாம் வகுப்பின ரிடையே நல்ல வரவேற்பு.

அல்கைதாவின் செயற்பாடுகளுக்கும், ஐ.எஸ்.ஐ.எஸ்.ஸின் செயற்பாடுகளுக்கும் ஏராளமான வித்தியாசம் உண்டு. வீடியோ ரேப்கள் மூலமாக தங்கள் நடவடிக்கைகளை உலகறியச் செய்வது அல்கைதா பாணி. ஐ.எஸ்.ஐ.எஸ். சுக்கு அம்மாதிரி விளம்பரங்கள் மீது நம்பிக்கை இல்லை. உயிருக்கு அஞ்சாத சுமார் ஏழாயிரம் போராளி கள் அபுதுவாவின் கட்டளைக்காக எப்போதும் காத்திருக்கிறார்கள்.

தன் ஆதரவாளர்கள் மத்தியில் பேசும்போது கண்கள் மட்டுமே தெரியும் வண்ணம் ஒரு முகமூடி அணிந்திருப்பாராம் அபுதுவா. அதனா- லேயே இவரை "மாயாவி ஷேக்" என்று ஜிகாதிகள் அழைக்கிறார்கள். அமெரிக்க கண்காணிப்பு முகாமில் இருந்தபோது எடுத்த ஓரிரண்டு போட்டோக்கள் மட்டும் தான் இவரை அடையாளப்படுத்தி அறிந்துகொள்ள இருக்கும் ஒரே ஆதாரம்.

**நோக்கம் என்ன?**

இஸ்லாமியர்களின் எல்லை என்றொரு கனவு அபுதுவாவுக்கு உண்டு. ஐரோப்பாவில் ஸ்பெயினின் வடக்கு எல்லையில் தொடங்கி, வட ஆபிரிக்கா, தெற்கு ஆசியா முழுக்க ஒரே இஸ்லா- மிய குடையின் கீழ் அமையவேண்டும் என்று இவர் விரும்புகிறார் (ஐ.எஸ். ஐ.எஸ் அமைப்பின் கனவு வரை படத்தை காண்க).

இஸ்லாமிய ஆளுகைக்குள் இருக்கும் பிரதேசங்களை 'ரியத் சட்டம்தான் ஆளவேண்டும் என்ற அவரது இலட்சியத்துக்கு முதல் படியாகத்தான் சிரியா, ஈராக் இரண்டு நாடுகளையும் கைப்பற்றி ஒரே ஆளுகைக்குள் கொண்டுவர வேண்டுமென்று போராடி வருகிறார்கள். சிரியாவில் ஏற்பட்ட உள்நாட்டு கலவரத்தில் இவர்களது பங்கு கணிசமாக இருந்தது. ஈராக்கிலும் பல்வேறு சிறுநகரங்களை வென்று பாக்தாத்தை நெருங்கி விட்டார்கள். முதற்கட்ட வெற்றியை ருசித்தபின் அடுத்தடுத்த நடவடிக்கைகள் விரிவுபடுத்தப்படுமாம்.

**நிதி நிலவரம் எப்படி?**

கடத்தல் வேலைகளில் ஈடுபட்டு ஐ.எஸ். ஐ.எஸ் நிதி திரட்டியதாக அமெரிக்கா சந்தேகப்படுகிறது. அல்கைதாவுக்கு முன்பு நிதி கொடுத்துக் கொண்டிருந்த புரவலர்கள் பலரும் இப்போது புதிய செல்லப்பிள்ளையான அபுதுவாவையும் வளர்க்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

அதுவுமின்றி தாங்கள் கைப்பற்றும் நகரங்களில் இருக்கும் செல்வங்களை அப்படியே சூறையாடும் பழங்கால இராணுவபாணியை இவ்வமைப்பு பின்பற்றுகிறது. சமீபத்தில் ஈராக்கின் மொசூல் நகரைக் கைப்பற்றியபோது, அங்கிருந்த வங்கிகளிலிருந்து மட்டுமே சுமார் நானூறு மில்லியன் டொலரை எடுத்துச் சென்றிருக்கிறார்கள். ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்புக்கு இப்போது இரண்டு பில்லியன் டொலர் சொத்து மதிப்பு இருக்கலாம் என்றொரு கணக்கீடு.

இன்றைய நிலையில் உலகின் மிக ஆபத்தான மனிதராக அபுதுவாவை மேற்கத்திய ஊடகங்கள் விமர்சிக்கின் றன. இதுவரை உலகம் கண்டிராத வகையில் வீரமும், அறிவும் ஒருங்கே அமைந்திருக்கும் தீவிரவாத தலைவர், மிகக்குறுகிய காலத்திலேயே அற்புதங் களை நிகழ்த்த வல்லவர் என்பதால் அமெரிக்கா முள்ளின் மீது விழுந்த சேலையை எடுக்கும் கவனத்தில் இவரைக் கையாள நினைக்கிறது.

**'இஸ்லாமிய தேசம்' உருவானது!**

சிரியா மற்றும் ஈராக்கில் இதுவரை ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு கைப்பற்றி இருக்கும் பகுதிகளைத் தனிநாடாக அந்த அமைப்பு இப்போது அறிவித் திருக்கிறது. இந்த நாட்டுக்கு "இஸ்லா மிய தேசம்" என்று பெயர் சூட்டியிருக் கிறார்கள். இதற்கு கலீபாவாக (மன்னராக) அபுதுவா இருப்பார் என்று அவ்வமைப் பின் செய்தித் தொடர்பாளர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் இனி ஐ.எஸ்.ஐ.எஸ். என்கிற பெயரில் தாங்கள் இயங்கப்போவ தில்லை என்றும் தங்களுடைய அமைப்பை "இஸ்லாமிய தேசம்" என்கிற பெயரில் தான் நடத்தப் போகிறோம் என்றும் அவர் அறிவித் திருக்கிறார்.

# அளுத்கம சம்பவ விசாரணைகள்

# உண்மைநிலையை வெளிக்கொண்டுவரும்

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் நம்பிக்கை



(கொழும்பு)

அளுத்கம சம்பவம் தொடர்பில் இடம் பெற்றுவரும் விசாரணைகள் உண்மைநிலையை வெளிக்கொண்டுவரும். அதன் மூலம் நீதி கிடைக்கும் எனறு நம்புகின்றோம் என அமைச்சர் ரவூப்ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க விசேட அறிக்கை ஒன்றை விடுத்து எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அளுத்கம சம்பவத்தின் போது வெலிபிடியவில் கொல்லப்பட்ட இருவரில் ஒருவர் துப்பாக்கிச் சூட்டினாலேயே உயிரிழந்துள்ளார் மற்றையவரின் மரணத்துக்கான காரணம் இன்னும் உறுதியாகவில்லை அளுத்கம வன்முறை கடந்த 15 ஆம் திகதி ஆரம்பமானது. மறுநாள் காலை முதல் ஆளாக அங்கு சென்ற என்னிடம் மக்கள் கருத்துகளை முன் வைத்தனர்.

அளுத்கம, பேருவளை, தர்ஹாநகர் பகுதிகளில் இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பான அனைத்து தடயங்களும் தரவுகளும் சேகரிக்கப்பட்டுவிட்டன. அதன் பின்னரே அங்கு துப்புரவு, புனரமைப்பு பணிகள் இடம்பெறுகின்றன.

தீ விபத்து தொடர்பில் சந்தேகம் இருந்தால் மாத்திரமே அரச இரசாயன பகுப்பாய்வாளர்கள் அழைக்கப்படுவார்கள். குறிப்பாக பாணந்துறையில் ஆடைவிற்பனை நிலையம் தீக்கிரையான சம்பவம் குறித்து சந்தேகம் இருந்ததால் அங்கு இரசாயன பகுப்பாய்வாளர்கள் அழைக்கப்பட்டனர்.

எனினும், அளுத்கம, பேருவளை, தர்ஹா நகர் சம்பவங்கள் தொடர்பில் இவர்களை அழைக்க வேண்டிய தேவை ஏற்படவில்லை. குண்டர் குழுக்களினாலேயே வீடுகள், வர்த்தக நிலையங்கள், ஏனைய இடங்கள் தீக்கிரையாக்கப்பட்டன என்பது தெளிவாகியுள்ளது என்றார்.

# ஐ.நா.விற்கான பிரதி பிரதிநிதியாக நியமிக்கப்படுகிறார் சிஸன்

(கொழும்பு)

இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதுவர் மிச்சேல் ஜேசிஸன், ஐ.நா. மற்றும் ஐ.நா.பாதுகாப்புச் சபைக்கான பிரதிப் பிரதிநிதியாக நியமிக்கப்படவுள்ளார்.

தூதுவர் நிலையுடன் கூடிய இந்தப் பதவிக்கு, மிச்சேல் சிஸனின் பெயரை, அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா முன் மொழிந்துள்ளதாக, வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

அமெரிக்க அதிபர் ஒபாமாவின் இந்த நியமனம், அமெரிக்க நாடாளுமன்ற வெளிவிவகாரக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பின்னரே, செல்லுபடியாகும்.

அதேவேளை, மிச்சேல் ஜேசிஸன் ஐ.நா. பதவிக்கு அங்கீகரிக்கப்பட்ட பின்னர், இலங்கைக்கான புதிய அமெரிக்கத் தூதுவரின் பெயரை அமெரிக்க அதிபர் ஒபாமா அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# கடமை தவறாத மகிந்ததேசப்பிரிய

(கொழும்பு)

தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவின் வாகனம், கண்டி, குருநாகல் வீதியின் அரம்பேகடை பிரதே சத்தில் மோட்டார் வண்டியுடன் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் காயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் பிற்பகல் 1.45 இற்கும் 2.00 மணிக்கும் இடையில் இடம்பெற்றுள்ளது. இதனையடுத்து, விபத்தில் காயமடைந்தவரை வைத்திய சாலையில் அனுமதித்ததுடன் தனது வாகன சாரதியை பொலிஸ் நிலையத்தில் தேர்தல்கள் ஆணை யாளர் ஒப்படைத்துள்ளார்.

பொலிஸாரின் விசாரணைகளை அடுத்து தேர்தல்கள் ஆணையாளரின் வாகன சாரதி விடுதலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தஞ்சக் கோரிக்கையாளர்களின் தற்கொலை முயற்சிக்கு பணியோம்

## அவுஸ்ரேலிய பிரதமர் சூளுரை

அவுஸ்ரேலியாவுக்கு சொந்தமான கிறிஸ்மஸ் தீவுகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தஞ்சக் கோரிக்கையாளர்களில் சிலர் தற்கொலைக்கு முயன்றதாக செய்திகள் வந்துள்ள நிலையில், இப்படியெல்லாம் மிரட்டி அவுஸ்ரேலிய தஞ்சக் கோரிக்கை கொளகைகளை மாற்றிவிட முடியாது என அவுஸ்ரேலியப் பிரதமர் டோனி அப்பாட் கூறியுள்ளார்.

கிறிஸ்மஸ் தீவில் 12 தாய்மார்கள் தற்கொலைக்கு முயன்றதாக அவுஸ்ரேலிய ஊடகங்கள் சில செய்திகளை வெளியிட்டிருந்தன.

தஞ்சக் கோரிக்கையாளர்களுக்கு உணவு, உடுப்பு; உறைவிடம் எல்லாம் நாங்கள் ஒழுங்காக வழங்குகிறோம். எல்லாவற்றுக்கும் மேலாக அவர்கள் பாது காப்புடன் இருக்கிறார்கள். நவுருவில் வைக்கப்படுபவர்கள் எவ்விதமான தண்டனைக்கோ கஷ்டங்களுக்கோ ஆளாகப்போவதில்லை என அவுஸ்ரேலியப் பிரதமர் டோனி அப்பாட் தெரிவித்துள்ளார்.

கிறிஸ்மஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தஞ்சக் கோரிககையாளர்களில் தாய்மார்கள் சிலர், தாம் இறந்தால் தமது பிள்ளைக்காவது அகதித் தஞ்சம் கிடைக்கலாம் என்ற எண்ணத்தில் தற்கொலைக்கு முயன்றதாக அவுஸ்ரேலியாவின் பேர்பக்ஸ் ஊடகம் செய்தி வெளியிட்டதை அடுத்து பிரதமரின் இந்தப் பதில் வந்துள்ளது.

# தேர்தல் செயலகத்தில் இன்று கலந்துரையாடல்

அரசியல் கட்சி உறுப்பினர்கள் மற்றும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்துக்கும் இடையில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

இன்று முற்பகல் 10 மணியளவில் தேர்தல்கள் செயலகத்தில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. தேர்தல்கள் பெயர் இடாப்பு திருத்தம் குறித்து இந்தக் கலந்துரையாடலில் பேசப்படவுளளது. இதேவேளை எதிர்வரும் தேர்தல்கள் குறித்தும் பேசப்படும்.

# பச்சை மிளகாய் திருடியவர் கைவிலங்குடன் தப்பியோட்டம்

பச்சை மிளகாய் திருடிய குற்றச்சாட்டின் கீழ் கைதாகி புறக் கோட்டை 'மெனிங் காய்கறிச் சந்தையின் பொலிஸ் காவலரனில் கதிரையுடன் கை விலங்கு பிணைக்கப்பட்ட நிலையில் இருந்த சந்தேகநபர் அந்தக் கதிரையையே தூக்கிக்கொண்டு தப்பிச்சென்ற சம்பவமொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வெளியிடங்களிலிருந்து மெனிங் சந்தைக்கு மொத்த வியாபாரிகள் கொண்டுவரும் பச்சை மிளகாய் மூடைகளிலிருந்து இவர் சிறிது சிறிதாகத் திருடி வந்திருக்கிறார்.

ஒருசில நாட்களாக இவரது திருட்டை அவதானித்து வந்த வியாபாரிகள் சிலர் இவரைக் கையும் மெய்யுமாகப் பிடித்து மெனிங் சந்தை பொலிஸ் காவலரனில் ஒப்படைத்துள்ளனர்.

அங்கிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் அவரது ஒரு கையில் விலங்கைப் பூட்டி அதன் மறுமுனையை கதிரையொன்றுடன் பிணைத்து வைத்திருந்தனர். பொலிஸாரின் கவனம் வேறு பக்கம் திரும்பிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்ட சந்தேகநபர், தன்னைப் பிணைத்து வைத்திருந்த கதிரையையும் தூக்கிக்கொண்டு தப்பிச் சென்றுள்ளார்.

பச்சை மிளகாயின் விலை மிகவும் உயர்ந்துள்ள இந்தச் சமயத்தில் சந்தேகநபர் சிறிது சிறிதாகத் திருடிய மிளகாயின் பெறுமதி சுமார் இரண்டு இலட்சம் ரூபாவுக்கும் அதிகமென சம்பந்தப்பட்ட வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். சந்தேகநபரைக் கைதுசெய்ய புறக்கோட்டை பொலிஸாரும் மெனிங் சந்தை காவலரண் உத்தியோகத்தர்களும் இணைந்து செயற்படுகின்றனர்.

# காணாமற் போன உறவுகளுக்கு அச்சுறுத்தல் விடுக்கவில்லை

## மக்ஸ்வெல் பரணகம தெரிவிப்பு

காணாமற் போனவர்களைக் கண்டறிவதற்கான ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகளுக்கு முன் சாட்சியமளிக்க கூடாதென காணாமற் போனவர்களின் உறவினர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படவில்லை எனத் தெரிவித்திருக்கும் ஆணைககுழுவின் தலைவர் மகஸ்வெல் பராக்கிரம பரணகம, தனிப்பட்ட பிரச்சினைகள் காரணமாகவே சாட்சியமளிக்க வரவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்திற்கான விசாரணைகள் நிறைவடைந்திருக்கும் நிலையில், ஆணைக்குழுவின் விசாரணைகளில் கலந்து கொள்ளக் கூடாதென காணாமற் போனவர்களின் உறவினர்களுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்கள் தொடர்பாக விளக்கமளிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்திருக்கின்றார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஆணைக்குழு விசாரணைகளில் கலந்துகொள்ளக் கூடாதென காணாமற் போனவர்களின் உறவினர்களுக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

அவற்றினடிப்படையில் குறித்த விடயம் தொடர்பாக ஆணைக்குழு விசாரணை மேற்கொண்டுள்ளது. அதனடிப்படையில் தனிப்பட்ட காரணங்களினாலேயே, சாட்சியாளர்கள் விசாரணைகளுக்கு வரவில்லை. சிலர் வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கின்றார்கள்.

இன்னும் சிலர் நோய்வாய்ப்பட்டுள்ளார்கள். இவ்வாறு பல பிரச்சினைகள் உள்ளன. குறிப்பாக ஒரு திருமணத்திற்கு அழைப்பு விடுக்கின்றபோது நாம் அழைக்கும் அனைவரும் கலந்துகொள்கின்றார்களா? இல்லையே. அப்படித்தான். இதுவும் என அவர் தெரிவித்திருக்கின்றார்.

இதேவேளை யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் கிழக்கு மாகாணம் ஆகியவற்றில் இடம்பெற்ற ஆணைக்குழுவின் அமர்வுகளில் கேட்கப்படாத வகையில் புதிதாக சில கேள்விகள் கேட்கப்பட்டிருந்தன.

குறிப்பாக உங்களுடைய பகுதியில் படையினர் இருப்பது உங்களுக்கு பாதுகாப்பானதாக இருக்கின்றதா? படையினர் உங்களுக்கு உதவி செய்கின்றார்களா?

போர் நிறைவடைந்த பின்னர் விடுதலைப் புலிகளுடைய கட்டுப்பாட்டிற்குள் இருந்து படையினரின் கட்டுப்பாட்டிற்குள் செல்லும்போது உங்களை யாரும் தடுத்தார்களா? போர் நடைபெற்ற பகுதிகளில் ஷெல் வீச்சுகள் இடம் பெற்றனவா? யார் அவற்றை ஏவினார்கள்? என்பன போன்ற கேள்விகளை ஆணைக்குழு முல்லைத்தீவு மாவட்டத்தில் கேட்டிருந்தது.

இவ்வாறு கேட்கப்பட்டதற்கு காரணம் என்ன? என ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியதற்கு மற்றைய மாவட்டங்களில் இத்தகைய கேள்விகளை கேட்க வேணடிய தேவை ஆணைக்குழுவிற்கு இருக்கவில்லை.

முல்லைத்தீவு மாவட்ட மக்களே போரினால் அதிகளவில் பாதிக்கப்பட்டவர்கள் எனவே அவர்கள இன்று சுதந்திரமாக இருக்கின்றார்களா? சுமூகமான வாழ்வை வாழுகின்றார்களா? என்பதை அறிந்துகொள்ள வேண்டிய தேவை எமக்கு இருப்பதால் மட்டுமே இந்தக் கேள்விகளைக் கேட்டோம். அதனை விட வேறு உள்நோக்கங்கள் எவையும் ஆணைககுழுவிற்கு கிடையாது. என பதிலளித்த அவர் போர் தொடர்பில் கேட்கப்பட்ட கேள்விகள் எதற்காக? என்ற கேள்விக்கு பதிலளிக்கவில்லை.

இதேவேளை தமது ஆணைக்குழு சுதந்திரமாக விசாரணைகளை தொடர்ந்தும் நடாத்தும் என அவர் தெரிவித்துள்ளார்.

# வறட்சியால் விவசாயத்தை கைவிட்டவர்களுக்கு நிவாரணம்

அநுராதபுரம் மாவட்டத்தில் வறட்சியால் விவசாயத்தை கைவிட்ட விவசாயிகளுக்கு 100 மில்லியன் ரூபாவினை நிவாரணமாக பெற்றுக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கிணங்க மாவட்டத்தின் அனைத்துப் பிரதேச செயலாளர பிரிவுகளிலுமுள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை இலக்காகக் கொண்டு “வேலைக்காக நிதி பெறும் வேலைத் திட்டம்” என்ற பெயரில் இதற்கான செயற்பாடுகள் நடைமுறைப் படுத்தப்படவுள்ளன.

இதன் முதற் கட்டமாக பிரதேச செயலாளர் பிரிவுக்கு இரண்டு மில்லியன் ரூபா வீதம் 22 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன. விவசாய சேவைகள் திணைக்களம். நீர்ப்பாசன திணைக்களம், பொருளாதார அபிவிருத்தியமைச்சு ஆகியவை ஒன்றிணைந்து அநுராதபுரம் மாவட்டத்தின் செயலாளர் அலுவலகத்திற்கூடாக நடைமுறைப் படுத்தப்படவுள்ளன.

இந்த வேலைத் திட்டத்தின் கீழ் ஒரு குடும்பத்திற்கு நாளொன்றுக்கு 500 ரூபா நிவாரணமாக வழங்கப்படும். அதேநேரம் நிவாரணம் மூலம் பயன்பெறுவோரின் உதவியுடன் அந்தந்த பிரதேசங்களில் கைவிடப்பட்ட குளங்கள் புனரமைப்பு செய்யப்படவுள்ளன.

# பின்தங்கிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதே எமது நோக்கமாகும்

## யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஜெகன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எந்தவித அடிப்படை வசதிகளும் அற்ற வறிய பகுதியாக காணப்படும் இப்பகுதி மக்களை அரசியல் நோக்கத்திற்கு அப்பால் நின்று ஒரு வளம் மிக்க வாழ்வாதாரத்தைக் கொண்டவர்களாக உருவாக்குவதற்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஊடாக அனைத்து உதவிகளையும் பெற்றுத்தர நடவடிக்கை செய்கின்றேன் என அமைச்சரின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி.குகேந்திரன் (வி.கே.ஜெகன்) தெரிவித்துள்ளார்.



புன்னாலைக்கட்டுவன் வடக்கு ஜே/208 கிராம அலுவலர் பிரிவு மக்களின் வாழ்வாதார விடயங்கள் தொடர்பாக அப்பகுதி மக்களால் ஒழுங்கு செய்யப்பட்ட மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு நிலைமைகளை பார்வையிட்டபின் மக்கள் மத்தியில் உரையாற்றிய ஒருங்கிணைப்பாளர் மேலும் தெரிவிக்கையில்,

வாழ்வாதாரத்தில் பின்தங்கியவர்களாகக் காணப்படும் மக்களது வாழ்வியலைக் கட்டியெழுப்புவதற்கு எங்களிடம் பல திட்டங்கள் உள்ளன.

ஆனால் அதற்கான அரசியல் பலத்தைத் தருவது மக்களாகிய உங்களது கரங்களில் தான் இருக்கின்றது. இளைஞர்களாகிய நீங்கள் எங்களுடன் ஒற்றுமையாகப் பயணித்தால் உங்களது பகுதியை நாங்கள் விரைவாக அபிவிருத்தி செய்து தர முடியும்.

கிராமப்புற மக்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதனூடாகத்தான் ஒரு சமூகத்தின் வளர்ச்சியை மேம்பாடடையச் செய்ய முடியும். ஏழை மக்களின் வாழ்வாதாரத்தின் வாளர்ச்சியை மையப்படுத்தியது தான் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அரசியல் இலக்கு.

எனவே நிச்சயமாக உங்கள் வாழ்விட மையப்பகுதியில் காணப்படும் மயானத்தை இடம் மாற்றுவதற்கு அமைச்சின் ஊடாக நடவடிக்கை எடுத்துத் தருகின்றேன் என்றார்.

இந்தச் சந்திப்பில் வலி-தெற்கு பிரதேச சபை எதிர்க் கட்சித் தலைவர் அரிகரன், வலி - தெற்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி அமைப்பாளர் வலைன்ரன், வலி - வடக்கு அமைபபாளர் அன்பு ஆகியோருடன் நூற்றுக்கணக்கான மக்களும் கலந்து கொண்டனர்.

## முரசின் இன்றைய பலன்

(11.07.2014 வெள்ளிக்கிழமை)



ஜய வருஷம் ஆனி மாதம் 27 ஆம் திகதி.
சதுர்த்தசி / அமிர்த சித்தம்.
மூல நட்சத்திரம் மு.இ. 08.44 வரை. பின் பூராடம்.
இராகு காலம் 10.29 - 11.59 வரை. சுபநேரம் 05.59 - 07.29 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | நண்பரின் தியாகத்தினால் வெளிநாட்டுக்கு அழைப்பித்தல், நோயைக்குணப்படுத்த ஆயுர்வேத வைத்தியத்தை நாடிச்செல்லல். |
| ரிஷபம் | குடும்பத்தலைவியின் சொல்லைப் புறக்கணித்து உதவப்போய் உபத்திரவம் ஏற்படல், லீசிங்கில் பெற்ற வாகனம் பறிமுதலாகும் அபாய நிலைவருதல். |
| மிதுனம் | பாடங்களைத் தெரிவுசெய்வது சம்பந்தமாக பிள்ளைக்கும் பெற்றோருக்கும் முறுகல்நிலை ஏற்படல், போலியான ஆபரணம் எனச்சந்தேகித்ததால் பணம் கொடுக்காமல் விடல். |
| கடகம் | பெற்றோரின் நோயைக்கருத்தில் கொண்டு ஓய்வு பெற விண்ணப்பம், பணக் கொடுக்கல் வாங்கல் மனதிற்கு திருப்தியளிக்கும் விதத்தில் அமைதல். |
| சிம்மம் | பணம் கேட்டு மிரட்டும் அநாமதேய தொலைபேசியினால் அச்ச உணர்வு, வாடகைக்கு மனை தேடி நீண்ட நாட்களாக அலைந்து இறுதியில் வெற்றிக்கம்பம். |
| கன்னி | பிள்ளைகளின் அழைப்பின் பிரகாரம் பெற்றோருக்கு வெளியூர் செல்லும் யோக நிலை, சிறுவிபத்தினால் இடப்பக்க உறுப்பொன்று பாதிக்கப்படல். |
| துலாம் | அவசரப்பட்டு ஆராயாமல் முடிவெடுத்த விவாகம் மனதிற்கு வேதனை தரல், உற்று நோக்கியதனால் கள்ளப் பணம் பிடிபட்டு திருப்பிக் கொடுத்தல். |
| விருச்சிகம் | அட்டமத்துக் குரு நீங்கியதினால் ஒத்திவைக்கப்பட்ட பயணத்தை தொடர்தல், அன்புக்குரியவருடன் முகம் பார்த்துக் கதைப்பதினால் மகிழ்வு ஏற்படல். |
| தனுசு | தனித்தொழில் பாரிய நட்டத்தை ஏற்படுத்தியதால் பங்கில் சேர விழைதல், ஜோதிடம் கூற மனைக்குவருவோரில் விழிப்பாக இருக்கவும். |
| மகரம் | புதிய கற்கை நெறி பயில பிறந்த இடத்தை விட்டு நக[illegible]ம் செல்லல், குடும்பத்தில் நிலவிக்கொண்டிருந்த மகிழ்ச்சியை வாடகைக்குவந்தவர்கள் தொலைத்தல். |
| கும்பம் | விவாகம் நிறைவேற்றி வைத்த தரகுக் கூலி பெற முடியாது தவித்தல், ஒலிபெருக்கியினால் அமைதி சீர்கெட்டு கல்விச் செயற்பாடு பாதிக்கப்படல். |
| மீனம் | பிரயாணத்தில் எரிபொருள் தீர்ந்ததால் வாகனத்தை உருட்டிச் சென்றதில் சோர்வடைதல், அஷ்டமத்துச்சனி இருப்பதினால் உப காரியத்தை ஒத்தி வைத்தல். |

## மகாகும்பாபிஷேகம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கல்வாய் அருளமிகு வாலையம்மன் கோயில் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 16 ஆம் திகதி புதன் கிழமை நடைபெறவுள்ளது.

ஆரம்பக்கிரியைகள் முதல் நாள் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

கட்டக்கலைஞர் பரமசாமி மகேஸ்வரன் குழுவினரால் அழகுற அமைக்கப்பட்ட இவ்வாலய கும்பாபிஷேகத்தை தர்மகர்த்தா ஆ.சொக்கலிங்கம் தலைமையில் ஆலய பிரதம குரு நடாத்தி வைக்கவுள்ளார். (இ)


## உதவிப்பணம் வழங்கல்

(வரணி)

வரணிப் பிரதேசத்தில் வசிக்கும் நலிவுற்ற, வறுமைக் கோட்டிற்கு உட்பட்டவர்களுக்கு ஆடி மாதத்திற்கான உதவிப்பணம் அஞ்சலகத்தில் வழங்கப்பட்டு வருகிறது.

அத்துடன் 70 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான 1000 ரூபா கொடுப்பனவும் வழங்கப் படுகிறது. (150)

# நயினை நாகபூஷணிக்கு இன்று இரதோற்சவம்



## எம் வாழ்வினை வளமாக்க ரதத்தினில் எழுந்தருள்வாயே!

மஞ்சரிநின் பாதத்தை
மலர்கொண்டு பூசித்த
நஞ்சுமிகு நாகத்தால்
நற்பெருமை பெற்றவளே
நெஞ்சினிலே வஞ்சமின்றி
நினைப்பவர் மனத்தினுள்ளே
வஞ்சி நீ வாழுகின்றாய்
எங்கள் வாழ்வினை ஆளுகின்றாய்
[illegible]ஞ்சுமலைக் கடல்நயினைக்
[illegible]விளக்கே நீயின்று
விஞ்சுபுகழ் இரதமதிலே
வீதிவலம் வந்தருள்வாய்!

ஆர்.இராகுலன் (நயினை)

## பாவவினை அகல பார் எழுந்துவருக!

கண்டேன் நயினை நாகதீப மதில்
செம்மாந்த அருள் பொழியும் தேவிநின்
திருப்பாதம் கண்டேன். அமுதவிழிநோக்கும்
செவ்வதழின் அருள் சுரப்பும் தேன்பாகும்
அருள்பார்வையும் அயர்வு நீக்கும் விழாவும்
திருப்பாத பூசைகண்டு உய்திபெற
இறைவன் மருங்ககலா இறைவி வரம்தா!
பாவவினை அகலப்பார் எழுந்துவா!

பேரின்பநாயகம் (மண்டைதீவு)

## நயினையுறை நாயகியே

அலைகடல்கள் ஆர்ப்பரிக்க
அன்னை உன் புகழ் உரைக்க
அடியவர்கள் புடைசூழ
அரவமதில் வந்திடுவாய்

நயினையுறை நாயகியே
நாக பரமேஸ்வரியே - உன்னை
நாடிவரும் பக்தருக்கு
நல்லருளை தந்திடுவாய்.

கு.அயிலவன் (நயினை)

## நயினையம்பதியில் உறைபவளே!

திங்கள் முகவழகும் செழும்பூ வாசம்நாறும்
செவ்வாயும் புயல் என திரளும் சிகையும்
எங்கள் தாயாக வந்த நாகபூஷணி நீ
திங்கள் தோறும் பூரணையில் நாகம் கடல்
வந்து மலர் சுமந்து அர்ச்சிக்கும் கோவில்
வந்து காண என்ன தவம் செய்தேனோ
பொங்கிவரும் பாவவினையகல தேவி
புனித கங்கையென வந்தருள் கூறு(டு).

மகிழ்நன் (மண்டைதீவு)

## வடம்பிடித்தே தாள் பணிவோம்

அலைகடலோதும் நயினையம்பதியிலே
நாகவல்லியாம் எங்கள் அன்னபூரணி
திருவீதி தன்னிலே தேர்வலம் வருகிறாள்
பார்த்தவர் கண்களெல்லாம் பூக்காதோ
அவ்வளழகை பாடியோர் மனமெல்லாம் குளிராதோ
வடம்பிடித்தே தாள் பணிவோம்
எம்வினைகள் யாவினையும் அழிந்திங்கே
நாகபூஷணி அருள் பெற்றே வாழ்ந்திடுவோம்.

தி.துஷி (நாச்சிமார் கோவிலடி)

# 28 வருடங்களின் பின்னர் இறுதிப் போட்டியில் ஆர்ஜன்ரீனா





உலகக் கிண்ணக் கால்பந்துத் தொடரின் இரண்டாவது அரையிறுதியில் ஆர்ஜன்ரீனா அணி நெதர்லாந்தை வீழ்த்தி 24 வருடங்களிற்குப் பின் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

20ஆவது உலகக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடர் பிரேசில் நாட்டில் நடைபெற்று வருகின்றது. இப்போட்டித் தொடரின் இரண்டாவது அரையிறுதி ஆட்டம் இலங்கை நேரப்படி நேற்று நள்ளிரவு 1.30 மணிக்கு நடைபெற்றது. இதில் உலகத்தரவரிசையில் 5ஆவது இடத்திலுள்ள ஆர்ஜன்ரீனா, மற்றும் 15ஆவது இடத்திலுள்ள நெதர்லாந்து அணிகள் மோதின

ஆரம்பம் முதல் கோல் அடிக்க இரு அணிவீரர்களும் முட்டி மோதிக் கொண்டனர். ஆனால் இரு அணிகளின் கோல் காப்பாளர்களும் எல்லா முயற்சிகளையும் சிறப்பாக தடுத்தனர். இதையடுத்து முதல் பாதி கோல் எதுவும் இல்லாமல் சமநிலை வகித்தது.

பின் பரபரப்பாக ஆரம்பமாகிய இரண்டாவது பாதியில், இரு அணி வீரர்களும் தடுப்பு ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இதையடுத்து போட்டி விறுவிறுப்பற்றுக் காணப்பட்டது. இப்படியே இரண்டாவது பாதி ஆட்டமும் நத்தை வேகத்தில் கழிந்தது. இதன் பின் போட்டி கூடுதல் நேரத்திற்கு சென்றது. இதில் நெதர்லாந்து வீரர்கள் சற்று வேகம் காட்டினர். இருப்பினும் சோர்ந்து போகாத ஆர்ஜன்ரீனா கோல் காப்பாளர் ராமிரோ தனது துடிப்பான ஆட்டத்தால் எல்லா முயற்சிகளையும் தூணாக தடுத்தார்.

இதையடுத்து தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் முதலில் கோல் அடிக்கும் வாய்ப்பை நெதர்லாந்து அணி பெற்றது. நெதர்லாந்து அணிக்கு விலார் அடித்த பந்தை ஆர்ஜன்ரீனா கோல் காப்பாளர் ராமிரோ அருமையாக தடுத்தார். ஆர்ஜன்ரீனா அணிக்கு முதல் வாய்ப்பை கப்டன் மெஸ்சி கோலாக மாற்றினார். தொடர்ந்து நெதர்லாந்து வீரர் ரொபன் கோல் அடித்தார். ஆர்ஜென்ரீனா அணியின் எசிகியூல் காரே இரண்டாவது வாய்ப்பிலும் கோல் அடித்தார்.

இம்முறை நெதர்லாந்தின் வீஸ்லி அடித்த ப்ந்தை ராமிரோ மீண்டும் தடுக்க அர்ஜென்டினா 2-1 என முன்னிலை பெற்றது. தொடர்ந்து ஆர்ஜென்ரீனா வீரர் செர்ஜியோ மற்றொரு கோல் அடித்து 3-1 என வலுவான முன்னிலை கொடுத்தார். நெதர்லாந்து அணிக்கு கிடைத்த நான்காவது வாய்ப்பில் டர்ட் கேயிட் கோலாக மாற்ற போட்டி 3-2 என ஆனது. ஆர்ஜன்ரீனா வீரர் மேக்சி நான்காவது வாய்ப்பையும் கோலாக மாற்ற, நெதர்லாந்து அணிக்கு கடைசி வாய்ப்பு தேவையில்லாமல் போனது.

இறுதியில் ஆர்ஜன்ரீனா அணி, 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று, 24 ஆண்டுகளுக்கு பின் இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது. ஐரோப்பிய அணியான நெதர்லாந்து, உலக கோப்பை தொடரின் இறுதிப் போட்டிக்கு 1974, 1978, 2010 என, மூன்று முறை தகுதி பெற்ற போதும், ஒரு முறை கூட கிண்ணத்தை வென்றது கிடையாது. தற்போது ஐந்தாவது முறையாக நெதர்லாந்து அணி அரையிறுதிக்கு தகுதி பெற்ற போதும் இந்த வாய்ப்பையும் தவறவிட்டது.

## பிரேசிலின் தோல்வியால் உருகியோர்



# கால்பந்து துளிகள்...

- நூற்றாண்டுகால கால்பந்து வரலாற்றில் பிரேசில் பெற்ற மோசமான தோல்வி பற்றி பேஸ்புக், டுவிட்டரில் இரசிகர்கள் கடுமையாக விமர்சித்துள்ளனர். டுவிட்டரில் 3.56 கோடி டுவிட்டரிலும், பேஸ்புக்கில் 20 கோடி பதிவுகளும் செய்யப்பட்டுள்ளன. சமூக வலைதளத்தில் இது கூட ஒரு புதிய சாதனைதான்.
- ஆட்டத்தின் முதல் 29 நிமிடத்திலேயே ஜேர்மனி 5-0 என்ற கோல் கணக்கில் வலுவான முன்னிலை பெற்றது. உலக கிண்ணக் கால்பந்து வரலாற்றில் இது ஒரு புதிய சாதனையாகும். எந்த அணியும் இவ்வளவு குறைவான நேர்த்தில் மிகப்பெரிய முன்னிலையைப் பெற்றதில்லை.
- உலகக் கிண்ணக் கால்பந்துத் தொடரில் அதிக கோல் அடித்த அணி என்ற பிரேசிலின் சாதனையை முறியடித்தது ஜேர்மனி. முதல் 4 கோல் அடித்த போது, பிரேசிலின் 120 கோல்கள் சாதனையை ஜேர்மனி முறியடித்தது. தற்போது ஜேர்மனி 123 கோல்களுடன் உலகக் கிண்ணத் தொடரில் அதிக கோல் அடித்த அணிகள் பட்டியலில் முதலிடத்தை பெற்றுள்ளது.
- பிரேசில் அணியின் கால்பந்து வரலாற்றில் ஜேர்மனி அணிக்கெதிரான அரையில் அடைந்த தோல்வியே மோசமானதாக அமைந்துள்ளது. கடந்த 1920ஆம் ஆண்டு உருகுவே அணிக்கு எதிராக 0-6 என்ற கணக்கில் தோற்றது. அதன் பின்னர் கால்பந்து ஜாம்பவான் என்று அழைக்கப்படும் பிரேசில் அணி இப்படி ஒரு மோசமான தோல்வியைத் தழுவுவது இப்போதுதான்.
- உலகக் கிண்ணக்கால்பந்து தொடரில் எந்த போட்டியிலும் பிரேசில் அணி 5 கோலுக்கு மேல் எதிரணியை அடிக்க விட்டதில்லை. 1938ஆம் ஆண்டு போலந்துக்கு எதிரான போட்டியில் 5 கோல்களை விட்டுக் கொடுத்ததே அதிகபட்சம். அந்த போட்டியில் கூட பிரேசில் 6-5 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுள்ளது. தற்போதுதான் முதல் முறையாக எதிரணியை 7 கோல் வரை அடிக்க விட்டுள்ளது.
- 1938ஆம் ஆண்டிலிருந்து இதுவரை பிரேசில் அணி அரையிறுதியில் தோற்றதே கிடையாது. இதற்கு முன் 6 முறையும் அரையிறுதியில் வெற்றி பெற்றுள்ளது. அரையிறுதியில் தோற்பது இதுவே முதல் முறை.
- உலகக் கிண்ண கால்பந்துத் தொடரின் அரையிறுதியில் 1954இற்குப் பின்னர் நிகழும் மிக மோசமான தோல்வி இதுதான். இதற்கு முன், 1954இல் ஜேர்மனி 6-1 என்ற கணக்கில் ஆஸ்திரியாவை வீழ்த்தியது.
- உலகக் கிண்ணக் கால்பந்துத் தொடரின் அரையிறுதியில் ஒரு அணி 7 கோல் அடிப்பது இதுவே முதல் முறை.
- 2002ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஒரே போட்டியில் 8 கோல்கள் அடிக்கப்பட்டுள்ளன. இதற்கு முன், 2002இல் ஜேர்மனி 8-0 என்ற கோல். கணக்கில் சவுதி அரேபியாவை வென்றது.
- போட்டியை நடத்தும் நாடே மோசமான தோல்வியைச் சந்தித்த சாதனை நிகழ்ந்துள்ளது. இதற்கு முன், 2010இல் தென்னாபிரிக்கா 0-3 என்ற கோல் கணக்கில் உருகுவேயிடமும், 1970இல் மெக்சிக்கோ 1-4 என்ற கோல் கணக்கில் இத்தாலியிடமும், 1958இல் ஸ்வீடன் 2-5 என்ற கோல் கணக்கில் பிரேசிலிடமும் தோற்றன.

## களத்திற்கு வெளியில்...

ஜேர்மனியிடம் 7 கோல் வாங்கி தோற்றதால் பிரேசில் அணியின் மதிப்பு, புகழ் நொறுங்கி விட்டது. பிரேசில் ஆட்டம் மிகவும் மோசமாக இருந்தது. ஜேர்மனி அனைத்து வகையிலும் மிகவும் சிறப்பாக விளையாடியது.

**மரடோனா (ஆர்ஜன்ரீனா முன்னாள் வீரர்)**

ஆர்ஜன்ரீனாவிடம் தண்ட உதை மூலம் தோல்வியடைந்து வெளியெறியது கடுமையானது. அது வலியை ஏற்படுத்துகிறது. நாங்கள் நன்றாகத்தான் விளையாடினோம். இருந்தாலும் இறுதிப்போட்டிக்கு முன்னேறாதது கடுமையான விளைவுக்கு கொண்டு போகும்.

**ரொபன் (நெதர்லாந்து முள்கள வீரர்)**

ஜேர்மனி எங்களை விட மிகச்சிறப்பாக விளையாடினார்கள். எங்களுக்கு இது மிகவும் சோகமான நாள். இப்படியொரு தோல்விக்காக இரசிகர்கள் எங்களை மன்னிக்க வேண்டும். உங்கள் முகத்தில் மீண்டும் சிரிப்பை பார்க்க நான் விரும்புகிறேன்.

**டேவிட் லூயிஸ் (பிரேசில் அணிக் கப்டன்)**

எனது கால்பந்து வாழ்க்கையில் இது மிகவும் மோசமான நாள். ஆட்ட யுக்தி வகுப்பது, யாரை எந்த நிலையில் ஆட வைப்பது உள்ளிட்டவற்றை நானே முடிவு செய்வதால், இந்தத் தோல்விக்கு நானே பொறுப்பேற்[illegible] கொ[illegible]றேன். முதல் கோல் விழுந்தது[illegible] 6 அணி வீரர்கள் திகைத்து போய[illegible] அதன் பின்னர் எல்லாமே எங்களு[illegible] அமைந்தது. பிரேசில் மக்களுக்கு[illegible] களுக்கும் சொல்ல விரும்புவது என்ன[illegible]றால், சிறந்த அணிக்கு எதிராக நாங்கள் எல்லாம் முயற்சிகளையும் மேற்கொண்டோம் என்பது தான். என்றாலும் எங்கள் இலக்கை (இறுதி ஆட்டம்) எட்ட முடியாமல் போனது வேதனை அளிக்கிறது. 5, 6, 7 கோல்களை விட்டுக் கொடுத்த போதிலும் கூட இரசிகர்கள் தொடர்ந்து ஆதரவு அளித்தது பாராட்டுக்குரிய விடயம். அடுத்து 3ஆவது இடத்திற்கான ஆட்டத்தில் வெற்றி பெற முயற்சிப்போம்.

**லூயிஸ் பிலில் ஸ்கோலரி**
**(பிரேசில் அணியின் பயிற்சியாளர்)**

உண்மையைச் சொல்ல வேண்டும் என்றால் என்ன நடந்தது என்பதை எங்களால் விபரிக்க முடியவில்லை. மோசமான தோல்விக்காக எல்லா வீரர்களும் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறோம். அதே நேரத்தில் ஜேர்மனி வலுவான அணியாக ஜொலித்ததையும் மறந்து விடக்கூடாது. எங்களது வீட்டிற்கு சென்று குடும்பத்தினருடன் கட்டித்தழுவி ஆறுதல் தேடிக் கொள்வோம்.

**ஜூலியோ சீசர் (பிரேசில் கோல் காப்பாளர்)**

18 நிமிடங்கள் இடைவெளியில் 5 கோல்கள் விழுந்ததும் அவர்கள் (பிரேசில்) அதிர்ச்சிக்குள்ளாகி விட்டனர். அதிலிருந்து மீள என்ன செய்ய வேண்டும் என்பது அவர்களுக்குத் தெரியவில்லை. முதல் பாதியில் நாங்கள் அருமையாக விளையாடினோம். இந்த வெற்றியால் எங்களை அதிகமாக மதிப்பிட்டுக் கொள்ளக் கூடாது. தொடர்ந்து பணிவாக இருக்க வேண்டியது அவசியம். 2006ஆம்ஆண்டு உலகக் கிண்ணத்தை நடாத்திய போது நாங்கள் நம்பிக்கையுடன் விளையாடினோம். ஆனால் சொந்த மண்ணில் அரையிறுதியில் இத்தாலியிடம் தோற்ற போது நொறுங்கி போனோம். அதேபோன்ற நிலை தான் தற்போது பிரேசில் அணிக்கு ஏற்பட்டிருக்கிறது. அங்குள்ள 20 கோடி மக்களும் அந்த அணி இறுதிப்போட்டிக்கு வர வேண்டும் என்று விரும்பினார்கள். அதனால் பிரேசில் வீரர்கள் நெருக்கடிக்கு மத்தியில் தான் விளையாடியிருப்பார்கள். ஏமாற்றத்தை சந்தித்துள்ள பிரேசில் பயிற்சியாளர் ஸ்காலரிக்காக பரிதாபப்படுகிறேன். அவர் இப்போது எப்படிப்பட்ட மன நிலையில் இருப்பார் என்பது எனக்குத் தெரியும்.

**ஜோகிம் லோ ஜேர்மனி பயிற்சியாளர்)**

இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ள ஜேர்மனி அணிக்கு வாழ்த்துக்ள். அதிர்ச்சிகளால் அடைக்கப்பட்ட பெட்டி போன்றதுதான் கால்பந்து என அடிக்கடி சொல்வேன். பிரேசில் அணி இப்படி தோற்கும் என உலகத்தில் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். ரஷ்யாவில் நடைபெறவுள்ள அடுத்த உலக கிண்ணக் கால்பந்து தொடரில் (2018) ஆறாவது முறையாக பிரேசில் அணி கிண்ணத்தை வெல்ல வேண்டும்.

**பீலே (பிரேசில் முன்னாள் வீரர்)**

இம்முறை கோல் அடிக்கும் போது எனது இடது கால் பாதத்தில் சிறிய காயம் ஏற்பட்டது. இதன் காரணமாக தான் டைவ் அடிக்கவில்லை. எனக்குச் சாதனை முக்கியமல்ல. அணியாக இணைந்து செயற்பட்டது மகிழ்ச்சி தந்தது. தொடர்ந்தும் சிறப்பாக ஆடி கிண்ணத்தை வெல்வதே எமது இலக்கு.

**குளோஸ் (ஜேர்மனி வீரர்)**

மோகனதாஸ் விளையாட்டுக்கழகத்தின் மாபெரும் கரப்பந்து

# ஐங்கரன், வசந்தசிறி, கலைமகள் அரையிறுதிக்கு முன்னேற்றம்

(மட்டுவில்)

மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடாத்தும் மாபெரும் கரப்பந்தாட்டத் தொடரின் பி பிரிவுக்கான போட்டியில் மட்டுவில் ஐங்கரன், சண்டிலிப்பாய் வசந்தசிறி, அச்சுவேலி கலைமகள் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளன.

யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் இடம்பெற்று வரும் இப்போட்டித் தொடர்மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இதில், ஏ. பி என இரு பிரிவுகளாக போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

பி பிரிவுக்கான முதலாவது காலிறுதிப் போட்டியில் மட்டுவில் ஐங்கரன் அ்ணியும், மட்டுவில் வளர்மதி அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய மட்டுவில் ஐங்கரன் அணி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது காலிறுதிப் போட்டியில் அச்சுவேலி கலைமகள் அணியும் மீசாலை சீமா அணியும் மோதின. இதில் மீசாலை 2-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

மூன்றாவது காலிறுதிப் போட்டியில் சண்டிலிப்பாய் வசந்தசிறி அணியும், புத்தூர் கலைமதி பி அணியும் மோதின. இதில் வசந்தசிறி அணி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இதேவேளை, ஏ பிரிவுக்கான முதல் போட்டியில் ஆவரங்கால் மத்தி அணியும் அச்சுவேலி ஸ்ரார் அணியும் மோதின. இதில் ஆவரங்கால் மத்தி அணி 2-0 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன் அணியும், ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும் மோதின. இதில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெற்றது.

இறுதியாக நடைபெற்ற போட்டியில் அச்சுவேலி ஸ்ரார் அணியும் புத்தூர் கலைமதி ஏ அணியும் மோதின. இதில் புத்தூர் கலைமதி அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்றது.

விளையாட்டுச் செய்திகள்

## கனகபுரம் வி.க.வின் மாபெரும் கால்பந்து

கிளிநொச்சி கனகபுரம் விளையாட்டுக் கழகத்தினால் வருடாவருடம் நடத்தப்படும் மாபெரும் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டி கனகபுரம் விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை முதல் நடைபெற்று வருகின்றது.

அணிக்கு 9 பேர் கொண்ட சுற்றுப்போட்டியில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 40இற்கும் மேற்பட்ட கால்பந்தாட்ட அணிகள் பங்குபற்றுகின்றன. விலகல் முறையில் நடைபெறும் இப்போட்டியில் கிண்ணம் வெல்லும் அணிக்கு 20 ஆயிரம் ரூபா பணப்பரிசும் கேடயமும் இரண்டாமிடத்தைப் பிடிக்கும் அணிக்கு 10 ஆயிரம் ரூபா பணப்பரிசும் கேடயமும் வழங்கப்படவுள்ளன.

## மூன்றாவது சுற்றுக்கு முன்னேறிய அணிகள்

(இளவாலை)

ஹென்றீசியன் பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரின் மூன்றாவ்து சுற்றுக்கு யூனியன், ஹென்றியரசர் கல்லூரி, நெடியகாடு, ஞானமுருகன் அணிகள் முன்னெறியுள்ளன.

வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் இளவாலை ஹென்றீசியன் விளையாட்டுக்கழகம் நடாத்தி வரும் ஹென்றீசி்யன் பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடர் ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இப்போட்டித் தொடரின் இரண்டாவது சுற்று ஆட்டங்கள் நேற்று முன்தினம் நடைபெற்றது.

முதலாவது போட்டியில் ஆனைக்கோட்டை யூனியன் அணியும் அராலி பாரதி அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய ஆனைக்கோட்டை யூனியன் அணி 5-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியது.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் ஹென்றியரசர் கல்லூரி அணியும் ஞானகலா அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் ஹென்றியரசர் கல்லூரி அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாவது சுற்றுக்குத் தகுதி பெற்றது.

மற்றுமொரு போட்டியில் வட்டுக்கோட்டை அணியும் நெடியகாடு அணியும் மோதின. இதில் இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் மோதிக் கொண்டன. இதன் காரணமாக இரு அணிகளும் இறுதி வரை கோல் எதனையும் பெற்றுக்கொள்ளவில்லை. நிறைவில் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் நெடியகாடு அணி 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாவது சுற்றுக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் மயிலங்காடு ஞானமுருகன் அணியும், கரவைச்சுடர் அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய ஞானமுருகன் அணி 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியது.

இறுதியாக நடைபெற்ற போட்டியில் ஊரெழு றோயல் அணியும் சக்கோட்டை சவேரியார் அணியும் மோதின. இரு அணிகளும் சிறப்பான முறையில் ஆடியமை பார்வையாளர்களைக் கவர்ந்திதது. இருப்பினும் இரு அணிகளும் தங்களுக்கான கோல் எண்ணிக்கையை அதிகரிக்க இறுதி வரை முட்டிமோதிக் கொண்டன. ஆட்டம் நிறைவுக்கு வந்த வேளை இரு அணிகளும் 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் இருந்தன. இதன் காரணமாக தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் ஊரெழு றோயல் அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாவது சுற்றுக்குத் தகுதி பெற்றது. இச்சுற்றுப் போட்டித் தொடரின் ஏனைய ஆட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதேவேளை இத்தொடரில் கிண்ணம் வெல்லும் அணிக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (48)

## தேவகுமாரன் சிறப்புப் பந்து வீச்சு வென்றது சென். ஜோண்ஸ் கல்லூரி

(யாழ்ப்பாணம்)

தேவகுமாரனின் சிறப்பான பந்து வீச்சின் மூலம் சென். ஜோண்ஸ் கல்லூரி அணி ஆறு ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இரண்டாவது சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதில் சென். ஜோண்ஸ் கல்லூரி பி மற்றும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணிகளுக்கிடையிலான ஒரு நாள் போட்டி நேற்று முன்தினம் சென். ஜோண்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய சென். ஜோண்ஸ் கல்லூரி அணி மதுரனின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் சென். ஜோண்ஸ் கல்லூரி அணி 22.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 79 ஓட்டங்களைப் பெற்றது. இதில் தேவகுமாரன் 17, எமில்டன் 16, துசியந்தன் ஆகியோர் ஆட்டமிழக்காது 14 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மதுரன் 20 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு, டிலக்ஷன் 29 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 80 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி தேவகுமாரனின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறியதுடன் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி 35.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 73 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது. இதில் தனிசன் 23, வருணன் 14 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் தேவகுமாரன் 12 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து, புகழினியன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இதன் மூலம் சென். ஜோண்ஸ் கல்லூரி அணி ஐந்து ஓட்டங்களால் வெற்றிபெற்றது. (எஸ்.பி.)

## இலங்கை அபார வெற்றி

(அம்பாந்தோட்டை)

தென்னாபிரிக்க அணிக்கெதிரான இரண்டாவது ஒரு நாள் போட்டியில் இலங்கை அணி 87 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது.

இலங்கை, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் இரண்டாவது ஆட்டம் நேற்று முன்தினம் அம்பாந்தோட்டையில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய இலங்கை அணி டில்சான், மத்தியூஸ், மஹேல ஜெயவர்த்தன ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தினால் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் இலங்கை அணி 49.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 267 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டில்சான் 86, திரமன்ன 36, மஹேல ஜெயவர்த்தன 48,மத்தியூஸ் 34, பிரியன்ஜன் 24 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் லரென் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 268 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி 38.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 180 ஓட்டங்களைப் பெற்று படுதோல்வியடைந்தது. இதில் அம்லா சிறப்பாக ஆடி சதம் (101) அடித்தார். மற்றும் வில்லியர்ஸ் 29, ஸ்ரெய்ன் 23 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் டில்சான் மூன்று, மலிங்க நான்கு, மெண்டிஸ் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக டில்சான் தெரிவு செய்யப்பட்டார்.

## மின்னொயில் இன்று கரப்பந்து இறுதியாட்டம்

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் நடாத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி இன்றைய தினம் சண்டிலிப்பாய் வசந்தசிறி விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் நடைபெறவுள்ளது.

விலகல் முறையில் நடைபெற்ற இப்போட்டித் தொடரில் தெல்லிப்பளைப் பிரதேச இளைஞர் கழகத்தைச் சேர்ந்த பல அணிகள் மோதிக் கொண்டன. இருப்பினும் இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் சண்டிலிப்பாய் வசந்தசிறி அணியும் இளவாலை மத்தி அணியும் மோதவுள்ளன. கரப்பந்தாட்டத் தொடரில் இரு அணிகளும் பலம் வாய்ந் தவை என்பதால் இறுதிப் போட்டி மிகுந்த விறுவிறுப்புடையதாய் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இப்போட்டி நிகழ்வின் சிறப்பு விருந்தினராக தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அதிபர் மாணிசேகரம் கலந்து கொள்ளவுள்ளார்.

## முரளி விஜய் சதம்; இந்தியா நிதானம்

(லண்டன்)

இங்கிலாந்து அணிக்கெதிரான ஐந்து போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் நேற்று முன்தினம் இங்கிலாந்தின் நெட்கொமில் ஆரம்பமானது நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதல் இனிங்ஸுக்காக ஆடி வரும் இந்திய அணி ஒரு முனையில் விரைவாக விக்கெட்டுக்களைப் பறிகொடுத்து வந்தது. இருப்பினும் மறுமுனையில் நிதானமாக ஆடிய முரளி விஜய் சதமடித்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை கௌரவமான நிலைக்கு இட்டுச் சென்றார். இறுதியில் முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை இந்திய அணி ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 259 ஓட்டங்களைப் பெற்றது. இதில் முரளி விஜய் 122, கப்டன் டோனி 50 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றுள்ளனர்.

# புலிகளின் மீறல் சம்பவங்களை முன் வைப்பதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைமை ஏற்க வேண்டும்

6

— டி.பி.எஸ். ஜெயராஜ் —

ரீ.என்.ஏ அதன் நம்பகத்தன்மையை தக்க வைத்துக் கொள்ள வேண்டுமென்றால் எல்.ரீ.ரீ.ஈ பற்றியும் அது கவனம் செலுத்த தயாராக

உண்மைகளைச் சொல்லும்படி ரி.என்.ஏ வற்புறுத்த முடியும். ஐ.நா. விசாரணையை ஒரு உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவாக மாற்ற முடியும். அதனால் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் மற்றும் உலகத் தமிழர் பேரவை என்பன நாணித் தலைகுனிய நேரிடும்.

ரி.என்.ஏ யினால் இதை செய்ய முடிந்தால் ஏனைய கட்சிகளுக்கு, நிறுவனங்களுக்கு, அரசாங்கங்களுக்கு மற்றும் நாடுகளுக்கு உண்மையாகவே

முன்மாதிரியை பின்பற்றுங்கள்" என்று ரி.என்.ஏ யினால் சொல்ல முடியும்!

மற்றொரு அர்த்தத்தில் ரி.என்.ஏக்கு இது ஒரு மீட்பு வழி. எல்.ரீ.ரீ.ஈ சம்பந்தமாக ரி.என்.ஏ நடித்து வந்த அடிபணிந்து நடக்கும் பாத்திரம் இரக்கத்துக்கு உரியதாக இருந்தது. எல்.ரீ.ரீ.ஈயின் நடத்தைகள் விசாரிக்கப்பட்டால் ரி.என்.ஏயின் நடத்தையும் வெளிச்சத்துக்கு வரும். தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு குரல் கொடுக்காமல் கிட்டத்தட்ட பணயக் கைதிகளைப்போல எல்.ரீ.ரீ.ஈயின் பாதையில் அடியெடுத்து வைத்ததால் அநேகமாக ரி.என்.ஏயும் தவறினைச் செய்துள்ளது.

இருந்தும் ரி.என்.ஏ இந்த அக்கினிப் பிரவேசத்தை

அனுபவித்துள்ளார்கள். தங்களை துரோகிகள் என முத்திரை குத்தி விடுவார்கள் என்கிற அச்சத்தினால் அதைப்பற்றி வெளியிட அவர்கள் தயக்கம் காட்டுகிறார்கள்.

தமிழ் மக்கள் ஒரு கூண்டில் அடைபட்ட மன நிலையில் இருந்ததுடன் மட்டுமல்லாது சொல்லொணா துன்பங்களையும் அதிர்ச்சிகளையும் அனுபவித்துள்ளார்கள். கடந்த காலத்தில் சிறைக் கைதிகளை போல வாழ்ந்த தமிழர்களுக்கு தம்மை மேலும் பலவீனமாக்கும் அந்த புலிப் பாரம்பரியத்தை உடைத்துக் கொண்டு வெளியே வந்து சுதந்திரப் பறவைகளைப்போல பறந்து திரிந்து உண்மையயான விடுதலையை சுவைத்து மகிழ இது உதவும்.

இது நடப்பதற்கு, சோகமானதும் மற்றும் கசப்பானதுமான எல்.ரீ.ரீ.ஈ. கடந்த காலத்தை, எதுவித தடையுணர்ச்சியும் இன்றி பகிரங்கமாக எதிர்க்க வேண்டும்.

சரியானதும் அறிவானதுமான தலைமைத்துவம் வழங்கப்பட்டால் மாத்திரமே இது நடக்கும். ரி.என்.ஏ. இது நடப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பிக்க வேண்டும். தனது 80ஆம் வயதுகளில் உள்ள இராஜவரோதயம் சம்பந்தன், பாராளுமன்றில் தான் வெளிப்படுத்திய மதிநுட்பமான வார்த்தைகள், உண்மையில் அர்த்தமுள்ள செயல்வடிவம் பெறுவதற்கு தலைமை ஏற்பார் எனும் நம்பிக்கை உள்ளது.

2010 நாடாளுமன்ற தோதலில் புலி வேட்பாளர்களுக்கு கட்சியின் பட்டியலில் இடமளிக்க மறுக்கப்பட்டபோதும், பெரும்பான்மையான ரி.என்.ஏ. யினரின் விருப்பங்களுக்கு மாறாக தனி ஆளாக முதலமைச்சர் வேட்பாளராக சி.வி. விக்னேஸ்வரனது வேட்பு மனுவை முன் தள்ளியபோதும், கடந்த காலத்தில் ஆற்றிய தனது சக்திவாய்ந்த செயல்திறன் மிக்க நடவடிக்கைகளை சம்பந்தன் இதிலும் காட்டவேண்டும். அந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் தமிழ் மக்கள் தங்கள் வாக்குகள் மூலம் சம்பந்தனின் நிலைப்பாட்டை மிகப் பெரும்பான்மையாக உறுதிப்படுத்திக் காட்டினார்கள்.

சம்பந்தனின் குல தெய்வமான திருகோணமலை பத்திரகாளி அம்மன், இந்த உன்னத பணியை நிறைவேற்றுவதற்கு அவருக்கு வேண்டிய துணிவையும் பலத்தையும் மற்றும் ஞானத்தையும் கொடுத்தருள வேண்டும்.



இருக்கவேண்டும் என்பதை ரி.என்.ஏ உணர வேண்டும். ஐ.நா. விசாரணை பாரபட்சம் அற்றதாகவும் மற்றும் நியாயமானதாகவும் தோன்ற வேண்டுமானால், எல்.ரீ.ரீ.ஈ.யினை அலட்சியப்படுத்தவோ, கவனிக்காமல் விட்டு விடவோ அல்லது பூசி மெழுகவோ முடியாது.

ஆகவே ரி.என்.ஏ, தமிழ் மக்களிடையே தனக்குள்ள நீடித்த செல்வாக்கினை பயன்படுத்தி, தமிழர்களின் அரசியல் விடுதலைக்காக போராடுவதாக கோரிக்கையிட்ட எல்.ரீ.ரீ.ஈ.யின் கரங்களினால் கசப்பான அனுபவங்களை பெற்ற முக்கிய சாட்சிகளை வாக்குமூலம் வழங்குவதற்காக அணி திரட்ட வேண்டும்.

மேலும் இலங்கைக்கு உள்ளேயும் மற்றும் வெளியேயும் வாழும் தமிழ் மக்களிடம் எல்.ரீ.ரீ.ஈ.யின் மீறல்களை பயமின்றி வெளிப்படுத்தும்படி ரி.என்.ஏ. பகிரங்கமாக அழைப்பு விடுக்க வேண்டும். தற்போது மனித உரிமைகளின் பாதுகாவலர்களாக மறுபிறப்பெடுத்துள்ள அவதாரங்களாக ஜொலிக்கும் தமிழ் புலம்பெயர் செயற்பாட்டாளர்களிடமும் ஐ.நா. விசாரணையில் எல்.ரீ.ரீ.ஈ பற்றிய

பின்பற்றப்பட வேண்டிய ஒரு மதிப்பு மிக்க உதாரணமாக அது திகழும்.

மிகவும் முக்கியமாக ரி.என்.ஏ யினால் அச்சமின்றி உலகத்தை எதிர்கொள்ள முடிவதுடன் "நாங்கள் என்ன செய்கிறோம் என்று பாருங்கள்" என பெருமையுடன் சொல்ல முடியும். இலங்கையில் உள்ள பெரும்பான்மை சமூகத்தினரிடையே உள்ள விமர்சகர்களிடம் கூட "முடிந்தால் எங்கள்

செய்யத்தான் வேண்டும். தவறுகளுக்கு பரிகாரம் செய்வதற்கான ஒருவழி, ஐ.நா. விசாரணையில் எல்.ரீ.ரீ.ஈ யின் மீறல்கள் பற்றிய ஆதாரங்களை சமர்ப்பிப்பதற்கு தலைமையேற்பதே.


இந்த தாமதமான உருமாற்றத்தால் ரி.என்.ஏ சர்வதேச சமூகத்தின் மதிப்பை சம்பாதிக்கும். நிச்சயமாக பாராட்டத்தக்க இந்த நிலைப்பாட்டால் நாட்டிற்கு உள்ளேயும் மற்றும் வெளியேயும் தொல்லை தரும் தமிழ் எதிர்ப்புகளை ரி.என்.ஏ எதிர்கொள்ள நேரிடும். ரி.என்.ஏக்கு உள்ளேயும் மற்றும் புலம்பெயர்ந்தவர்களிடையேயும் உள்ள புலிகள் மற்றும் புலிகள் சார்பு சக்திகள் கோபமும் ஆத்திரமும் அடைந்து கூக்குரலிடலாம். சுய பரிசோதனை மேற்கொள்ளும் சம்பந்தன் மற்றும் இதர வழக்கறிஞர்கள் கடுமையாக தாக்கப்படலாம்.

எனினும் ரி.என்.ஏ. இந்த மகிழ்ச்சியற்ற எதிர்மறையான தாக்குதல்களை எதிர்த்து நின்று தனது விடயத்தில் உறுதியோடு இருக்குமானால் அதன் இறுதி விளைவு தமிழ் மக்களுக்கு கணிசமானளவு நன்மையளிப்பதாக இருக்கும்.

சமூகத்தில் உள்ளவர்களில் மௌனமாக இருக்கும் ஒரு பிரிவினர் எல்.ரீ.ரீ.ஈ. யின் கீழ் அதிகம் இன்னல்களை

# விம்பிள்டன்... விம்பிள்டன்..!








விம்பிள்டன் என்பது ஒரு கிராமம்! அந்தப் பெயருக்குப் பிரபலமான ரென்னிஸ் போட்டி நடக்கும் காலங்களில் மட்டுமே அமர்க்களப்படும். அப்படித்தான், இப்போதும் போட்டிகள் ஜூன் 23 ஆம் திகதி தொடங்கி கடந்த ஞாயிறு வரை அமர்க்களமாக நடந்து முடிந்திருக்கின்றன.

இம்முறை ஆண்கள் பிரிவில் சேர்பியாவைச் சேர்ந்த ஜோகோவிச்சும், பெண்கள் பிரிவில் செக் குடியரசின் பெட்ரா குவிட்டோவாவும் சம்பியன்களாகி உள்ளனர்.

1877 ஆம் ஆண்டு தொடங்கி, இன்று வரை தொடர்ந்து நடைபெறும் ஒரே ரென்னிஸ் போட்டி இதுதான்!

பழைய நம்பர் 2 கோர்ட் என ஒன்று உண்டு. இதனை சம்பியன் வீரர்களின் சமாதி என செல்லமாக அழைப்பர். காரணம், இங்கு ஜோன் மெக்கன்ரோ, போரீஸ் பெக்கர், பீட் சாம்ப்ராஸ், மார்ட்டினாஹிங்கிஸ், வீனஸ் வில்லியம்ஸ் மற்றும் செரினா வில்லியம்ஸ் உட்பட பல பிரபலங்கள் தோற்றுள்ளனர்.

1877 இல் போட்டிகள் துவங்கியபோது, மொத்தம் 22 வீரர்கள் மட்டுமே பங்குபெற்றனர். பார்வையாளர்கள் 220 பேர் மட்டுமே!

1884 இல்தான் பெண்களுக்கென தனியாக ரென்னிஸ் போட்டிகள் துவங்கப்பட்டன.

1922 ஆம் ஆண்டு வரை, முந்தைய ஆண்டு இறுதிப் போட்டியில் ஜெயித்தவர், இறுதி ஆட்டத்தில் மட்டுமே, மற்ற ஆரம்ப ஆட்டங்களில் ஜெயித்து இறுதிச்சுற்றுக்கு வந்தவரை எதிர்த்து ஆடுவார்.

போட்டி இங்கிலாந்தில் துவங்கினாலும் 1936 ஆம் ஆண்டுதான், முதன் முதலாக ஒரு ஆங்கில வீராங்கனை (ப்ரெட் பெர்ரி) விம்பிள்டன் பெண்கள் பட்டத்தை வென்றார்.

ஆண்கள் போட்டியில் கூட ஓர் இங்கிலாந்துக்காரர் (அண்டி முர்ரே) பல ஆண்டுகளுக்குப் பிறகுதான் 2013 இல் வெற்றி பெற்றார்.

பெண் வீரர்களைப் பொறுத்தவரை 1936 இற்குப் பின், ஓர் இங்கிலாந்து வீராங்கனை 1977 இல்தான் வென்றார். அவர் பெயர் வேர்ஜினியா வேட்.

இந்தப் போட்டி நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக நடந்தாலும், ஒரே வீரர் பல ஆண்டுகள் ஜெயிப்பது என்பது 7 தடவைகள்தான் நிகழ்ந்துள்ளது.

அப்படி வென்றவர்களின் பட்டியல் -

வில்லியம் ரென்ஷா - 7 தடவை

பீட் சாம்ப்ராஸ் - 7 தடவை

ரோஜர் ஃபெடரர் - 7 தடவை

இரட்டையர் ஆட்டத்தைப் பொறுத்தவரை மிக அதிக தடவை வென்றவர் டோட் உட்பிரிட்ஜ் - 9 தடவை.

பெண் வீரங்கனைகளைப் பொறுத்தவரை மிக அதிக தடவை வென்றவர் மார்ட்டினா நவரத்திலோவா - 9 தடவை.

உலகில் நடக்கும் மொத்த 4 பிரபலமான ரென்னிஸ் போட்டிகளை இணைத்து "கிராண்ட் ஸ்லாம்" என பெயர் வைத்துள்ளனர். அவை முறையே -

1. அவுஸ்ரேலிய ஓப்பன் - ஃப்ளெக்சிபிள் குஷன் கோர்ட்
2. ஃப்ரெஞ்ச் ஓப்பன் - களிமண் கோர்ட்
3. விம்பிள்டன் - புல்தரை மைதானம்
4. யு.எஸ். ஓப்பன் - ஃப்ளெக்சிபிள் குஷன் கோர்ட்

ஆக, புல்தரையில் நடத்தப்படும் ஒரே பிரமாண்ட போட்டி என்பதால் விம்பிள்டனுக்குத் தனி மதிப்பு உண்டு.

விம்பிள்டனில் மழையினால் விளையாட்டு தடைப்படுவது சகஜம். இருந்தாலும் சென்ரர் கோர்ட்டில் நடைபெறும் முக்கிய போட்டிகள், இப்படி தடையில்லாமல் தொடர, மேலே கூரை 2009 இல் போடப்பட்டது.

2015 ஆம் ஆண்டிலிருந்து, பாரம்பரிய வழக்கத்துக்கு மாறாக போட்டிகள் ஒரு வாரம் தாமதமாக தொடங்கப் போகின்றன.

ஒரு ரென்னிஸ் போட்டிக்கு அதிகபட்சமாகத் தரப்படும் தொகை 1,60,000 டொலர்கள். இந்த ஆண்டு இது மேலும் 10 - 20 சதவீதம் கூடலாம். இந்தப் பரிசு ஆண், பெண் இருபாலருக்கும் ஒரே மாதிரியான தொகையாக இருக்கும்..

# கதறி அழவைத்த காதல்!




"ஒன்பதாம் பிராயத்தன் என் விழிக் கோது காதை சகுந்தலை ஒத்தனள்" என்று, பாரதியார் எழுதியிருப்பது போல், எனக்கும் பன்னிரண்டு வயதில், ஒரு காதல் அனுபவம் ஏற்பட்டது. "வயது முற்றிய பின்னறு காதலே மாசுடைத்து..." என்கிறார் பாரதியார். அதில் மாசு இருந்ததா, இல்லையா என்று எனக்குத் தெரியாது. ஆனால், அவள், மேல் எனக்கு காதல். அவளுக்கு உண்டா என்றும் தெரி யாது. அவள், என்னைச் சுற்றிச் சுற்றி வருவாள் என்னோடு விளையாடுவாள். நானும், அவளும் தனிமையில் பேசி, சிரித்து, தோட்டமெல்லாம் திரிவோம். நான், என்ன சொன்னாலும், விழுந்து விழுந்து சிரிப்பாள். நான் பேசுவதெல்லாம், அவளுக்கு, "ஜோக்" தான். அவளை, ஒரு நாள் காணாவிட்டால், நான் தவித்துப் போவேன். கண்டதும், அப்படி ஒரு மகிழ்ச்சி ஏற்படும்.

நான் வேலை செய்து கொண்டிருந்தேன். அவளோ கான்வென்ட்டில் படித்தாள். மதிய நேரம் வருவாள். மாலை வரை வேலைக்கு டிமிக்கி கொடுத்து, அவளோடு நான் விளையாடுவேன்.

ஒருநாள் அவள் வரும் போது, நான் உடல்நலம் இல்லாததால், தூங்கி விட்டேன். அவள் வந்து பார்த்து விட்டுப் போய் விட்டாள். தூங்கி எழுந்த போது, அவள் நினைவுடனே எழுந்தேன். அவள் வந்து போய் விட்டதாக கூறினர். எனக்கு அந்த ஏமாற்றத்தை தாங்க முடியவில்லை. தனிமையில் போய், மொட்டை மாடியில் கவிழ்ந்து படுத்து, எதையோ இழந்தவனாக சோகம் தாளாமல், கதறிக் கதறி அழுதேன்.

அடுத்த நாள் அவள் வருவாள் தான். ஆனால், அன்று அவளைப் பார்க்காத வருத்தத்தில், அவ்வளவு அழுகை, சோகம்.

அதன்பின், அவள் எங்கோ, நான் எங்கோ பிரிந்த பின், இடையில், ஆறு ஆண்டுகள் கழித்து, எனக்கு பதினெட்டு வயதில், அவளைப் பதினாறு வயதுப் பெண்ணாக, மீண்டும் சந்திக்கும் வாய்ப்பு கிட்டியது. அதுவரையில், அவளது பெயரையும், நட்பையும் மறவாமல், நினைவில் பாதுகாத்து, வைத்திருந்தேன்.

அவள் வரப் போகிறாள் என்று, முன்னாலேயே எனக்கு தெரியும். எனவே, அவள் வருகைக்காக, நான் காத்திருந்தேன். அவளும், வீட்டில் நுழைந்ததும், என் பெயரை கூறி, "எங்கே?" என்று கேட்டு, ஆவலாய் வந்து, கதவைத் திறந்து, நின்றாள்.


அந்த வினாடி, என் காதல், அவள் காலடியில் வீழ்ந்து செத்தது. காரணம், அவள், "நெடு நெடு"வென, என்னை விட, உயரமானவளாக வளர்ந்திருந்தது தான். அதனால், என் மனம் ஏன் மாற வேண்டும்... இது என்ன, "சைக்கோலஜி" என்று, எனக்கு புரியவில்லை.

அவள் என்னோடு மிகவும் ஆர்வத்தோடும், நட்புணர்வோடும் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தாள். அந்தப் பழைய நாட்களை நினைவுறுத்தி, அவள் பேசும் போது, எனக்கு வருத்தமாகவும், ஏன் கோபமாக கூட இருந்தது. "இவள் யார் அந்த அழகான நினைவுச் சித்திரங்களை கலைப்பதற்கு..." என்று, தோன்றியது. அதன் பின், அவளை நான் சந்திக்கவே இல்லை.

**('நினைத்துப் பார்க்கிறேன்' கட்டுரையில், ஜெயகாந்தன்.)**

# மணியைக்கண்டு மிரண்ட மாடு!

1942ஆம் ஆண்டில் வெளிவந்த படம் "ஆராய்ச்சிமணி". மனுநீதிச் சோழன் கதை. மனுநீதிச் சோழனாக அந்நாளில் பிரபல நடிகரும், பாடகருமான பி.பி.ரங்காச்சாரி நடித்தார். மற்றும் எம்.ஆர். சந்தானலக்ஷ்மி, வீணை பாலசந்தர், எஸ்.வரலக்ஷ்மி, என்.எஸ். கிருஷ்ணன், டி.ஏ.மதுரம் நடித்த வெற்றிப்படம் அது. அப்படத்தின் இயக்குநர், திறமையும், கண்டிப்பும் கொண்ட பெரிய இயக்குநரான ஆர்.கே.ராஜா சாண்டோ. உதவி இயக்குநர்கள் கிருஷ்ணன் - பஞ்சு. நடிகர்களும் காட்சிகளும் சரியாக அமையும் வரை விடமாட்டார் ராஜா சாண்டோ. சாண்டோவின் இயக்கத்தில் நடிக்க பெரிய நடிகர்களும் நடிகைகளும் கூட பயப்படுவார்கள். அவ்வளவு கண்டிப்பானவர்.



"ஆராய்ச்சிமணி" கதைப்படி பசுமாடு அரச மாளிகை வாயிலில் கட்டியுள்ள மணியை அடித்து மன்னரிடம் நீதி கேட்க வேண்டும். இளவரசர் விடங்கன் தேரோட்டி வரும் சமயம் பசுவின் கன்று தேர்சக்கரத்தில் அடிபட்டு இறந்துவிட்டது. தாய்ப்பசு ஆராய்ச்சி மணியினை அடிக்க வேண்டிய காட்சிக்கு படப்பிடிப்பு நடந்தது.

ஆனால் மாடு மணியை முட்டாது மிரண்டு ஓடி இரண்டு நாட்கள் படப்பிடிப்பு நடத்த முடியாமல் சாண்டோ மிக வேதனையடைந்த சமயம், உதவி இயக்குநர்களான கிருஷ்ணன் - பஞ்சு மிக்க பயத்துடன் சாண்டோவிடம் "மாடுதான் மணியை முட்டவில்லை. மணியைக்கொண்டு மாட்டை முட்டி படத்தை எடுக்கலாமே" என்றனர். ராஜா சாண்டோவுக்கு மிகவும் ஆச்சரியம். அதன்படி மணியைக் கொண்டு மாட்டை முட்டி படத்தை எடுத்தார். படம் பிரமாதமாக அமைந்தது கண்டு கிருஷ்ணன் - பஞ்சுவை, "பிற்காலத்தில் பிரபலமாக வருவீர்கள்" என்று வாழ்த்தினார். அவர் வாழ்த்துப் பொய்யாகவில்லை.

**('பெரிய மனிதர்கள் அரிய சாதனைகள்' நூலிலிருந்து.)**






# குந்த என ஒரு சொந்த மனை!

**- இடைக்காடு இளைய பண்டிதன்**

உணவு, உடை, உறையுள் இம்மூன்றும் மனித வாழ்வியக்கத்தின் அத்தியாவசிய அடிப்படைத் தேவைகள். முதலிரண்டினையும் நாடோடிகளாக அலைந்தே திரியினும், ஓடோடி உழைத்து அல்லது இரந்தேனும் இயன்றளவில் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் உறையுள் என்கிற இருப்பிடம் (Dwelling) ஒருவரது சுதந்திர (Freedom) மான மற்றும் சுயாதீன (Independence) மான நடைமுறைகளுக்கு வசதியாக இலகுவில் வசமாகாது. "எலிவளையே எனினும் தனி வளைஷயாக வாய்க்கின்ற அதிலும் சுய உரித்துடைய வதிவிடப்பேறே இதற்கு மிகவும் வாகானது.

ஒரு வீட்டை உருவாக்கிக் கொள்வதென்பது எளிதானதல்ல. அது நீண்டதொரு கனவு. சிலருக்குச் சில மாதங்களில் அல்லது சில ஆண்டுகளில் அது சாத்தியப்படுகிறது. பலருக்கு அது எட்டாக்கனியாகவே ஆகி விடுகிறது. அமர மகாகவி பாரதிகூட, சொந்தக்காணி நிலத்தில் அழகிய தூண்கள் அமைந்த வீடு கட்டி வாழ்வதற்கு ஆசைப்பட்டிருக்கிறான். தான் உபாசித்த அன்னை பராசக்தியிடம் இதனைத்தான் அந்தச் சுதந்திரக் கவிஞன் யாசித்திருக்கிறான்!

மாடமாளிகைகள் கூட கோபுரங்கள் என்றெல்லாம் எதிர்பார்க்க வேண்டியதில்லை. எளிமையிலும் சிறப்பினை ஏற்படுத்திக் கொள்ளலாம். சுத்திகரிப்பிற்குச் சுலபமான, சுவாத்தியமான கொட்டகைகள் வாழிடத்திற்குப் போதும். ஆங்கே தென்னை, கமுகு, வான் பயிர்களும், முக்கனித் தருக்களும் காய்கறிவகைச் செடிகொடிகளும் அழகுத்தாவரங்கள் பிறவும் வளவினைப் பசுஞ்சோலையாக வளப்படுத்துவன. மேலும் கால்நடைகளை வளர்த்துப் பராமரிப்பதாற் கழியும் பொழுதுகளும் காலத்தினைப் பெறுமதியாக்கி வருவாய்க்கும் வழிகாட்டுவன.

ரஷ்ய விவசாயப் பெருமக்கள், புதுமனைப் புகுவிழா வைபவங்களில் "வீடு ஒரு விருட்சத்தைப் போல நன்றாக வேரூன்றி நிலத்தை (தரைத்தளத்தை) இறுகப் பற்றிக் கொள்ளட்டும்!" என வாழ்த்துவார்களாம்.

யுத்த சன்னதம் ஓய்ந்து போயுள்ள இன்றைய சூழலில், எமது பிரதேசங்களிலும் வீடமைப்புத் திட்டங்கள் துரித உருப்பெற்றுள்ளன.

அரசியல் மாச்சரியங்களுக்கு (Political formalities) அப்பாலும், ஆச்சரியங்களுக்கு அருகதையுடையனவாக அழகும் அடக்கமும் அடங்கிய வீடுகள் விரைந்து எழுகின்றன. சேதமுற்ற வீடுகளின் உரிமையாளர்களும், சொந்த வீடுகள் அற்றோரும் தகுதிகாண் முறையில் இத்திட்டத்தில் உள்ளீர்க்கப்பட்டுப் பயன் பெற்றுக் கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறான சமூக நல முன்னெடுப்புகளைப் பொறுத்தவரை சரி பிழைகள், குறை நிறைகள் சார்ந்த சர்ச்சைகளுக்கு முற்றுப்புள்ளியிடல் என்பது முழுமையாகாச் சங்கதி. முன்னணியில் நிவாரணம் பெற்றோர் நிறைவடைவர். இதிற் தவறிய மற்றோர் தமக்கான மறு சந்தர்ப்பத்தில் நம்பிக்கையற்று அதிருப்தியுற்று அங்கலாய்த்துக் கொள்வர். இதுவே எதார்த்தம்!

இந்நடப்புகளுக்கு இடையில் - அரிதான ஒரு சிலரின் நிலையோ அதி அவலமானது. இவர்கள் தமது வசதியான வதிவிடங்களை, போர் அனர்த்தம் காரணமாக அல்ல - அவமாகப் பறிகொடுத்தவர்கள், அநியாய வட்டிகளினால் வீங்கிப் பருத்த அதீத கடன் பளுவைச் சுமந்து தடுமாறி, அதற்கீடாக தமது வீடு வளவுகளை விட்டே விலகியவர்கள். சகசமாக இயங்கிக் கொண்டிருந்த தமது இயல்பு வாழ்வினையும் சடுதியாக இழந்தவர்கள். பெருக்கெடுத்த அப்"பேரவலாறு"களின் "நதிமூலங்கள்" எவையெனப் புரிபடாத புதிர்களுடன் புதை நரகக் குழியினுட் புகுந்தவர்கள்.

தாம் அதிககாலம் அரசோச்சிய சுதந்திர இராச்சியங்கள் அடியோடு கைநழுவிப் போக, அந்நிய இடத்துத் தாழ்வாரங்களில் அகதிகள் போலும் ஒதுங்கி - ஒண்ட நேருகின்ற இவர்களது பரிதாபகர இட மாற்றங்கள். "கலி" முற்றி விட்டதன் அடையாளத் தோற்றங்கள்தாமோ?


தம்வசமாயிருந்த வதிவிடங்களில் சம்பாதித்த வளங்களுடன், அங்கு சம்பவித்த நிகழ்வுகளும் மற்றும் சங்கமித்த உறவுகளும் இவர்தம் நினைவுகளில் நீளவே சஞ்சரிக்கும். இயம்பிட இயலாத இச்சோகம், இவர்களை அணுவணுவாகச் சம்ஹரிக்கும்.

உயிரினுள்ளே ஆழ ஊடுருவி உறைகின்ற உச்சமான துயரமும், கால மருத்துவனாலும் குணப்படுத்துவதற்கரிதான கடும் இரணமும் இதுவே!


வீடு பறிபோவதே வாழ்வு சிதைவதற்கான முதல் அறிகுறி. எத்தனை கடன்கள் சுமைகளாக அழுத்தினாலும் வீடு இருக்கும் வரை ஒரு தெம்பு இருக்கும். "ஏதோ எம் புண்ணியத்தில் எல்லாம் திரும்பக் கிடைத்து விடும்" என்ற அசட்டு நம்பிக்கையும் கூடவே பிறக்கும். ஆனால் வீட்டை இழந்த பிறகோ, வாழ்வில் எஞ்சுவதெல்லாம் போக்கிடமற்ற தனிமையும், அவமானமுந்தான்!

இவர்க்கான தேறுதற்தெரிவு "குந்த என ஒரு சொந்த மனை". இல்லிடம் இழந்து தவிப்போர்க்கு ஆறுதல் பரிசு என அமைவது அதுவே!

# வெற்றி வெளியீடுகளுடன் வீறுநடை போடுகின்றது மாதகல் சென் யோசப் மகாவித்தியாலயம்



அதிபர்
J.A.E. பங்கிராஸ்
SLPS 2 -11



பாடசாலை ஆசிரியர்கள்.



உப அதிபர்
திரு. செ. ஈஸ்வரன்
SLTS 2 -1

தரம் 5 புலமைப்பரிசிற் பரீட்சைப்பெறுபேற்றுப் பகுப்பாய்வு

| வருடம் | தோற்றியோர் | சித்தியடைந்தோர் | சித்தி சதவீதம் |
|---|---|---|---|
| 2009 | 10 | 00 | 00% |
| 2010 | 06 | 01 | 16.67% |
| 2011 | 05 | 01 | 20% |
| 2012 | 04 | 01 | 25% |
| 2013 | 03 | 00 | 00% |

யா/மாதகல் சென் யோசவ் ம.வி.

க.பொ.த (சா/த) பரீட்சைப் பெறுபேற்றுப் பகுப்பாய்வு

| வருடம் | பாடம் | தோற்றியோர் | சித்தியடைந்தோர் | சித்தி வீதம் |
|---|---|---|---|---|
| 2011 | தமிழ் | 45 | 38 | 84% |
| | ஆங்கிலம் | 45 | 6 | 13% |
| | கணிதம் | 45 | 24 | 53% |
| | விஞ்ஞானம் | 45 | 11 | 25% |
| | வரலாறு | 45 | 28 | 62% |
| | சைவநெறி | 16 | 14 | 88% |
| | கத்.திருமறை | 29 | 29 | 100% |
| | குடியுரிமை | 31 | 21 | 68% |
| | புவியியல் | 4 | 4 | 100% |
| | வணிகக்கல்வி | 10 | 9 | 90% |
| | சித்திரம் | 18 | 12 | 67% |
| | சங்கீதம் | 21 | 21 | 100% |
| | நடனம் (பரதம்) | 6 | 6 | 100% |
| | தக.தொட.தொழி. | 3 | 2 | 67% |
| | விவசாயம் | 11 | 9 | 82% |
| | கடல் வளம் | -- | -- | -- |
| | மனைப் பொரு. | 11 | 5 | 46% |
| | சுகாதா.உடற்கல்வி | 20 | 16 | 80% |

க.பொ.த (சா/த) பரீட்சைப் பெறுபேற்றுப் பகுப்பாய்வு

| வருடம் | பாடம் | தோற்றியோர் | சித்தியடைந்தோர் | சித்தி வீதம் |
|---|---|---|---|---|
| 2012 | தமிழ் | 36 | 27 | 75% |
| | ஆங்கிலம் | 36 | 7 | 19% |
| | கணிதம் | 36 | 14 | 39% |
| | விஞ்ஞானம் | 36 | 19 | 53% |
| | வரலாறு | 36 | 28 | 78% |
| | சைவநெறி | 19 | 17 | 89% |
| | கத்.திருமறை. | 17 | 16 | 94% |
| | குடியுரிமை | 26 | 17 | 65% |
| | புவியியல் | 2 | 2 | 100% |
| | வணிகக்கல்வி | 8 | 4 | 50% |
| | சித்திரம் | 15 | 13 | 87% |
| | சங்கீதம் | 15 | 14 | 93% |
| | நடனம் (பரதம்) | 5 | 5 | 100% |
| | தக.தொட.தொழி. | 2 | 2 | 100% |
| | விவசாயம் | 3 | 3 | 100% |
| | கடல் வளம் | 2 | 2 | 100% |
| | மனைப் பொரு. | 6 | 6 | 100% |
| | சுகாதா.உடற்கல்வி | 23 | 15 | 65% |

க.பொ.த. (உ/த) பரீட்சைப் பெறுபேற்றுப் பகுப்பாய்வு

| வருடம் | பாடம் | தோற்றியோர் | சித்தியடைந்தோர் | சித்தி வீதம் |
|---|---|---|---|---|
| 2012 | பொருளியல் | 2 | 2 | 100% |
| | புவியியல் | 8 | 7 | 87.55 |
| | வரலாறு | 16 | 16 | 100% |
| | மனைப்பொருளியல் | 9 | 9 | 100% |
| | இந்து நாகரிகம் | 5 | 4 | 80% |
| | கிறிஸ்தவ நாகரிகம் | 1 | 1 | 100% |
| | கர்நாடக சங்கீதம் | 3 | 3 | 100% |
| | கிறிஸ்தவ நாகரிகம் | 6 | 5 | 83.3% |
| | தமிழ் | 25 | 20 | 80% |
| 2013 | பொருளியல் | 1 | 1 | 100% |
| | புவியியல் | 6 | 5 | 83.3% |
| | வரலாறு | 13 | 9 | 69.2% |
| | மனைப்பொருளியல் | 3 | 3 | 100% |
| | இந்து நாகரிகம் | 2 | 2 | 100% |
| | கிறிஸ்தவ நாகரிகம் | 4 | 1 | 25% |
| | பரதநாட்டியம் | 2 | 2 | 100% |
| | கர்நாடக சங்கீதம் | 2 | 2 | 100% |
| | நாடகமும் அரங்கியலும் | 2 | 2 | 100% |
| | தமிழ் | 18 | 11 | 61.1% |

## சாதனையாளர் விபரம்

ஐஊவு வினாவிடைப் போட்டி - 2013
ப.கபராஜ் - வலயமட்டம் - 2 ஆம் இடம்

* ஒலிம்பியாட் கணித வினாவிடைப்போட்டி - 2012
மாகாண மட்டத்திற்கு தெரிவானோர் - ந.கஸ்தூரி - தரம் 11
ச.டிலக்சனா - தரம் 10

* ஒலிம்பியாட் கணித வினாவிடைப்போட்டி - 2013
மாகாண மட்டத்திற்கு தெரிவானோர் - இ.யோகதாஸ் தரம் - 8
க.தணிகைக்குமரன் தரம் - 9

* கணித நாடப்போட்டி - 2012
சிரேஸ்ட பிரிவு - வலய மட்டம் - 2ஆம் இடம்

* புத்தாக்கச் செயற்பாடு
ஆசிரியர் தி. தவரத்தினத்தின் கீழ் வரும் செயற்பாடுகள் தேசிய மட்டத்திற்குத் தெரிவு.
- மீன்பிடி வலைகள் தூய்மையாக்கி
- மீன்பிடி வலைகள் சாயமூட்டி.

* சமூக விஞ்ஞானப் போட்டி - 2012
1. அருமைத்துரை அன்ரன்தர்சன் –தரம் 13 தேசியமட்டம்
2. அ.அன்ரன்டெனிஸ் தரம் 8 தேசியமட்டம் 2ஆம் இடம்
3. இராசேந்திரம் யோகதாஸ் தரம் 7 தேசியமட்டம் 3ஆம் இடம்
4. தியாகராசா திருமால் தரம் 8 தேசியமட்டம் 5ஆம் இடம்
5. செ.யூட்டிலக்சன்.

* தமிழ்த்தினப் போட்டி - 2013
அனுசியா ஜெயராம் பிரிவு III –கட்டுரைவரைதல் வலயம் –2ஆம் இடம்

## பெறுபேறுகள்

தரம் - 5 புலமைப்பரிசில் - 2012
1). சதாசிவம் சஜிதா –162 புள்ளிகள்

**O/L பெறுபேறுகள் - 2011**
1). பீற்றர் அமல்ராஜ் 6A B C S
2). தேவராஜ் ஆன்லியோனிற்றா 4A 2B C 2S
3). நாகலிங்கம் நிருபன் 2A 3B 3C S

**O/L பெறுபேறுகள் - 2012**
1). நடராசா பிரணவன் 2A 3B 4C
2).அசோக்குமாரர் சபேஸ்கரன் 2A 4B 2C
3).அன்ரனிஜெயராஜ் அன்ரனிஜெகின்ஸ் 2A B 5C S

**A/L பெறுபேறுகள் - 2012**
1). ரங்கராஜ் நிந்துசா A B C
2). ஜெயராஜ். நிறோயினி A B C
3). தபேந்திரன் துஜீபா A B C
4). அருமைத்துரை அன்ரன்தர்சன் A 2 C
5). ஜெனனி சவரிப்பிள்ளை A 2C
6). கோபாலசுந்தரம் சிந்துஜா 2B C
7).இராமச்சந்திரன் மதுசாளினி. 2B C

**A/L பெறுபேறுகள் - 2013**
1). அற்புதராச அன்ரனிஜெயராஜ் 2B 1C
2). விநாயகமூர்த்தி ஜெயப்பிரகாஸ் B 2C
3). இராசரட்ணம் யசிந்தா B 2S
4). கிருஸ்ணகுமார் ஜன்சியா 3C
5). கந்தசாமி கிஸ்ணகுமார் 2C S
6). ஜெபநேசன் மேரிடொறின் றில்டா 2C S

**கல்வியியற் கல்லூரி அனுமதி பெற்றோர் - 2011**
1). அற்புதராசா ஜெசிற்றாசெலஸ்ரீன்
2). செல்வசிங்கம் நிரோஜினி
3). கணேசலிங்கம் ஜனனி

**பல்கலைக்கழக அனுமதி பெற்றோர் - 2012**
1). தபேந்திரன் துஜீபா

- அஞ்சலோட்டம் - 17 வயது பிரிவு – 2013
1. ஜே. ஆன் ஜசிந்தா
2. ஜே. ஆன் பற்றிசியா
3. அ. றோஸ்மேரி
4. அ. தனேசியா

4x400m $1^{st}$-மாகாணம்.
4x100m $3^{rd}$- மாகாணம்.

- உதைபந்தாட்டம் பெண்கள் - முதலாம் இடம் - மாகாணம்

| 2012 | 2013 |
|---|---|
| 1). அ.அனற் | 1). அ.அனற் |
| 2). ஜே.ஆன்ஜசிந்தா | 2). ஜே.ஆன்ஜசிந்தா |
| 3). ஜே.ஆன்பற்றிசியா | 3). ஜே.ஆன்பற்றிசியா |
| 4). அ.றோஸ்மேரி | 4). அ.றோஸ்மேரி |
| 5). யூ.மரியயோசேப்பின் | 5). யூ.மரியயோசேப்பின் |
| 6). அ.அன்ரலிசா | 6). அ.தனேசியா |
| 7). யோ.ஜொய்சி | 7). யோ.ஜொய்சி |
| 8). ஆ.மேரிநிசாளினி | 8). கொ.விஜி |
| 9). அ.றியன்சி | 9). ஆ.மேரிநிசாளினி |
| 10). தே.நிதற்சினிகுருஸ் | 10). கி.மேரிதர்விளி |
| 11). S.டன்சிகா | 11). ஆ.கவிற்றா |
| 12). S.புவிதா | 12). ஜெ.ஜெயமலர. |
| 13). இ.பில்விறிற் கியூறியா | 13). இ. பில்விறிற்கியூறியா |
| 14). இ.பில்விறிற் டியூறியா | 14). இ.பில்விறிற்டியூறியா |

விளையாட்டுச் சாதனைகள் - 2012, 2013

| இல | மாணவர் பெயர் | 2012 | 2013 |
|---|---|---|---|
| 1. | ஓ.திலெக்ஸ் | | 400m -$1^{st}$ - மாகாணம் 200m -$1^{st}$ -வலயம் |
| 2. | அ.அனற் | 400m-வர்ணவிருது-தேசியம் 400m -$1^{st}$- மாகாணம் 200m-$1^{st}$-மாகாணம் | 400m-$1^{st}$ - மாகாணம் 200m-$1^{st}$ - மாகாணம் 800m-$1^{st}$ - மாகாணம் |
| 3. | யூ.மரியயோசப்பின் | 400m -$3^{rd}$ - வலயம் | 100m -$2^{nd}$ – வலயம் 100m hu-$2^{nd}$ - வலயம் 400m hu -$2^{nd}$- மாகாணம் |
| 4. | அ.அன்ரநிசா | 400m hu-$1^{st}$-மாகாணம் 400m-$1^{st}$-மாவட்டம் ஈட்டி-$2^{nd}$-மாவட்டம் | 400m hu -$2^{nd}$- மாகாணம் 400m - $2^{nd}$ - மாகாணம் 200m-$1^{st}$ - வலயம் |
| 5. | யோ.யொய்சி | 400m -$2^{nd}$ -வலயம் | 400m- $2^{nd}$ -வலயம் நீளம் - $3^{rd}$-வலயம் |
| 6. | ஆ.நிசாளினி | | ஈட்டி -$2^{nd}$ - வலயம் |
| 7. | ஜெ.யசிந்தா | 100m hu - $3^{rd}$ - வலயம் | 400m hu - $1^{st}$ - மாகாணம் 200m - $2^{nd}$ - வலயம் 100m - $2^{nd}$ - வலயம் |
| 8. | இ.பில்விறிற்டியூறியா | 400m hu- $2^{nd}$ - மாவட்டம் | |
| 9. | ஜெ.பற்றிசியா | 1500m- $2^{nd}$ -வலயம் 800m -$2^{nd}$ -வலயம் | 1500m-$2^{nd}$ -வலயம் 800m-$2^{nd}$ -வலயம் 400m -$2^{nd}$ -வலயம் |

தேசிய மட்ட சாதனையாளர்



செல்வி
அருமைநாயகம்
அனற்
வர்ணவிருது 400M

# யாழ்.வந்த மொரிசன் ஆளுநரைச் சந்தித்தார்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் அவுஸ்ரேலிய குடிவரவு மற்றும் எல்லைப் பாதுகாப்பு அமைச்சர் ஸ்கொட் மொரிசனுக்கு இடையேயான சந்திப்பு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

யாழிற்கு நேற்றுமுன்தினம் விஜயம் மேற்கொண்ட அவுஸ்ரேலிய குடிவரவு மற்றும் எல்லைப் பாதுகாப்பு அமைச்சர் வடமாகாண ஆளுநரை வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் மாலை சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின் போது, வடமாகாணத்தின் அபிவிருத்திகள் மற்றும் சட்டவிரோதமாக அவுஸ்ரேலியாவிற்கு செல்பவர்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டன.

இச்சந்திப்பில், அவுஸ்ரேலிய உயர்ஸ்தானிகர் றொபின் மோடி ...ற்றும் பல அதிகாரிகள் கலந்து ...ாண்டனர்.

இதேவேளை வடக்கில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் குறித்து பெரும் மகிழ்வும் வியப்பும் தெரிவித்தார். அவுஸ்ரேலியாவின் குடிவரவு மற்றும் எல்லைப் பாதுகாப்பு விவகார அமைச்சர் ஸ்கொட் மொரிசன், ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியை சந்தித்துப் பேசிய பின்னர் செய்தியாளர்களுடன் குறுகிய நேரம் உரையாடிய சமயமே இங்கு ஏற்பட்டு வரும் மாற்றங்கள் குறித்து அவர் வியப்புத் தெரிவித்தார். அப்போது அவர் கூறியவை வருமாறு: இலங்கைக்கு குறிப்பாக யாழ்ப்பாண த்துக்கு எனது இரண்டாவது விஜயம் இது. கடந்த ஐந்து வருடங்களாக இங்கு பெரியளவில் இடம்பெற்று வரும் மாற்றங்கள் குறித்து நான் வியப்படைகிறேன். அவை எனது மனதில் ஆழமான பதிவுகளை ஏற்படுத்துகின்றன. இலங்கை மிக கஷ்டமான காலகட்டத்தைக் கடந்து வந்துள்ளது. கடந்த வருடத்தில் இங்கு பார்த்தவற்றை விடவும் நான் இப்போது பாரிய மாற்றங்களைப் பார்க்கிறேன். அதற்காக ஆளுநரையும் புதிய மாகாண நிர்வாகத்தையும் பாராட்ட மட்டுமே என்னால் முடியும். அவர்கள சமூகத்துக்கு நல்ல எதிர்காலத்தை வழங்கவும், நீங்கள் அனைவரும் ஒன்றுகூடி அமைதியாகவும் சுபீட்சமாகவும் வாழவும் எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன் என்றார் (25)



# தாளையம்பதியில் மஹோற்சவம்

(சாவகச்சேரி)


சாவகச்சேரி விளைவேலி தாளையம்பதி அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தினமும் காலை 8.30 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி அபிஷேகம், வசந்த மண்டப பூசையுடன் நிறைவுபெறுவதுடன் மாலை 5 மணிக்கு கிரியைகள் ஆரம்பித்து இரவு 9மணிக்கு விழா நிறைவு பெறும்.

7ஆம் திருவிழாவான புதன்கிழமை 23.ஆம திகதி மாலை 4 மணிக்கு விளைவேலி மருதடி விநாயகர் ஆலயத்தில் வேட்டைத்திருவிழா இடம் பெறும் மறுநாள் வியாழக்கிழமை இரவு 8மணிக்கு சப்பறத்திரு விழாவும் வெள்ளிக்கிழமை 25.ஆம் திகதி மு.ப 10மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் 26ஆம் திகதி சனிக்கிழமை மு.ப 10 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறவுள்ளன.

ஆலய தர்மகர்த்தா ம.பரமேஸ்வரக்குருக்கள் தலைமையில் மஹோற்ச பிரமகுரு வவுனியா சிவஸ்ரீ சிவ. குகநாதக் குருக்கள் மஹோற்சவத்தை நடாத்தி வைக்கவுள்ளார். (இ)

## வெள்ளி நற்சிந்தனை...



## பயணப்பாதை சிறப்பாக அமையட்டும்.

இராமன் இலட்சுமணன், சீதை ஆகிய மூவரும் தண்டக வனத்தில் இருந்த போது அங்கே சுகுப்தி, குப்தி என்ற இரண்டு முனிவர் கன் இருந்தனர்.

இராமன் பணிவுடனும் பக்தியுடனும் அமைதியே உருவமான அந்த முனிவர்களுக்கு உணவு கொடுத்து மிக்க மகிழ்ச்சி அடைந்தான். அவன் கொடுத்த ஆகார தானத்தின் சிறப்பினால் மலர் மாரி பொழிந்தது; மணமுள்ள குளிர்ந்த காற்றும் வீசியது. வேத முரசு முழுங்கிற்று; ஜய ஜயஒலி எழுநதது; மணிமாரி பெய்தது. இவை ஐந்தும் வியப்பிற்கு உரிய செயல்களாகும்.

இராமன் முதலியவர்கள் முனிவர்களிற்கு உணவு கொடுத்த போது அங்கிருந்த மரத்தின் மீது அமர்ந்திருந்த பருந்து உணவு தானமாக வழங்கப்படுவதை பக்தியுடன் பார்த்தது. முனிவரின் உருவத்தைக் கண்டவுடனே அவர்களின் தவத்தின் பெருமையினால் அந்தப் பருந்துக்கு தன் முற்பிறவியின் நினைவுகள் வந்தன.

"முன்பு நான் மனிதப்பிறவியில் இருந்த போது சோம்பலுக்கு உட்பட்டு, விவேகம் இழந்து, தவம் செய்யாமல் காலத்தைக் வீணாகக் கழித்து விட்டேன். அதனால் தான் நான் இந்தக் கீழ்த்தரமான பிறியில் வந்து பிறந்துள்ளேன்.

நான். எந்த வழியைக் கடைப்பிடித்து இந்தப் பிறவியிலிருந்து விடுபடுவது? என்று மனதில் நினைத்த அந்தப் பறவை மரத்திலிருந்து கிழே இறங்கி வந்தது. தரையில் முனிவர்கள் பாதங்களைக் கழுவிய நீரால் அது தன் உடலைப் புனிதப் படுத்திக் கொண்டது. தவத்தோரின் பாதங்களைக கழுவிய தண்ணீரில் பறவை மூழ்கியவுடனே அதன உடல் முழுவதும் பொன் வண்ணமாக ஒளி வீசும் மணியைப் போன்று ஒளிமயமாக ஆகி விட்டது.

இதனைக் கண்ட இராமன் முனிவர்களிடம் "இந்தப் பறவையில் ஏற்பட்ட மாற்றத்திற்கு காரணம் என்ன? என்று கேட்டார்.

சுகுப்தி முனிவர் கூறினார். "முன்பு இந்தப் பறவை செல்வமும் எழிலும் சூழ்ந்த தாண்டகம் என்ற நகரத்திற்கு வேந்தனாக இருந்தது. அப்பொழுது செருக்கினால் நல்லவை தீயவைகளை அறியாமல் மனம் போன போக்குப்படி அலைந்து திரிந்து கொண்டும். தவவலிமை படைத்தும் தியானத்தில் சூழ்ந்தும் இருந்த முனிவர்களுக்கு தொல்லை கொடுத்தும் அவர்களை மரணத்திற்கு உட்படுத்தியும் வந்தான். இதனால் நகரத்தில் போய்ச் சேர்ந்தான். அங்கிருந்து பல விலங்குப் பிறவிகளிலே சுழன்று, பல இன்னல்களை அனுபவித்து இப்பொழுது இந்தப் பிறவியில் பிறந்துள்ளான் என்றார்.

பிறகு முனிவர் பறவையிடம் "பறவைகளுக்கு அரசனே! நீ அஞ்ச வேண்டாம். நடக்க வேண்டியது நடந்து விட்டது. நடந்ததைப் பற்றிய கவலையை விடு இப்பொழுது நீ தவவிரதத்தைக் கடைப்பிடி இனி உனக்குத் துன்பம் வராது. நீ அமைதியைக் கடைப்பிடி எந்த உயிரையும் கொல்லாதே. பொய் களவு. காமம் ஆகியவற்றை விடு. பிறரிடம் அன்பாகவும் பரிவாகவும் நடந்துகொள். தர்ம வழியைப் பின்பற்று தூய வாழ்க்கை நடத்து.

முனிவர் கூறிய உபதேசப்படி நடந்து விரத்தைக் கைக்கொண்டு உயர்வு பெற்றது.

தீய சிந்தகைகளை அகற்றி வாழ்வில் உயர்வை நோக்கிப் பயணிப்போமாக!

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

# பதிவிருக்கப் பெட்டகம்

ஏன் பிரேசில் கால்பந்து அணியை நான் விரும்புகிறேன்?

எனக்கு கால்பந்து விளையாட்டு நுணுக்கங்கள் பற்றி அதிகம் தெரியாது. ஆனால், பிரேசில் கால்பந்து அணி மீது ஈர்ப்பு இருக்கிறது. அவர்கள் விளையாடும்போது தவறாமல் பார்பபேன். அரையிறுதியில் அவர்கள் தோற்றபோது, அரங்கத்தில் அழுதவர்களுடன்தான் என்னை நெருக்கமாக உணர்ந்தேன். அன்று முழுவதும் வேலையில் மனம் நிலைகொள்ளாமல் இருந்தது. எங்கள் வீட்டுப் பக்கத்தில் ஒரு மாதமாக கலகலப்பாக இருந்த விளையாட்டு மைதானம் இரண்டு தினங்களாக வெறிச்சோடிக் கிடக்கிறது. கேரளாவில் என்னைச்சுற்றி இந்த து... வீட்டு மௌனம் நிலவுகிறது எனப் பார்த்தேன். ஜெர்மன் அணியினர் நன்றாக விளையாடுகிறார்கள், பிரேசில் பயங்கரமாக சொதப்புகிறார்கள் எனத் தெரிகிறது; ஆனாலும், என் மனம் பிரேசில் அணி பக்கம்தான் சாய்கிறது.

இந்த முறை கோப்பையை நெதர்லாந்து வெல்லக்கூடும் என் நினைத்திருந்தேன். அவ்வளவு நன்றாக ஆடி வருகிறார்கள் எனத் தோன்றியது. ஆனாலும், நேற்று ஆர்ஜெண்டீனா வெற்றி பெற்ற போது சந்தோஷமாக இருந்தது.

ஏன் லத்தின் அமெரிக்க அணிகள் பக்கம் என் மனம் சாய்கிறது? ஏன் நம்மவர்கள் அதிகமும் லத்தின் அமெரிக்க அணிகளை விரும்புகிறார்கள்?

நமது வாழ்க்கைக்கும் அவர்கள் வாழ்க்கைக்கும் உள்ள நெருக்கமான ...வுதான் முக்கியமான காரணம் எனத் தோன்றுகிறது. லத்தில... அமெரிக்கக் கதைகளைப் படித்தால் இதனை உணர முடிகிறது. சமீபத்தில் காலம் 44ஆவது இதழில் வெளிவந்துள்ள மார்க்வெஸின் கட்டுரை படித்தேன். அதில் அவர் மனைவி, குழந்தைகள் பற்றி சொல்லும் தகவல்கள், நம் ஊர்க்காரர் ஒருவர் அவரது குடும்பம் பற்றி சொல்வது போலவே இருக்கிறது. மார்க்வெஸ"க்கும் அவரது மனைவிக்கும் இடையேயான காதல், தியாகம் அனைத்தும் நம்மூர் தம்பதிகள் பற்றி படிப்பது போலவே இருக்கிறது. மார்க்வெஸின் 'செவ்வாய்க்கிழமை மதியத் தூக்கம்' கதை ஒரு வண்ணநிலவன் கதையைப் படிப்பது போலவே இருக்கிறது.

இன்னொரு முக்கிய காரணம், தோற்றம். மார்க்வெஸைப் பார்க்க, நம்மூரில் ஏதோ ஒரு கடற்கரை மீனவ கிராமத்தைச் சேர்ந்தவர் போலவே இருக்கிறார். நெய்மர் பார்க்க நம் ஊர் பையன் போலத்தானே இருக்கிறார்.

இப்படி இன்னும் பல காரணங்கள் இருக்கலாம். எனக்கு, இங்கிருந்து – ஐரோப்பிய அணிகளை ஆதரிப்பவர்கள் பற்றித்தான் ஆச்சர்யமாக இருக்கிறது. **– தளவாய் சுந்தரம்**

விளையாட்டை விளையாட்டாக மட்டும் பார்க்கிறவர்கள் ஐரோப்பிய அணிகளைத் தான் ஆதரிப்பார்கள். சிறந்த விளையாட்டு வீரர்கள் உள்ள அணி வெற்றி பெறுவதுதானே விளையாட்டு. ஆனால் மனிதர்கள் எல்லாவற்றையும் தன்னுடைய தன்னிலையோடு இணைத்தே பார்க்கிறார்கள் என்பதுதான் பொது மனநிலையாக வெளிப்படுகிறதோ என்று தோன்றுகிறது. நான் எல்லா விளையாட்டுகளையும் ஓரளவு பார்ப்பேன். ஸ்டெபிகிராபிற்காக டென்னிஸ் பார்த்த எங்கள் கால ஆட்கள் கப்ரியாலா சபாழனிக்குத்தான் ஆதரவு தெரிவிப்பார்கள். மரியா ஸரபோவாவிற்காக பார்க்கும் இக்கால நம் இளையோர் மனம் செரினா அல்லது வீனஸ் தோற்றால் வருத்தம் கொள்கிறது. நம்நாட்டுக் காரர்கள் விளையாடினால் அது வேறுவிதமாக மாறுகிறது.

இந்தியப் பொதுமனம் இந்தியா – பாகிஸ்தான் கிரிக்கெட போட்டி என்றால் இந்தியா வெல்ல வேண்டும் என்றே நினைக்கிறது. இந்தியா விளையாடாதபோது மேற்கத்தைய அணிக்ளான இங்கிலாந்து அல்லது அவுஸ்திரேலியாவுக்கு எதிராகவே நிற்கிறது. விளையாட்டை விளையாட்டாகப் பார்க்க வேண்டும் சினிமாவை சினிமாவாகப் பார்க்க வேண்டும் கவிதையை கவிதையாக வாசிக்க வேண்டும் என்ற பேச்செல்லாம் பேச்சாக் மட்டுமே இருக்கிறதோ என்று தோன்றுகிறது. **– அ.ராமசாமி**

இந்தியாவிலேயே அதிக கால்பந்தாட்ட ரசிகர்கள் உள்ளது கம்யூனிஸ்ட்கள் ஆதிக்கம் செலுத்தும் மேற்கு வங்கத்திலும் கேரளாவிலும். அது ஏன் என்பது ஆராயப்பட வேண்டியது. அதே போல் தரமான சினிமாக்களும் இவ்விரு மாநிலங்களிலிருந்தே தொடர்ச்சியாக வெளியாகின்றன. அதுவும் ஆராய்ச்சிக்குரியதுதான்.

நடிகர் மோகன்லால் பிரேசிலுக்கு கிளம்பிய போது ரசிகர்கள் திரண்டு அவரை வழியனுப்பினர். காரணம் இல்லாமலில்லை. கேரளாவின் முக்கால்வாசி கால்பந்தாட்ட ரசிகர்கள் பிரேசில் ஆதரவாளர்கள் மீதிப்பேர் ஆர்ஜென்டினா ரசிகர்கள்.

**– ஜோண் பாபுராஜ்**

# பெரும்போகத்தில் பாதிப்படைந்த விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு

மன்னார் மாவட்டத்தில் கடந்த பெரும்போகத்தில் பாதிப் படைந்த விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்கும் வைபவம் நேற்றுமுன்தினம் மன்னார் பரப்புக்கடந்தான் பகுதியில் நடைபெற்றது.

பாதிப்படைந்த 50 பேருக்கு 30 இலட்சம் ரூபா பெறுமதியான நஷடஈட்டுத் தொகை காசோலை களாக வழங்கி வைக்கப்பட்டன. மன்னார் மாவட்ட விவசாய காப்புறுதி உதவிப்பணிப்பாளர் ரி.எம்.றிஸ்வி தலைமையில், நடைபெற்ற குறித்த நிகழ்வில் - இலங்கை கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபைத் தலைவர் அரியதிலக தகா நாயக, கமத்தொழில் காப்புறுதி சபை பணிப்பாளர் நாயகம் பண்புக வீரசிங்க, கமத்தொழில் செயற்பாட்டு பணிப்பாளர் சுனில் வீரசிங்க, கமத்தொழில் பிரதிப் பணிப்பாளர் காமினி அமரதுங்க, மன்னார் கமநல அபிவிருத்தி திணைக்கள்த்தின் உதவி ஆணை யாளர் பா.தேவரதன், வங்கி அதி காரிகள் ஆகியோர் அதிதிக ளாகக் கலந்துகொண்டு பயனாளி களுக்கு நஷ்டஈட்டுக்கான காசோலைகளை வழங்கிவைத் தனர்.

இந்த நிகழ்வில் திடீர் விபத் தில் சிக்கி மரணமடைந்த விவ சாயி ஒருவரின் குடும்பத்திற்கு நஷ்ட்ஈடு வழங்கப்பட்டது. 2013, 2014 இல் பெரும்போகத் தில் நஷ்டம் அடைந்த விவ சாயிகளுக்கும் மற்றும் திடீர் விபத்தில் சிக்கி மரணித்த விவ சாயி ஒருவரின் குடும்பத்தினருக் குமாக 50 பேருக்கு காப்புறுதி நஷ்டஈடு வைபவரீதியாக வழங் கப்பட்டது.

இதேவேளை, திடீர் விபத்து காப்புறுதி செய்த விவசாயி ஒருவர் உழவு இயந்திர மூலம் வேலை செய்துகொண்டிருந்த சமயத்தில் கண்ணிவெடி வெடித்து மரணமானார். அவருக்கான காப்புறுதித் தொகையும் இந்த நிகழ்வில் வழங்கப்பட்டது.

இவர் திடீர் விபத்து காப்பு றுதி திட்டத்தில் 760 ரூபா மட்டுமே செலுத்தியிருந்தார். இவ ரது மனைவி இன்றைய தினம் ஒரு இலட்சம் ரூபா நஷ்டஈட் டைப் பெற்றுகொண்டார். அத்துடன் விவசாய திடீர் காப்புறுதி, விவ சாய சுகாதார காப்புறுதியில் புதிதாக இணைந்து கொண்ட விவசாயிகளுக்கு காப்புறுதிப் பத்திரங்களும் வழங்கப்பட்டு அவை ஏற்றுக்கொள்ளப் பட்டன.

# அனர்த்த முகாமைத்துவ அபிவிருத்தி 356 மில்லியன் ரூபா முன்மொழிவு

யாழ் மாவட்டத்தில் அனர்தத முகாமைத்துவ உட்கட்டுமான அபிவிருத்தி முகாமைத்துவ உட்கட்டுமான அபிவிருத்தி என்பவற்றுக்கு நடப்பாண்டு 356 மில்லியன் ரூபா முன்மொழி யப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ வட்டாரங்கள் தகவல் வெளியிடப்பட்டுள் ளன.

யாழ். மாவட்ட உள்ளூராட்சி சபைகள், பிரதேச செயலகங் கள் ஊடாக முன்வைக்கப்பட்ட கருத்திட்டங்கள் மதிப்பிடப்பட்டு அவற்றுக்கான செயற்றிட்டங் களுக்காகவே இந்தத் தொகை முன்மொழியப்பட்டுள்ளது.

இதேவேளை வடமாகாணத் தில் நோய்கள், விபத்துக்கள், தற்கொலைகள், கொலைகள், வாள்வெட்டுக்கள், கலாசார சீரழிவு கள் அதிகரித்துள்ளன.

இவ்வாறான சம்பவங்களால் ஊனமுற்றோரின் எண்ணிக்கை யும் அதிகரிக்கின்றது. எனவே, சகல ஆபத்துக்களையும் தணிப் பதற்கு அனைவரும் அர்ப்பணிப் புடன் செயலாற்ற வேண்டும் என வும் அவ்வட்டாரங்கள் மேலும் தகவல் வெளியிட்டுள்ளன.

# பதிவாளரின் பணிக்கு இடையூறு 5 பெண்களுக்கு 14 நாட்கள் விளக்கமறியல்

சாவகச்சேரி நீதிமன்றப் பதி வாளரை பணியைச் செய்யவிடா மல் தடுத்ததாக கூறப்படும் இயற்றாலைப் பகுதியைச் சேர்ந்த ஐந்து பெண்களை 14 நர்ட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி மாவட்ட நீதவான் ஸ்ரீநிதி நந்தசேகரம் நேற்றுமுன்தினம் உத்தர விட் டார். இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சாவகச்சேரி மாவட்ட நீதி மன்றத்தில் இயற்றாலைப் பகுதி யிலுள்ள காணியொன்றிற்கு எல்லை அமைத்தல் தொடர் பான வழக்கு யூன் 27 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அதற்கு நீதவான் மாவட்ட நீதிமன்ற பதிவாளர் முன்னிலை யில் குறித்த காணிக்கு எல்லை போடும்படி உத்தரவிட்டார்.

அதற்கிணங்க காணி உரிமை யாளர், கடந்த யூன் 30 ஆம் திகதி மாவட்ட நீதிமன்ற பதி வாளர் முன்னிலையில் எல்லை அமைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டவேளை, அங்கு வந்த 5 பெண்கள் எல்லை அமைக்க விடாமல் தடுத்ததுடன், எல்லை அமைக்கும் பகுதியில் படுத் துக்கொண்டனர்.

இந்நிலையில் மாவட்ட நீதி மன்ற பதிவாளர், மேற்படி பெண்களுக்கு எதிராக கொடி காமம் பொலிஸ் நிலையத்தில் கடந்த 3 ஆம் திகதி முறைப் பாடு செய்தார்.

அந்த முறைப்பாட்டின் பிர காரம் 5 பெண்களையும் கடந்த கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்த கொடிகா[illegible] ஸார், அவர்க[illegible] தினம் மாவட்ட[illegible] வான் முன்னிலை[illegible] படுத்தியபோது, நீதவ[illegible] உத்தரவினைப் பிறப்பித்தார்.

## வவுனியாவில் புராதன தொல்பொருட்கள் மீட்பு

வவுனியா சின்னபூவரசங்குளம் பகுதியில் புராதன தொல்பொருட் கள் சில மீட்கப்பட்டுள்ளன. தனியாருக்குச் சொந்தமான விவசாயக் காணி ஒன்றிலிருந்து புராதன தொல்பொருட்கள் கடந்த செவ்வாய்க் கிழமை மீட்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பந்துல ஹரிஸ்சந்திர தெரிவித்தார்.

விவசாய நடவடிக்கைகளுக்காக நிலத்தை பண்படுத்த முற்பட்ட போது, பழைமை வாய்ந்த சிலை ஒன்று மீட்கப்பட்டதை அடுத்து மாவட்ட அரசாங்க அதிபருக்கு தகவல் வழங்கப்பட்டது.

இதனை அடுத்து குறித்த இடத்தில் அகழ்வு மேற்கொள்ளப்பட்டு மேலும் மூன்று சிலைகளும், மட்பாண்டங்கள் சிலவும் மீட்கப்பட் டன. மீட்கப்பட்ட பொருட்கள் தொல்பொருள் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது. குறித்த இடத்தில் தொல்பொருள் அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்படுமானால் மேலும் பல பொருட்கள் மீட்கப்படலாம் எனவும் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தலைவிரி கோலமாக ஆலயத்திற்குள் நுழையாதீர்

## நயினை பரிபாலனசபை அறிவிப்பு

(வேலணை)

நயினாதீவு நாகபூஷணி அம் மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் கடந்த மாதம் 28 ஆம் திகதி சனிக்கிழமை கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வரு கின்றது.

இன்று தேர்த்திருவிழா நடைபெறவுள்ளது. இந் நிலை யில் ஆலயத்திற்கு வருகின்ற பக்தர்கள் குறிப்பாக பெண்கள், ஆலயத்திற்குள் செல்வதாயின் தலைமுடியை தலைவிரி கோல மாக வைத்துக்கொண்டு செல்வதற்கு பரிபாலன சபை தடைவிதித்துள்ளது.

தலைமுடியை கொண்டை போட்டுக்கொண்டு ஆலயத் திற்குள் உட்செல்லமுடியும் என விளம்பரமும் காட்சிப்படுத்தப் பட்டுள்ளது. (05)

# புற்றில் எழுந்து பேரருள் புரியும் புலோலி புற்றளை பிள்ளையார்



தொல் தமிழ் குமரிக்கண்டத்தின் பகு தியான ஈழவளத்தீவில் யாழ். வடமராட்சி பிரிவில் புலவர்கள் பலர் வாழ்ந்ததால் அப்பெயர் பெற்ற புலோலியின் தென் பகுதியில் வயல்களும் பனைகளும் சூழ்ந்த அழகிய மருத நிலத்தில் "தம்பப்பாய்" என வழங்கிய பகுதியில் கி.பி. 1740 அளவில் இக்கோவில் தோற்றம் பெற்றதாக வரலாற்று தக வல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது கோவில் விளங்கும் நிலத் தில் 5 பரப்பு காணிக்குச் சொந்தக்கார ராக இருந்த சிதம்பர விநாயகர் அல்லது சிதம்பரவிநாசியார் எனும் இவ்வூர் உழவர் வரகு விதைப்பதற்காக தற் போது மூலஸ்தானம் உள்ள பகுதியில் நொச்சிப்பற்றையுடன் புற்றினால் சூழப்பட்ட மாமரத்தடியில் புற்றை வெட்டி துப்புர வாக்கியபோது, அப்புற்றில் அழகிய விநாயகர் விக்கிரகம் இருக்கக்கண்டு பெரிதும் மகிழ்ந்து மிகுந்த பயபக்தியுடன் ஊரவர் ஒத்துழைக்க குடிசை அமைத்து அவ்விநாயகருக்கு பூசை செய்து வர லானார். புற்றில் சுயம்பாக பிள்ளையார் தோன்றியதால் இத்தலம் புற்றளைப் பிள்ளையார் என்றும் இவ்வூர் புற்றளை என்றும் பெயர் பெறலாயிற்று.

சிதம்பர விநாயகரின் மகள் மாரான வள்ளியார், சீதேவனார். ஆகியோர் வதிரியைச் சேர்ந்த ஒருவரைக் கொண்டு பூசை செய்வித்தனர். கந்தர் எனபவரை மணந்த வள்ளியாரின் மகனான சுப்பர் சிறிது காலம் பூசை செய்ததாக உறுதியற்ற கருத்து ஒன்று உள்ளது.

சைவப்பண்டாரமாகிய சிவசங்கரக் குருக்கள் 1790 அளவில் இந்திய தமிழ கத்தின் வேதாரணியத்திலிருந்து பருத்தித் துறை வந்தடைந்து மண்டலாய் திருக் கோயில் செல்லும் வழியில் புற்றளை யானை வணங்கி உணவருந்தி மண்ட லாயை சென்றடைந்தார். அன்றிரவு அன் னாரின் கனவில் தோன்றிய புற்றளை பிள்ளையார் "நீ எனக்கு பூசை செய்" என அருட்குறிப்பு உணர்த்தவே, அவர் புற்றளைக்கு திரும்பினார். அப்பெண்மணி களும் ஊரவரும் பெரிதும் மனம் மகிழ்ந்து அவரைப் பூசகராக ஏற்றுக் கொண்டு வேண்டிய உதவிகளைப் புரிய லாயினர். கோவிலும் வளர்ச்சியுறத் தொடங்கியது. பெரிய பண்டாரம் என அழைக்கப்பட்ட இவ் ஐயர் காலத்தி லேயே கோவில் தர்மசாதனம் செய்யப் பட்டது.

## இன்று தேர்த்திருவிழா

இதுவரை ஏழு முதியோர் குழு, திருப்பணிச்சபை எனப் பலவாறு கோவிலை பேணிவந்தபோதிலும் காலத்திற்கு ஏற்ற வகையில் பரிபாலனசபை அமைத்து சிறந்த முறையில் கோவிலை பராமரிப் பது மட்டுமன்றி, மிகுதி வருவாயில் பல்வேறு ஆன்மீக சமூக வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளவேண்டும் என்ற நோக்குடன் பொதுக் கூட்டத்தில் தீர் மானிக்கப்பட்டு 2004 இல் திருப்பணிச்சபை பரிபாலன சபையாக மாற்றப்பட்டது.

எண்ணற்ற சவால்க ளுக்கு மத்தியில் பரி பாலனசபை பல கோவில் திருப்பணிகளை நிறை வேற்றியுள்ளது. அற நெறிப் பாடசாலை அமைத்து சிறப்பாக நடாத்தி வருகின்றது. 2013 இல் கோபுரப் பணி நிறைவாகி கோபு ரக் குடமுழுக்கு நிகழ்த் தப்பட்டது. தவிர பல திருதத வேலைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. இன்னும் பரிபாலன சபைக்கான பணிமனை மற்றும் அறநெறிப் பாடசாலைக்கான கட்டடப்பணி தொடர்கிறது.


140 வருடங்களுக்கு மேல் நிகழ்ந்து வரும் எமது கோவில் ஆண்டுப் பெருந் திருவிழா இம்முறை கடந்த 3 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. இன்றுகாலை 9 மணிக்கு எம்பெருமான் தேரேறி வீதியுலா வந்து பக்த அடியார்களுக்கு அருள்பாலிக்கின்றார்.


நாளை தீர்த்தத் திருவிழா நடை பெறும். எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை வேண்டி அருள் பெற்றுய் வோமாக.

பு.வேல்குமாரி
புலோலி


* கணிதச் செய்கையை அவதானித்து விடை தருக.





16.  = ? (i) 11 (ii) 14 (iii) 12

17.  = ? (i) 12 (ii) 50 (iii) 60

* வினாக்குறி உள்ள இடத்தில் வரும் விடை யாது?


18. 


(i) 45 (ii) 39 (iii) 16

19. 

(i) 15 (ii) 3 (iii) 23

* வினாக்குறி உள்ள இடத்தில் வரும் விடை யாது?

20. 


21. 


இவ் வினாத்தாளுக்குரிய விடைகள் நாளை வெளியாகும்




## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2014


பகுதி - I
1 மணி 15 நிமி




# கல்வி முரசு

* ஒத்த படக் கூட்டத்தின் கீழ் கோடிடுக.


01. 
(i) (ii) (iii)

02. 
(i) (ii) (iii)


03. கீழே தரப்பட்ட கணிதச் செய்கையை அவதானித்து விடைதருக.





C படத்தில் வினாக்குறி உள்ள இடத்துக்கான விடை யாது?


(i) (ii) (iii)

* படத்தில் காட்டியவாறு கடதாசியை மடித்து வெட்டி பிரிக்கும் போது கிடைக்கும் உரு யாது?


04. 

(i) (ii) (iii) (iv)


05. 

(i) (ii) (iii) (iv)

* புள்ளிக் கோட்டில் வரும் விடையைக் கண்டு பிடித்து கீறிடுக.


06. 


(i) 14
(ii) 16
(iii) 18

07. 


(i) 110
(ii) 101
(iii) 100

* கீழே தரப்பட்ட கணிதச் செய்கையை அவதானித்து விடை தருக.



08.  இன் பெறுமானம் என்ன.


(i) 12 (ii) 14 (iii) 16

09.  இன் பெறுமானம் என்ன.


(i) 20 (ii) 32 (iii) 44



* ஆரம்பத்தில் தரப்பட்ட அமைப்பை புள்ளிக் கோடு வழியே வெட்டினால் கிடைக்கும் அமைப்பு யாது?


10. 


(i) (ii) (iii)


11. 


(i) (ii) (iii)


* கீழே தரப்பட்ட கணிதச் செய்கையை அவதானித்து விடை தருக.



12.  இன் பெறுமானம் என்ன? (i) 3 (ii) 4 (iii) 5

13.  இன் பெறுமானம் என்ன? (i) 4 (ii) 2 (iii) 6

14.  இன் பெறுமானம் என்ன? (i) 3 (ii) 8 (iii) 7

15.  = -------- என்ன? (i) 10 (ii) 11 (iii) 12

# "அறிவுச்சாரல்" நூல் வெளியீட்டு விழா





(யாழ்ப்பாணம்)

யாழ். புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலய ஆசிரியர் பி.இரட்ணராஜின் அறிவுச்சாரல் நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் அருட் சகோதரி ம.ஜீவந்தி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின், கௌரவ விருந்தினராக ஆளுநரின் உதவிச் செயலர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம், சிறப்பு விருந்தினர்களாக மாகாண கல்வித் திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.ஜெ.பிரட்லி, கொழும்பு அமைதிகள் வதிவிடம் அருட்திரு.பி.ஜேக்கப் யோகராஜ் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (33)

# மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு புறச்சூழல் தடையாக இருக்கக்கூடாது

## உதயன் எம்.பி.தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளையோ அவர்களது வளர்ச்சியையோ தடை செய்யும் வகையில் எந்தவொரு புறச்சூழல்களிற்கும் இடமளிக்க கூடாது.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்விச்செயற்பாடுகளில் பங்கெடுத்து அவர்களுக்கு ஊக்கமும் ஆதரவும் முழுமையாக வழங்கவேண்டும் என யாழ் மாவட்ட ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் தெரிவித்தார்.

யாழ். அளவெட்டி அருணாச்சலம் வித்தியாலயத்தில் 2014 ஆம் ஆண்டிற்குரிய நிறுவனர் தினமும் பரிசளிப்பு விழாவும் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் அவர் உரையாற்றுகையில்,

கடந்த காலங்களில் நடைபெற்ற இன்னல்கள் காரணமாக எமது பிரதேசங்களில் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள், குடும்ப பொருளாதாரம் போன்றவை வலுவாகவே பாதிக்கப்பட்டுள்ளது எனினும் அவை எவற்றினாலும் மாணவர்களின் கல்விச்செயற்பாடுகள் முடக்கப்படாமல் முன்னேற்றகரமான பாதையில் செல்ல வேண்டும் என்பதுடன் கல்வித் தேவைகளிற்கான அனைத்து வசதிகளும் படிப்படியாக நிறை வேற்றித்தரப் படும் எனவும் தெரிவித்தார்.

மேலும் கிராமிய பாடசாலைகள் வளங்கள் குறைந்தவையாக காணப்படினும் அவை நிவர்த்தி செய்யப்பட்டு கல்வி பயிலும் மாண்வ சமுதாயமானது சகல வசதிகளையும் பெற்று சகல துறைகளிலும் வெற்றி வாகை சூடி தமது பெற்றோருக்கும் பாடசாலைகளுக்கு புகழை பெற்று வழங்கவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டதுடன் பாடசாலை சமூகத்தால் முன் வைக்கப்பட்ட கோரிக்கைகளும் படிப்படியாக நிறைவேற்றப்படும் என தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தெல்லிப்பளை கோட்டக்கல்விப்பணிப்பாளர் சண்முககுலகுமாரன், முன்னாள் பாடசாலை அதிபரும் தற்போதைய ஆசிரிய ஆலோசகருமான நித்தியானந்தம், தெல்லிப்பளை ஈ.பி.டி.பி அமைப்பாளரும் பிரதேசசபை உறுப்பினருமான அன்பு, வலி. தென்மேற்கு பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவர் அரிகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பகிரங்க ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

எல்.பி.பினான்ஸ் நிறுவனத்தில் அடகு வைத்து மீட்காத ஆபரணங்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை மேற்கொள்ளப்படவுள்ளன. வவுனியா, கிளிநொச்சி, சாவகச்சேரி, மானிப்பாய், சுன்னாகம், நெல்லியடி ஆகிய கிளைகளில் ஆகஸ்ட் மாதம் 08, 15, 22, 29 ஆம் திகதிகளில் காலை 10 மணிக்கு பகிரங்க ஏலம் நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது (105)

# விபத்தில் இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முத்திரைச் சந்தியில் நேற்று முனதினம் இடம்பெற்ற மோட்டார் சைக கிள் விபத்தில் இருவர் படுகாயமடைந் துள்ளனர். நேற்று முன்தினம் நண்பகல் 1.30 மணியளவில் முத்திரைச் சந்திக் கருகிலுள்ள சிறிய பாலத்தினுள் வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக் கிள் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதில் ஆசீர்வாதப்பர் வீதி நல்லூ ரைச் சேர்ந்த செ.செபஸ்தியன் (வயது 36), ச.சந்திரகுமார் (வயது 36) என்ற இரு குடும்பஸ்தர்களும் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ)

# கல்விப் பணிப்பாளராக நியமனம்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கல்வி வலயத்தின் கல்விப் பணிப்பாளராக உதயராணி முனிஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் முன்னர் முல்லைத்தீவு வலய பிரதிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி வந்த நிலையில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலனின் பணிப்புரைக்கமைய இவருக்கு இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ........................................

முகவரி :- ........................................


பிறந்த ஆண்டு :- ........................................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்


# உருத்திரபுரம் கிழக்கு நாகபூஷணி அம்பாளுக்கு மகா கும்பாபிஷேகம்



சீரும் திருவும் பொழிய சிவபூமி என இதிகாசங்களால் போற்றப்படும் இலங்கைத் திருநாட்டின் கிளிநொச்சி மாவட்ட வன்னி மாநகரில் நெல்வளம், நீர்வளம், கனிவளம் செழித்த உருத்திரபுரம் கிழக்கு புண்ணிய ஷேத்திரத்தில் வீற்றிருந்து அடியவர்களுக்கு அருளை அள்ளி வழங்கும் எல்லாம் வல்ல அன்னை ஸ்ரீநாகபூஷணி அம்பாளுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இவ்வாலயத்திற்கு 1952 ஆம் ஆண்டுக்கு முன் உருவாகிய வரலாறு உண்டு. 1952 ஆம் ஆண்டு உருத்திரபுரம் குடியேறற கிராமம் உருவாகியபோது யாழ்ப்பாணத்தில் இருந்து வந்து மக்கள் குடியேறினார்கள். அப்போது உருத்திர புரீச்சரம் என்னும் பழைமை வாய்ந்த சிவன் ஆலயத்தைக் காட்டின் மத்தியில் குளக்கரையில் கண்டு மக்கள் வழிபட்டு வந்தனர்.

அதேபோல் இவ் நாகபூஷணி அம் பாள் ஆலயத்திற்கும் வரலாறு ஒன்று உண்டு. கிளிநொசசி ஏ -9 வீதியிலிருந்து 4 கிலோ மீற்றர் தூரத்தில் உருத்திரபுரம் கிழக்கு கிராமத்தில் கனகபுரம், உருத்திரபுரம் எல்லையில் காட்டின் மத்தியில் கந்தன்குளம் நீர்பாயும் ஆற்றோரம் பாரிய ஆல விருட்சத்தின் கீழ் குடிகொண்ட அம்பாளின் காட்சியை ஊர் மக்கள் கண்டு வழிபட்டு வந்தனர். 64 ஆண்டுகளாக சதாரண கிடுகுக் கொட்டகையில் விருட்சத்தின் கீழ் இருந்த அம் பாளை மக்கள் வழிபட்டு வந்தனர். தற்போது இவ்வாலயம் இக் கிராம மககள், அயற் கிராம மக்கள், புலம் பெயர்ந்து வாழும் மக்கள் அம்பாள் அடியார்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து சேர்த்த நிதி மூலம் மூலஸ்தானம், மகா மண்டபம், பரிவாரமூர்த்திகள் என்பன கட்டப் பட்டு மகா கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெறுகின்றது.



**அல்வை சி.தர்மநாதன் கிளிநொச்சி**

– ஆப்கான், உக்ரைன் விவகாரம் –

# நேட்டோ படை செயலாளருடன் அமெரிக்க ஜனாதிபதி ஆலோசனை

ஆப்கானிஸ்தான் மற்றும் உக்ரைன் நிலவரம் குறித்து நேட்டோ படைகளின் பொதுசெயலாளருடன் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா ஆலோசனை நடத்தினார். அமெரிக்காவின் வொஷிங்டனில் உள்ள வெள்ளை மாளிகை அலுவலகத்தில் அமெரிக்க அதிபர் ஒபாமாவை நேட்டோ படைகளின் பொது செயலாளர் ஆண்டர்ஸ் போக் சந்தித்து பேசினார். ஒபாமா மற்றும் ஆண்டர்ஸ் சந்திப்பின் போது, உக்ரைன் விவகாரம் மூலமாக ஐரோப்பாவின் பாதுகாப்புக்கு ரஷ்யா சவாலாக விளங்குவது குறித்தும், ஆப்கானிஸ்தானில் தேர்தல் முறைகேடுகள் காரணமாக நிலவிவரும் அசாதாரணமான சூழ்நிலை குறித்தும் ஆலோசனை நடத்தினர்.



மேலும் 2014இற்கு பிறகு ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்க படைகள் வாபஸ் பெறுவதையடுத்து அங்கு மேற்கொள்ளக் கூடிய திட்டங்கள் குறித்தும், ஆப்கானிஸ்தான் நாட்டுடன் பாதுகாப்பு குறித்தான ஒப்பந்தங்களை நிறைவேற்றுவது குறித்தும் ஆலோசித்தனர். பின்னர் ஆண்டர்ஸ் போக் நிருபர்களிடம் கூறுகையில், 2014 செப்டெம்பரில் நடைபெற உள்ள நேட்டோ மாநாட்டிற்கு முன்பாக பாதுகாப்பு ஒப்பந்தத்தில் ஆப்கான் கையெழுத்திட வேண்டும். இல்லையென்றால் 2014இற்குப் பிறகு அது கடுமையான விளைவுகளை சந்திக்க வேண்டியிருக்கும். என்று எச்சரித்தார். 2014 இக்கு பிறகு ஆப்கானிஸ்தானில் நிறுத்தியுள்ள சுமார் 10 ஆயிரம் அமெரிக்க வீரர்களை வாபஸ் பெறுவதாக கடந்த மே மாதம் ஒபாமா அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாலியல் குற்றச்சாட்டுக்கள் இங்கிலாந்தில் அதிகரிப்பு



இங்கிலாந்தில் இதுவரை கண்டிராத அளவுக்கு மிகப் பெரிய பாலியல் குற்றச்சாட்டுகள் வெளிவந்துள்ளதாக அதிர்சசித் தகவல் வெளியாகியுள்ளது.

இங்கிலாந்தில் அரசியல் ரீதியாக பிரபலமாகியுள்ள அரசியல்வாதிகள் 10 பேர் உட்பட மொத்தம் 20 பிரபலங்கள் இந்தக் குற்றச்சாட்டுகளில் சிக்கியுள்ளனர்.

உயர் பதவியில் இருப்போர், அரசியல்வாதிகள், மூத்த காவல் துறை அதிகாரிகள் மற்றும் சில நீதிபதிகள் மீது நீண்டகாலமாக இந்தக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு வருகின்றன. விரைவில் இவர்கள் விசாரணையை எதிர்நோக்கக்கூடும் என்று குழந்தைப் பருவத்தில் பாதிக்கப்பட்டோரின் தேசிய அமைப்பைச் சேர்ந்த டாக்டர் ஜோன் பர்ட் தெரிவித்துள்ளார்.

குழந்தை பாலியல் குற்றங்களில் ஈடுபட்ட பீற்றர் ரைட்டனுக்கு தண்டனை பெற்றுத்தந்த பீற்றர் மெக்கெல்வி, இந்த குற்றத்தை சக்திவாய்ந்த உயரடுக்கு மக்களின் மோசமான பாலியல் நடவடிக்கைகள் என்று குறிப்பிட்டுள்ளார்.

# 10 மில்லியன் யூரோ பரிசு

(வொஷிங்டன்)

ஈராக்கில் உள்நாட்டு கலவரத்தை நடத்தி வரும் ஐ.எஸ்.ஐ.எஸ்., இயக்கத்தின் தலைவரான அபு பக்கர் அல் பக்தாதி, எங்கு பதுங்கி இருக்கிறார் என்பது குறித்து தகவல் கொடுப்பவர்களுக்கு 10 மில்லியன் டொலர் பரிசு அளிக்கப்படும் என அமெரிக்கா அறிவித்துள்ளது. கடந்த 2012ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட இந்த அறிவிப்பு இப்போதும் அமுலில் உள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. பக்தாதி, ஈராக்கில் தான பிடித்து வைத்துள்ள நகரங்களைக் கொண்டு, தனி நாடு திட்டத்தை பிரகடனப்படுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

உலகச் செய்திகள்

# சந்திரபாபு நாயுடுவின் ஆட்சி கவிழ்ந்துவிடும்

## நடிகை ரோஜா தெரிவிப்பு

தெலுங்குதேச தலைவர் சந்திரபாபு நாயுடு அமுல்படுத்த முடியாத வாக்குறுதிகளைச் சொல்லி ஆட்சியை பிடித்துள்ளார். வாக்குறுதியை நிறைவேற்றாவிட்டால் அவரது சட்டையை பிடித்து கேட்க மக்கள் தயாராகி வருகிறார்கள். ஆந்திர மாநிலம் நகரி தொகுதி எம்.எல்.ஏ. நடிகை ரோஜா தெரிவித்தார்.

ஆந்திர மாநிலம் நகரி நகரசபையில் கே.ஜே.சாந்தகுமார் தலைவராக பதவி ஏற்றுக் கொண்ட விழாவில் பங்கேற்ற நகரி தொகுதி எம்.எல்.ஏ. நடிகை ரோஜா அவருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பின்னர் வெற்றி ஊர்வலம் முடிந்து நடிகை ரோஜா பேசுகையில், நகரி தொகுதியிலும் நகர சபையிலும் பெண்கள் வெற்றி பெற்றுள்ளனர்.சந்திரபாபு நாயுடு ஆட்சி கடைசிவரை நீடிக்காது ஆட்சி பாதியில் கவிழ்ந்து விடும் எனவும் தெரிவித்துள்ளார்.



# 40 மில்லியன் யூரோ இஸ்ரோவுக்கு வருமானம்




(சென்னை)

இந்திய ரொக்கெட் மூலம் வெளிநாட்டு செயற்கை கோள்களை அனுப்பியதில் இஸ்ரோ 40 மில்லியன் யூரோ அளவிற்கு வருமானம் ஈட்டியுள்ளது என இந்திய தகவல்தொழில்நுட்பத்துறை அமைச்சர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் கூறியதாவது, கடந்த 2011ஆம் ஆண்டு முதல் தற்போது வரையிலான கால கட்டத்தில் 15 வெளிநாட்டு செயற்கை கோள் மற்றும் 14 இந்திய செயற்கை கோள்களை விண்ணில் செலுத்தியுள்ளது. இதன் மூலம் சுமார் 39.82 மில்லியன் யூரோ அளவிற்கு வருமானம் ஈட்டியுள்ளது. கடந்த நவம்பர் மாதம் செவ்வாய்க்கு அனுப்பப்பட்டதில் மொத்த செலவு 450 கோடியாகும். இதுவரையில் சுமார் 349.9 கோடி வரை செலவிடப்பட்டுள்ளது. என தெரிவித்தார்.

# தேசிய தலைவராக அமித்ஷா நியமனம்



இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு நெருக்கமான நண்பராக கருதப்படும் அமித்ஷா பாரதீய ஜனதாக் க்ட்சியின் தேசிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மக்களவைத் தேர்தலில் உத்தரப்பிரதேசத்தில் பாரதீய ஜனதாக் கட்சி பாரிய வெற்றிபெறுவதற்கு அமித்ஷா பாரிய பங்காற்றியிருந்தாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மக்களவைத் தேர்தலின் போது உத்தரப் பிரதேசத்தில் தாமாக முன்வந்து பா.ஜ.காவை பலப்படுத்தும் பணிகளை அமித்ஷா ஏற்றிருந்ததுடன் மாநிலத்தின் 80 தொகுதிகளில் 73 இல் பா.ஜ.க அமோக வெற்றிபெற்றிருந்தது.

இந்த நிலையில் பாரதீய ஜனதாக்கட்சியின் தேசியத் தலைவராக அமித்ஷாவை கட்சியின் நாடாளுமன்றக் குழு தெரிவு செய்துள்ளதாக மத்திய உள் விவகார அமைச்சர் ராஜ்நாத் சிங அறிவித்துள்ளார்.

# 63 வார்த்தைகள் கொண்ட மிக நீளமான பெயர்

(லண்டன்)

வாழ்நாளில், தங்களுடைய பெயரை ஒரு முறை இலவசமாக மாற்றிக் கொள்ள, சுவீடன் அரசு அனுமதி அளிக்கிறது. அதற்குப் பிறகு, தங்களுடைய பெயரை மாற்ற விரும்பினால், கட்டணம் செலுத்த வேண்டும்.

சுவீடனில் வசிக்கும் அலெக்சாண்டர்,வயது 25, என்னும் இளைஞர், தன்னுடைய 18ஆவது வயது முதல் இதுவரை, ஆறு முறை தன்னுடைய பெயரை மாற்றியுள்ளார்.பெயர் மாற்றத்திற்காக, இதுவரை, 53,430 ரூபாய் செலவழித்துள்ளார். தற்போது, இவருடைய பெயர், 63 வார்த்தைகள் கொண்டதாக அமைந்துள்ளது.இவ்வளவு நீண்ட பெயரால் என்ன இலாபம் எனக் கேட்டபோது "மிகவும் நீளமான பெயர் அழகாக இருப்பதுடன், எந்தவித அசௌகரியமும் ஏற்படவில்லை. ஏனெனில் என் பெயருக்கு எப்போதும் கடிதங்கள் வந்ததில்லை. "கரண்ட் பில்"கூட தாமதமாக கிடைக்கிறது" என, அந்த இளைஞர் கூறியுள்ளார்.இதற்கு முன், கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம் பெற்ற, எடின்பர்க்கை சேர்ந்தவரின் பெயரில், 29 வார்த்தைகள் உள்ளன.

# அணு மூலப்பொருட்களை ஐ.எஸ்.ஐ.எஸ். கைப்பற்றியது

ஐ. எஸ். ஐ. எஸ் கிளர்ச்சியாளர்கள் அணு மூலப் பொருடகளைக் கைப்பற்றியுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையை ஈராக் எச்சரித்துள்ளது.

மொசூல் நகரிலுள்ள பல்கலைகழகத்தில் விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்காக வைக்கப்பட்டிருந்த மூலப் பொருட்களையே கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியுள்ளனர்.

சுமார் 40 கிலோக்கிராம் நிறையுடைய யுரோனியத்தை கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபைக்கான ஈராக்கிய பிரதிநிதி கடிதமொன்றில் கூறியுள்ளமை ஊடகங்களுக்கு கசிந்துள்ளது.



ஈராக் மற்றும் ஏனைய வெளி நாடுகள் மீது அவற்றை பயன்படுத்தும் அச்சுறுத்தலைத்தடுப்பதற்கு இந்த கடிதத்தின் ஊடாக சர்வதேச நாடுகளின் உதவி கோரப்பட்டுள்ளது.

எனினும் இந்த அச்சுறுத்தலை நிராகரித்துள்ள அமெரிக்கா கைப்பற்றப்பட்ட மூலப்பொருட்கள் செறிவூட்டப்பட்ட யுரேனியமாக இருக்காது என நம்புவதாக கூறியுள்ளது.

இந்த மூலப் பொருட்களைப் பயன்படுத்தி ஆயுதங்களைத் தயாரிப்பது கிளர்ச்சியாளர்களுக்கு கடினமான ஓர் விடயம் என அமெரிக்கா அதிகாரிகள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# இளைஞர் கழகங்களின் அபிவிருத்திக்கு நிதி உதவி

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஒரு இலட்சம் ரூபா நிதியுதவியை சங்கானை பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் மேம்பாட்டுக்காக வழங்கியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் வைத்து அமைச்சர் இந்நிதியுதவிக்கான காசோலையினை நேற்று வழங்கி வைத்தார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கீழான சங்கானை பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் அபிவிருத்திக்காக மேற்படி நிதி வழங்கப்பட்டுள்ளது.

இதன்போது சங்கானை பிரதேசத்திலுள்ள இளைஞர், யுவதிகளுக்கான கல்வி, தொழில் வழிகாட்டல்களுக்கான கருததரங்கு, கலை, பண்பாடு மற்றும் விளையாட்டுத்துறையின் மேம்பாட்டுக்காக இந்நிதி செலவிடப் படவுள்ளது.



இதற்கான காசோலையினை சங்கானை பிரதேசத்திற்கான இளைஞர் சேவை அதிகாரி மதன்ராஜ் அமைச்சரிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

## மாலேசியா...

மாநிலம் சைபர் தைக்கோர் மற்றும் மத்திய செபரங்க பிறை ஆகிய பொலிஸ் நிலையங்களில் இந்த முறைப்பாடுகள் இரண்டும் செய்யப்பட்டுள்ளன.

துணை முதலமைச்சருக்கு எதிராக விசாரணை நடத்தி அவரை கைது செய்ய வேண்டும் எனவும் அந்த முறைப்பாட்டில் கோரப்பட்டுள்ளது.

மலேசியாவின் மே 13 இனக் கலவரத்தை கொண்டு வாருங்கள் என துணைப் பிரதமர் முக்கைதின் யாசினிடம் கூறியதன் மூலம் ராமசாமி இனப் பதற்றத்தை தூண்டிவிட முயற்சித்துள்ளதாகவும் குற்றம் சுமத்தப் பட்டுள்ளது.

இதனடிப்படையில் குறித்த குற்றச்சாட்டின் கீழ் ராமசாமி விசாரிக்கப்பட வேண்டும் என மலாய் அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றின் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

## ஆஸி.யுடன்...

திஸாநாயக்க எழுப்பிய கேள்விக்கு வெளிவிவகார பிரதி அமைச்சர் நியோமல் பெரேரா வழங்கிய பதிலிலேயே இந்த விபரங்கள் தெரிவிக்கப் பட்டுள்ளன.

ஆட் கடத்தல்களை முறியடிப்பது தொடர்பில் இலங்கையும் அவுஸ்ரேலியாவும் நெருங்கிய ஒத்துழைப்புடன் செயற்படுகின்றன என்றும் நியோமல் பெரேரா இதன்போது மேலும் தெரிவித்தார்.

## இராணுவ...

இரு வாகன சாரதிகள் உட்பட 20 பேர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக அவிசாவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து எகெலியகொட பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## ஒருமில்லியன்..

இவர்கள் நான்கு பேரும் இணைந்து யாழ்.நகரப்பகுதியில் உள்ள விடுதியில் தங்கியிருந்து இலங்கை ரூபாவாக மாற்றுவதற்கு பல்வேறு தரப்பினருடனும் தொடர்பு கொண்டு வந்துள்ளனர்.

அதன்போது, இவ்விடயம் யாழ். மாவட்ட பிரதிப பொலிஸ் மா அதிபரின் கீழான புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் கடந்த செவ்வாய்க்கிழமை 4 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட நான்கு பேரையும் யாழ். நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்திய போது நான்கு பேரையும் யாழ். நீதவான் பிணையில் விடுதலை செய்து தீர்ப்பளித்துள்ளார். (25)

## மக்களின்...

என்பது ஒரு இறுக்கமான கட்டிப்பொருளல்ல. அது வளர்த்தெடுக்கப்படக் கூடிய கருத்துக்களை ம் செயற்பாடுகளையும் கொண்ட கொள்கைத் ாகும்.

ந்த சிந்தனை கொழும்புக்கோ தென்பகுதிக்கோ உரியதல்ல. அது நாடு தழுவிய ரீதியில் பாரபட்சமற்ற வகையில் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதுடன் அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் அமையப் பெற்றுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் எவ்விதமான பாரபட்சமற்ற வகையில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் நெறிப்படுத்தலின் கீழ் சமுர்த்தி வேலைத்திட்டம் சிறப்பாக முன்னெடுககப்பட்டு வருகின்றது.

கடந்த காலங்களில் முன்னைய அரசுகளால் நாம் புறந்தள்ளப்பட்டவர்களாக இருந்தோம் என்பதுடன் யுத்தத்தாலும் அதிகளவில் எமது மக்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அதனை ஈடுசெய்யும் வகையில் பல்வேறு செயற்றிட்டங்களை இன்றைய அரசு முன்னெடுத்து வருகின்றது.

ஆனால் தமது அரசியலை முன்னெடுக்கும் வகையில் மக்களை உசுப்பேற்றி மக்களுக்கு தினமும் நஞ்சை ஊட்டுகின்ற விதமாகவும் போதையூட்டுகின்ற விதமாகவும் சுயலாப அரசியல்வாதிகள் செயற்பட்டு வருகின்றனர் என்றும் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில் மக்களுக்கு சரியான திசைவழி காட்டி அவர்களை சரியான திசைவழியில் கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பு ஒவ்வொருவருடைய கடமையுமாகுமெனத் தெரிவித்த அமைச்சர் ஜனாதிபதி தலைமையிலான அரசு எமது நலன்களுக்கு புறம்பாக ஒருபோதும் செயற்பட மாட்டாது என்றும் தெரிவித்தார்.

இதனிடையே எமது மக்களுக்கான நலத்திட்டங்கள் சரியான முறையில் சரியானவர்களை சென்றடைய வேண்டுமென்றும் அமைச்சர் இதன்போது கேட்டுக் கொண்டார்.

மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் உரையாற்றும் போது வாழ்வின் எழுச்சி திட்டத்தின் ஊடாக விவசாயம், கைத்தொழில், மீன்பிடி, கால்நடை போன்ற துறைகள் இம்மாவட்டத்தில் பாரிய வளர்ச்சி கண்டுள்ளது என்றும் இத் திட்டத்தின் ஊடாக மேலும் வளர்ச்சி காணுமென்றும் தெரிவித்தார்.

அத்துடன், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் வாழ்வின் எழுச்சி திட்டத்திற்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தமது அமைச்சின் ஊடாகவும் பல்வேறு உதவிகளை வழங்கி வருகின்றார்.

இந்நிலையில், குறிப்பாக இத்திட்டங்கள் யாவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் சிறப்பான ஒருங்கிணைப்பின் ஊடாக இம்மாவட்டத்தில் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் மேலும் முன்னேற்றங்களை காணுமென்றும் தெரிவித்தார்.

இதன்போது வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்கள மேலதிக பணிப்பாளர் நாயகம் குமாரசிறி, வாழ்வின் எழுச்சித் அபிவிருத்தி திணைக்களப் பணிப்பாளர், ஈ.பி.டி.பியின் வடமாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் தவராசா, மாகாண சமுர்த்தி உதவி ஆணையாளர் மகேஸ்வரன், அமைச்சரின் ஆலோசகர் சுந்தரம் டிவகலாலா, ஆகியோருடன் பிரதேச செயலர்கள் உடன் துறை சார்ந்த பலரும் உடனிருந்தனர்.

இவ்விழிப்புணர்வு செயலமர்வு நேற்றைய தினம் ஊர்காவற்துறை, வேலணை, யாழ்ப்பாணம், நல்லூர், சங்கானை, சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு நடைபெற்றது. அதேவேளை, இன்றைய தினம் ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வட்டக்கச்சி நூலகத்துக்கு புதிய கட்டடம் விரைவில்

கிளிநொச்சி, கரைச்சி பிரதேச சபைக்கு உட்பட்ட வட்டக்கச்சி பொதுநூலகம் 4.2 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருவதாக அப்பிரதேச சபையின் தவிசாளர் நா.வை.குகராசா நேற்று தெரிவித்தார்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் கீழ், முரசுமோட்டை பொதுநூலகம், ஸ்கந்தபுரம் பொதுநூலகம், கிளிநொச்சி நகர பொதுநூலகம், வட்டக்கச்சி பொதுநூலகம் ஆகிய நான்கு நூலகங்கள் இயங்கி வருகின்றன.

இவற்றில் வட்டக்கச்சி பொதுநூலகம் நிரந்தரக் கட்டடம் இன்றி தனியார் கட்டடம் ஒன்றில் இயங்கி வருகின்றது.

இந்நிலையில், கரைச்சிப் பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டத்தில 4.2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நூலகத்திற்கான நிரந்தரக் கட்டடம் அமைக்கும் பணிகள் கடந்த மே மாதம ஆரம்பிக்கப்பட்டதுடன், அதன் பணிகள் எதிர்வரும் டிசம்பர் மாதம் முடிவடையும் என எதிர்பார்ப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# வரணியில் பாம்புக்கடி

(யாழ்ப்பாணம்)

புடயன் பாம்புக் கடிக்கு இலக்காகியநிலையில் இளைஞா ஒருவர் நேற்று யாழ். போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வரணி வடக்கைச் சேர்ந்த இராஜேந்திரன் லுவிதன் (வயது -23) என்ற இளைஞனே பாம்புக் கடிக்கு இலக்கானார்.

நேற்றுக்காலை 6 மணியளவில் தமது காணிக்குச் சென்ற வேளையிலேயே இவர் பாம்புக் கடிக்கு இலக்காகிய நிலையில் யாழ். போதனாவைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டார். இவரைக்கடித்த பாம்பும் போத்தலில் அடைக்கப்பட்டவாறு எடுத்து வரப்பட்டது. (இ)

# தீயில் கருகி இளைஞன் மரணம்

(யாழ்ப்பாணம்)

கடந்த வெள்ளியன்று தனக்குத் தானே மண்ணெண்ணெய் ஊற்றி தீ மூட்டிய இள்ளஞன் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் மாலை உயிரிழந்துள்ளான்.

யாழ்ப்பாணம் மணியந்தோட்டம் 3ஆம் குறுக்கு வீதியைச் சேர்ந்த ஜெயாகரன் அஜித் (வயது-20) என்ற இளைஞனே இவ்வாறு யாழ். போதனாவைத்திய சாலையில் ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டு நேற்று முன்தினம் மாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து யாழ்.பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் நேற்று மாலை பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (இ)

# மாணிக்கக்கல் விற்பனை தெற்கில் ஒருவர் கைது

புதையல் ஒன்றில் கிடைத்ததாகக் கூறப்படும் நீல மாணிக்கக் கல் ஒன்றை 4 கோடி ரூபாவுக்கு விற்பன்ன செய்ய முயற்சித்த ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர் பணி இடைநீக்கம் செய்யப்பட்ட உதவி பொலிஸ் அலுவலர் என பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர், குறித்த நீல மாணிக்கக் கல்லை விற்பனை செய்வதற்காக கலேன்பிந்துனுவெவ பிரதேசத்தில் இருந்து அநுராதபுரம் நோக்கிச் சென்று கொண்டிருந்த போது நேற்று கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட நபர் இன்று நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# அரச சார்பற்ற நிறுவனங்களை மீள்பதிவு செய்ய ஏற்பாடு

உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களை மீள்பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.. அரச சார்பற்ற அமைப்புகளை பாதுகாப்பு அமைச்சின் கீழ் பதிவு செய்வதை கட்டாயமாக்கும் புதிய சட்டமூலத்தினைக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது.

அரசசார்பற்ற அமைப்புகளிற்கான தேசிய செயலக்த்தின் இயக்குநர் சமன் தஸநாயக்க இதனைத்தெரிவித்துள்ளதுடன் இந்த புதிய சட்டத்தின் கீழ் பாதுகாப்பு அமைச்சின் கீழ் பதிவு செய்யாத அனைத்து அரச சார்பற்ற அமைப்புகளின் வங்கிக் கணக்குகளும் முடக்கப்படும். வெளிநாட்டு நிதியை பெற்றுக்கொள்வதும் தடைசெய்யப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

## மாணவர்கள்...

மாணவர்கள் தெரிவித்தனர்.

மன்னாரில் இருந்து காலை 7.20 மணிக்கு மடு நோக்கி புறப்படும் மேற்படி தனியார் பேருந்து உயிலங்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலைக்கு செல்வதற்காக சிறுநாவற்குளம், கள்ளிக்கட்டைக்காடு, நொச்சிக்குளம் ஆகிய கிராமங்களில் காத்திருந்த மாணவர்களை ஏற்றாது சில தினங்களாக சென்றுள்ளது. இதனால் நூற்றுக்கணக்கான பாடசாலை மாணவர்கள் பாட சாலைக்குச் செல்வதில் பாரிய அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வந்தனர்.இந்த நிலையில் நேற்றுக்காலை 7.20 மணியளவில் மன்னாரில் இருந்து மடுவிற்கு தனியார் பஸ் புறப்பட்டபோதும் மாணவர்களை ஏற்றாது சென்றுள்ளது. இந்நிலையில் உயிலங்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை மாணவர்கள் நூற்றுக்கணக்கானவர்கள் பேருந்தை உயிலங்குளம் சந்தியில் மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பின் மன்னார் பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்று மாணவர்களுடனும் ஆசிரியர்களுடனும் கதைத்து மாணவர்களை பாடசாலைக்கு அனுப்பி வைத்தனர். இதனால் சுமார் ஒரு மணித்தியாலம் தாமதத்தின் பின்பே பேருந்து மடுவை நோக்கிச் சென்றது.

# ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை

# அடுத்த அமர்வு மன்னாரில்




காணாமல்போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அடுத்தகட்ட சாட்சி விசாரணைகளுக்கான அமர்வை மன்னார் மாவட்டத்தில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ஆணைக் குழுவின் அங்கத்தவர்கள் கூடி அதற்கான திகதி தீர்மானிக்கப்படும் என ஆணைக்குழுவின் செயலாளர் எச்.டபிள்யூ. குணதாச தெரிவித்துள்ளார்.

கடந்த 5 ஆம் திகதி முதல் 8 ஆம் திகதி வரை முல்லைத்தீவு மாவட்டத்தில் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வுகள் இடம்பெற்றிருந்தன.

இதன்போது புதிதாக 389 பேரிடம் இருந்து முறைபாடுகள் கிடைத்திருந்ததாகவும் ஆணைக் குழுவின் செயலாளர் எச்.டபிள்யூ. குணதாச சுட்டிக்காட்டியுள்ளார்.

# தெற்கில் வைரஸ் தொற்று இரு முன்பள்ளிச் சிறுவர்கள் மரணம்

(கொழும்பு)

பத்தேகம மற்றும் வெலிவிட்ட பிரதேசங்களில் இரண்டு முன்பள்ளிச் சிறுவர்கள் உயிரிழநததை அடுத்து அப்பகுதியிலுள்ள 10 முன்பள்ளிகள் மூடப்பட்டுள்ளதாக பத்தேகம பிரதேச சபைத் தலைவர் றமரசிறி நாரங்கொட தெரிவித்தார்.

கடந்த 2 ஆம் திகதி இதயத்தை சுற்றியுள்ள பகுதிகளில் வைரஸ் நோய்தொற்றுக்கு உள்ளான சிறுவன் ஒருவன் உயிரிழந்தாக கராபிட்டிய வைத்தியசாலை வைத்தியர்கள் குறிப்பிட்டனர்.

8 ஆம் திகதி உயிரிழந்த மற்றுமொரு சிறுவனின் மரணத்திற்கான காரணங்களை அறிவதற்காக, சடலத்தின் பாகங்கள் இரசாயன பகுப்பாய்வு பரிசோதனைகளுக்காக பொரளையிலுள்ள ஆய்வுகூடத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# ஐக்கிய அரபு இராச்சியத்தில் இலங்கைப் பெண் பலி

ஐக்கிய அரபு ராஜ்ஜியத்தின் உம் அல் குவைன் பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் இலங்கையை சேர்ந்த 52 வயதான பெண் உயிரிழந்துள்ளார்.

அப் பிரதேசத்தில் உள்ள வீதியைக் கடக்க முயற்சித்த போது வேகமாக வந்த கார் ஒன்றில் மோதுண்டு அவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க் கிழமை இரவு இடம் பெற்றுள்ளது. வாகனத்தை செலுத்திச் சென்ற 58 வயதான சாரதி வீதியில் குறித்த பெண்ணும் அவரது நண்பரும் இருப்பதை அவதானிக்கவில்லை என பொலிஸார் குற்றம் சுமத்தியுள்ளனர்.

பொலிஸாரும், சிவில் பாதுகாப்பு படையினரும் இணைந்து விபத்துக்கு உள்ளாகி காருக்கு கீழ் கிடந்த பெண்ணை மீட்டு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியில் அவர் உயிரிழந்தார். பெண்ணின் நண்பரான 42 வயதான இலங்கையர் காயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சைக்கு பின்னர் வெளியேறியுள்ளார். மக்கள் வீதியை கடக்கும் போது வாகனத்தை செலுத்தி செல்லும் சாரதிகளின் அலட்சியம் காரணமாக விபத்துக்கள் ஏற்படுவதாக பொலிஸ் பேச்சாளர் மேஜர் ஓபய்ட் பின் படேல் தெரிவித்துள்ளார்.

# சிற்றூர்திகளில் பயணச்சீட்டுப் இயந்திரங்கள் கையளிப்பு



யாழ்.மாவட்டத்தில் தனியார் பயணிகளுக்கான ரிக்கற் இடும் இயந்திரங்களை யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம சிற்றூர்தி உரிமையாளர்களுக்கு நேற்று வழங்கிவைத்தார்.

யாழ்.மாவட்ட தனியார் சிற்றூர்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த இயந்திரங்கள் கடனடிப்படையில் பஸ் உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்ட. முதல் கட்டமாக வடமராட்சி கிழக்கு தனியார் சிற்றூர்திச் சங்கத்தைச் சேர்ந்த 4 பஸ் உரிமையாளர்களுக்கு இந்த இயந்திரங்கள் அரச அதிபர் வழங்கி இச் செயற்திட்டத்தை ஆரம்பித்துவைத்தார்.

ஒவ்வொன்றும் 46 ஆயிரம் ரூபா பெறுமதியான இந்த இயந்திரங்கள் எதிர்வரும் காலங்களில் சிற்றூர்த்திகள் அனைத்துக்கும் வழங்க ஏற்பாடுகள் செய்யவுள்ளதுடன் கட்டாயமாக்கவும் உள்ளதாக யாழ்.மாவட்ட தனியார் பேருந்து இணையத் தலைவர் கெங்காதரன் தெரிவித்தார். (இ,25)

# ஹஜ் பயணிகளின் பங்கீட்டில் முறைகேடுகள் அதிகம்

## உச்சநீதிமன்றம் தலையீடு

(கொழும்பு)

இலங்கைக்கு சவுதி அரேபிய அரசாங்கம் இந்த வருடத்தில் அனுமதித்துள்ள ஹஜ் பயணிகளின் எண்ணிக்கையை ஹஜ் பயண ஏற்பாட்டு முகவர்களிடையே பகிர்ந்தளிப்பதை தற்காலிகமாக நிறுத்தி வைக்குமாறு முஸ்லிம் கலாசாரத் திணைக்களத்திற்கு இலங்கை உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

செரெண்டிப் மற்றும் உம்ரா யாத்ரிகர்களின் சங்கத்தினால் தாக்கல் செய்த மனு ஒன்றை ஆராய்ந்த பின்னர் உச்சநீதிமன்றம் இந்த உத்தரவை வழங்கியது.

இந்த வருடம் இலங்கையில் இருந்து 2240 ஹஜ் பயணிகள் வருவதை சவுதி அரசாங்கம் அனுமதித்துள்ளது.

இந்த எண்ணிக்கையை ஹஜ் பயண ஏற்பாட்டு நிறுவனங்களிடையே பகிர்ந்தளிப்பதில் முறைகேடுகள் நடப்பதாக மனுவில் முறையிடப்பட்டுள்ளது.

அரசியல் தலையீடுகள் காரணமாக இந்த முறைகேடுகள் நடந்திருப்பதாக மனுவில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

பயண ஏற்பாட்டு நிறுவனங்களிடையே நேர்முகத் தேர்வு நடத்தி மதிப்பெண்களின் அடிப்படையில் பயணிகள் எண்ணிக்கையை பகிர்ந்தளிக்க வேண்டும் என்பது விதி என்று மனுதாரர்களில ஒருவரான முகமது விளக்கினார்.

ஆனால் தான் எடுத்த மதிப்பெண்ணை எடுத்த வேறு இரண்டு ஏஜெண்டுகளுக்கு கூடுதலான பயணிகள் எண்ணிக்கையை ஒதுக்கிவிட்டு தனக்கு குறைவாக ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மனுதாரர்களின் வாதத்தை பரிசீலித்த நீதிபதிகள், வரும் 14ஆம் திகதி வரை பகிர்ந்தளிப்பு பணியை நிறுத்திவைக்கவும், அன்றைய தினம் விளக்கம் தருமாறும் முஸ்லிம் கலாசாரத் திணைக்களத்திற்கு உத்தர விட்டுள்ளனர்.

உங்களுக்கான தினமுரசு நாளிதழ் வழங்கும்

மற்றுமோர் கல்வி வெளியீடு

வெளிவருகிறது

விடைகளுடன் க.பொ.த.(சா/த) வினாத்தாள்கள்

உயர்தரத்தைத் தொடர்ந்து நடைபெற இருக்கும் க.பொ.த. (சா/த)
பரீட்சைக்கான வினாக்களுடன் கூடியவிடைகள் வெளிவருகின்றது
கட்டுரையமைப்புத் தவிர்ந்த ஏனைய விடைகளை பயிற்சிக்காக
மாணவர்கள் பயன்படுத்தலாம். உங்கள் வெற்றிக்காக
தினமுரசு தரும் மற்றுமோர் வடிவமைப்பு இது

வெளிவரும் தினங்கள்

புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள்
1) ஞாயிற்றுக்கிழமை – தரம் – 5
2) செவ்வாய்க்கிழமை – தரம் – 5
3) வெள்ளிக்கிழமை – தரம் – 5

க.பொ.த. சாதாரணதர வினாத்தாள்
1) திங்கட்கிழமை
2) புதன்கிழமை
3) சனிக்கிழமை

சனிக்கிழமை – இவற்றிற்கான விடைகள்

# ஆண் குழந்தை கடத்தல் திருமலையில் பரபரப்பு

(திரகோணமலை)

திருகோணமலை மற்கோ பகுதியில் ஒன்றரை வயது ஆண் குழந்தையொன்று கடத்தப்பட்டுள்ளது.

குழந்தை நேற்று முன்தினம் மாலை கடத்தப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

சந்தேகநபருக்கும் கடத்தப்பட்ட குழந்தையின் குடும்பத்தினருக்கும் இடையில் ஏற்கனவே தனிப்பட்ட பிரச்சினைகள் நிலவிவந்துள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

எனினும், கடத்தப்பட்ட குழந்தை தொடர்பில் இதுவரை எவ்வித தகவல்களும் கிடைக்கவில்லை என பொலிஸார் குறிப்பிட்டனர்.

குழந்தை கடத்தப்பட்டமை தொடர்பில் திருகோணமலை தலைமையக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



வருகின்ற வருமானம் போதாதா?

20,000/= - 38,000/= க்கும் மேற்பட்ட சம்பளத்துக்கு நிரந்தரமான
தொழிற்சாலைகளான ஜேம், பிஸ்கட், சொக்லேட், ஐஸ்கிறீம், கிளவுஸ், சிமெந்து,
சீட், டயர் ஆகிய நூர் உற்பத்திக்கு பொருட்கள் பெக்கிங் பழுதுபார்த்தல்,
ஸ்டோர்ஸ் ஆகிய பிரிவுக்கு 18 - 55 வயதான ஆண், பெண் தேவை. சாப்பாடு,
பாதுகாப்பான தங்குமிட வசதி உண்டு. சிங்களம் கட்டாயம் இல்லை.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா முன்னுரிமை. தம்பதிகள், நண்பர்கள் ஒரே
இடத்தில் குழுக்களாக வருகின்ற தினமே சேர்த்துக்கொள்ளப்படுவர். (0775964299)
(C/3735)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 யூலை 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.